# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 330 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 05, வெள்ளிக்கிழமை 21.10.2016


## 2017 மொத்தச் செலவினத்தில்

# ஜனாதிபதிக்கு ரூ. 406 கோடி உயர்வு பிரதமருக்கு ரூ. 77 கோடி அதிகரிப்பு

### கல்வி, சுகாதாரத்துக்கு நிதி ஒதுக்கீடு குறைப்பு
### நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு நேற்றுச் சபையில் முன்வைப்பு

கொழும்பு, ஒக். 21
2017 ஆம் நிதி ஆண்டுக்கான அரசின் மொத்தச் செலவினத்தில் ஜனாதிபதி, பிரதமருக்கான செலவினங்கள் பெரும் அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளன. கல்விக்கான செலவினத்தில் பெருமளவுவெட்டிக்குறைக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் நிதி ஆண்டுக்கான அரசின் மொத்தச் செலவினம் தொடர்பான நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்காவால் நேற்றுச் சபையில் முதலாம் வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டது. பக். 04

## முன்னாள் இராணுவத் தளபதி விசாரிக்கப்பட்டார் நேற்று

கொழும்பு, ஒக். 21
போரை முடிவுக்குக் கொண்டு வந்த முன்னாள் படைத் தளபதிகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிருப்தி தெரிவித்திருந்த நிலையிலும், முன்னாள் பக். 21

## தெற்கு மீனவர்கள் கொக்கிளாயில் குடியேற்றம்

முல்லைத்தீவு, ஒக். 21
கொக்கிளாய், கொக்குத்தொடுவாயில் தங்கியுள்ள தென்பகுதி மீனவர்களை அந்த இடங்களிலேயே நிரந்தரமாகக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக் பக். 21

## ஜனவரியிலிருந்து வடக்குப் பாடசாலைகள் காலை 7.30க்கு ஆரம்பம்
### கல்விச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 21
எதிர்வரும் ஜனவரி தொடக்கம் வடக்கிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 1.30 மணிக்கு நிறைவடையும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பக்.06



## வடக்கில் இருப்பது
# ஆக்கிரமிப்பு இராணுவம்

### மக்கள் முறையிட்டனர் என்கிறார் ஐ.நா. அறிக்கையாளர் ரீட்டா

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 21
வடக்கு மாகாணத்தில் சிங்கள இராணுவத்தின் அதிகரித்த பிரசன்னத்தால் அவர்களை ஓர் ஆக்கிரமிப்பு இராணுவமாகவே வடக்கு மக்கள் பார்க்கின்றனர். அத்துடன் வடக்கு-கிழக்கு முழுவதிலும் இராணுவத்தினர் கண்ணுக்குப் புலப்படாமல் இப்போதும் செயற்பட்டுக் கொண்டிருக் பக். 23

## வடக்கு கேட்ட நிதியிலும் ரூ.10,000 மில்லியன் குறைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 21
வடக்கு அரசினால் அடுத்த ஆண்டு மூலதனச் செலவு மற்றும் மீண்டெழும் செலவுக்காக 32 ஆயிரம் மில்லியன் தேவை என்று கொழும்பு பக். 05

## வடக்குச் சட்டத்தரணிகள் நேற்று பணிப்புறக்கணிப்பு

### நீதிபதிகளுக்கு அவதூறு ஏற்படுத்தும் செய்திகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து

யாழ்ப்பாணம், ஒக். 21
வடக்கு மாகாணத்தில் உள்ள நீதிமன்றங்களில் முன்னிலையாகும் சட்டத் தரணிகள் நேற்று ஒரு நாள் அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். நீதித்துறை தொடர்பில் பக். 23

## வாள்வெட்டு கும்பலில் ஐவர் கைது



யாழ்ப்பாணம், ஒக். 21
வாள் வெட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் யாழ்ப்பாணம் கொக்குவிலில் நேற்றுமாலை 5 பேர் கைதுசெய்யப்பட்டனர். பக். 06

## 10 பேருக்கு எதிராக கடற்படை முறைப்பாடு
### மன்னாரில் சிப்பாய் தாக்கப்பட்டதற்கு

மன்னார், ஒக். 21
மன்னார் முத்தரிப்புத்துறை கிராமத்தில் திருட்டுச்சென்ற குற்றச்சாட்டில் கடற்படைச் சிப்பாய் பொதுமக்களால் தாக்கப்பட்ட நிலையில், சிப்பாயைத் தாக்கியதாகக் கடற்படையினர், கிராமத்தைச் சேர்ந்த 10 பேருக்கு எதிராகச் பக்.21



## பொறுப்புக் கூறியே தீரவேண்டும் அரசு
### அமெரிக்காவிடம் மீண்டும் வலியுறுத்தினார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஒக். 21
வன்னியில் இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசு பக். 06

## பொருளாதார வலயத்தால் மீண்டும் வந்தது குழப்பம்
### மதகுவைத்த குளத்தில் அமைக்க மக்கள் பிரதிநிதிகள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 21
பொருளாதார வலயத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த நிலையில், இடத் தெரிவு தொடர்பில் மீளவும் குழப்பம் பக். 23



## அநுராதபுரம் அம்மனை பார்வையிட்ட சிவசேனை

யாழ்ப்பாணம், ஒக். 21
அநுராதபுரத்தில் தாக்கப்பட்ட ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தை, சிவசேனை அமைப்பு நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டுள்ளது. அத்துடன் ஆலய மூலஸ்தானத்தில் வைத்துவாளால் வெட்டப் பட்ட நபருக்கு நிதி உதவி பக். 06




எமது கடன் வசதிகள் மூலம் நீங்களும் வளர்ச்சி பெறுங்கள்

- வீட்டுக் கடன்
- கல்விக் கடன்
- தனிநபர் கடன்
- வாகனக் கடன்
- லீசிங்
- வர்த்தகக் கடன்
- நடைமுறைக் கணக்கு
- சேமிப்புக் கணக்கு

உங்கள் வளர்ச்சிக்கு உதவி புரியும் சேவைகள் பற்றி மேலும் விபரங்களை அறிந்து கொள்ள...
24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000 | www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை தாக்கி சிப்பாய் சாவு

மட்டக்களப்பு, ஒக். 21
மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புணானைக் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர், காட்டு யானையின் தாக்குதலில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
புணானை இராணுவ முகாமில் கடமையாற்றும் பாணந்துறையைச் சொந்த இடமாகக் கொண்ட ரஞ்ஜித் திஸாநாயக்க என்பவரே உயிரிழந்தவராவார்.
தமது வழமையான பயிற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்த போது, காட்டுக்குள் இருந்து திடீரென்று வந்த காட்டு யானை குறித்த சிப்பாயைத் தாக்கியுள்ளது.
இதில் காயமடைந்த அவரை உடனடியாக வெலிக்கந்தை வைத்திய சாலையில் சேர்ப்பித்தபோதும், சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (கு)

# பொருளாதார உறுதிக்கு இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு முக்கியம்

## பூகோள பொருளாதார உறுதிக்கு அது அவசியம் என்கிறது அமெ.




கொழும்பு, ஒக். 21
இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு, பூகோள பொருளாதாரத்தை உறுதித் தன்மையுடன் வைத்திருப்பதற்கு மிகவும் முக்கியமானது என்று அமெரிக்கா தெரிவித்தது.
'இந்து சமுத்திரத்தின் கடல்சார் பாதுகாப்பானது, இந்தியா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் ஒன்றுடன் ஒன்று ஒத்துழைத்துச் செயற்படும் திறனிலும் அமெரிக்கா போன்ற பங்காளி நாடுகள் சுதந்திரமான கப்பற் பாதைகள் போன்ற அனைத்துலக கடல்சார் நெறிமுறைகளுக்கு ஆதரவு வழங்குவதிலும் தங்கியுள்ளது' இவ்வாறு தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் பிரதி உதவி இராஜாங்கச் செயலர் மான்பிரீத் சிங் ஆனந்த் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மூன்று நாடுகளும் கடற்கொள்ளை மற்றும் போதைப் பொருள்கள், ஆயுதங்கள் மற்றும் ஆள்கடத்தல் போன்றவற்றைக் கட்டுப்படுவதற்காக எவ்வாறு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுகின்றன என்பதிலேயே இந்த நாடுகளின் உள்நாட்டு உறுதித் தன்மை தங்கியுள்ளது.
உலகின் வேறெந்த நாட்டிலும் இல்லாதவாறு உழைக்கும் மக்களை அதிகம் கொண்டுள்ள தென்னாசிய நாடுகள் தமது நாட்டின் பொருளாதாரத்தைச் சராசரி ஏழு சதவீதத்துக்கும் அதிகமாக மாற்றுமளவுக்கு மிகப் பெரிய பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளன.
அடுத்த 15 ஆண்டுகளில் 250 மில்லியனுக்கும் மேற்பட்ட தென்னாசியர்கள் நகரங்களை நோக்கி நகர்ந்து செல்வார்கள். கட்டுமானம் மற்றும் சேவைகளுக்கான பலமான கேள்விகள் இதனால் உருவாக்கப்படும்.
தென்னாசிய நாடுகள் தொடர்ந்தும் உலக நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பை அதிகரித்து வரும் அதேவேளையில், தென்னாசியாவானது தற்போதும் மிகக் குறைவான பொருளாதார ஒருங்கிணைப்பைக் கொண்ட உலக நாடுகளில் ஒன்றாக உள்ளது. தென்னாசியாவின் மொத்த வர்த்தகத்தின் ஆறு சதவீதத்துக்கும் குறைவானதும், இதன் முதலீட்டின் ஒரு சதவீதத்துக்கும் குறைவானதும் இந்தப் பிராந்தியத்திற்குள்ளேயே இடம்பெறுகின்றன.
வர்த்தகத்தில் ஏற்பட்ட தடைகளை நீக்குவதற்கான நகர்வுகளைத் தென்னாசியப் பிராந்திய நாடுகள் முன்னெடுக்கின்றன. இலங்கையுடன் இந்தியா பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கான உந்துதலையும் வழங்கி வருகின்றது. இதே போன்று இந்தியாவானது பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளுடனும் பொருளாதார ஒத்துழைப்பைப் பேணுவதால் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட தடைகள் நீக்கப்பட்டுள்ளது என்றார். (த-5)

# சம்பூரைக் கைவிட விரும்பாத இந்தியா

## சூரியசக்தி மின் திட்டத்தை அங்கு நிறுவுவதற்கு விருப்பம்

கொழும்பு, ஒக். 21
சம்பூரில் சூரியசக்தி மின் உற்பத்தித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு இந்தியா விருப்பம் வெளியிட்டுள்ளது. சம்பூரில் அமைக்கத் திட்டமிட்டிருந்த 500 மெகாவாட் அனல் மின் திட்டத்தை கைவிடுவதாக அரசு அறிவித்து ஒரு மாதம் கழித்து இவ்வாறு இந்தியா விருப்பம் வெளியிட்டுள்ளது.
கோவாவில் பிரிக்ஸ் பிம்ஸ்ரெக் மாநாட்டின் பக்க நிகழ்வாக, ஜனாதிபதி மைத்திரியுடன் கடந்த சனிக்கிழமை நடத்திய பேச்சுக்களின் போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த விருப்பத்தை முன்வைத்துள்ளதாக இந்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
அனல் மின் திட்டத்துக்குப் பதிலாக இயற்கை எரிவாயு மின்திட்டம் அல்லது சூரியசக்தி அல்லது காற்றாலை மின்திட்டத்தை அமைப்பது தொடர்பாகப் பரிசீலித்து வருவதாக அரசு தெரிவித்திருந்தது. 2020 ஆம் ஆண்டு 220 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இலக்குடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சூரிய சக்திக்கான போர் என்ற திட்டத்தைக் கடந்த மாதம் ஆரம்பித்து வைத்திருந்தார். 2025 ஆம் ஆண்டு ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை இந்தத் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்ய முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.
இலங்கை புதுப்பிக்கத்தக்க சக்தியின் பக்கம் திரும்பியுள்ளதையடுத்தே, சம்பூரில் சூரிய சக்தி மின் திட்டத்தை அமைக்க இந்தியா முன்வந்துள்ளது. (த-5)

# பழைய பதவிக்கு தில்ருக்சி

கொழும்பு, ஒக். 21
லஞ்ச, ஊழல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகிய தில்ருக்சி டயஸ் விக்ரமசிங்க மேலதிக சொலிஸிட்டர் ஜெனரலாக நேற்றைய தினம் பதவியேற்றுக் கொண்டார்.
லஞ்ச, ஊழல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்க முன்னர் அவர் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரலாகக் கடமையாற்றியிருந்தார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிதிமோசடி பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுக்களை கடுமையாக விமர்சித்திருந்தார். அரச நிறுவனங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டால் கடுமையான நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் ஜனாதிபதி எச்சரித்திருந்தார்.
ஜனாதிபதியின் உரையின் பின்னர் லஞ்ச, ஊழல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்சி டயஸ் கடந்த 17 ஆம் திகதி தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்தார்.
கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக் கொண்டிருந்தார். லஞ்ச, ஊழல் ஆணைக் குழுவின் பிரதி பணிப்பாளர் நாயகமான சுனேத்ரா ஜயசிங்கவை பதில் பணிப்பாளர் நாயகமாக நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)



# கிழக்குத் தமிழ் இலக்கிய விழா மட்டக்களப்பில் நேற்று ஆரம்பம்

மட்டக்களப்பு, ஒக். 21
கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா நேற்றுக் காலை மட்டக்களப்பில் கோலாகலமாக ஆரம்பமானது.
மட்டக்களப்பு கல்லடி உப்போடை விபுலானந்தர் சமாதியில் நடைபெற்ற வணக்க நிகழ்வைத் தொடர்ந்து தமிழ் இலக்கிய விழா ஆரம்பமானது.
கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி தலைமையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள மூவினங்களின் பாரம்பரிய கலை, கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் வகையில் கலாசாரப் பவனி கல்லடியில் இருந்து ஆரம்பமானது.
இந்த தமிழ் இலக்கிய விழா மூன்று தினங்கள் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இரண்டு நாள்கள் நடைபெறவுள்ள ஆய்வரங்கில் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கலை இலக்கியத்துடன் தொடர்புடைய பேராளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொள்வார்கள்.
தினமும் காலை நிகழ்வாக ஆய்வரங்குகள் நடைபெறும். பிற்பகல் நான்கு மணி தொடக்கம் ஏழு மணி வரை கலை, கலாசார நிகழ்வுகள் நடைபெறும். (இ)

# சிவகாசி பட்டாசு ஆலையில் தீ 9 பேர் சாவு: பலருக்குக் காயம்

சென்னை, ஒக். 21
தமிழ் நாட்டில் சிவகாசி அருகேயுள்ள பட்டாசுத் தொழிற்சாலையில் நேற்றுப் பிற்பகல் ஏற்பட்ட தீ விபத்தில் 9 பேர் உடல் கருகிச் சாவடைந்தனர்.
பட்டாசுத் தொழிற்சாலையின் சேமிப்புக் கிடங்கிலிருந்த பட்டாசுகளை வாகனமொன்றில் ஏற்ற முற்பட்ட வேளையிலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.
தீ மிக விரைவாகப் பரவியதால் 9 பேர் உடல் கருகிச் சாவடைந்தனர். முப்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். அவர்களில் பலரது நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. 30 தீயணைப்புப் படையினரின் சில மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.
தொழிற்சாலையின் உரிமையாளர் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காதமையே விபத்துக்குக் காரணம் என முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்தது. பொலிஸார் தொடர்ந்தும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (த-ம-ரி4)



# பெண் பொலிஸ் உடையில் நடமாடிய தமிழ் இளைஞர்

## நுவரெலியாவில் கைதானார்

பெண் பொலிஸ் உடையில் இருந்த தமிழ் இளைஞரை நுவரெலியா புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். கேகாலையைச் சேர்ந்த 21 வயதான இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.
நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் நுவரெலியா பஸ் நிலையத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் பெண் பொலிஸ் ஒருவர் நடமாடிவருவதாகக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அங்குசென்ற புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்டவரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைக்கு உட்படுத்திய போது அவர் ஒரு ஆண் என்பது தெரிய வந்துள்ளது.
இவரிடம் தேசிய அடையாள அட்டையோ, எந்த ஒரு ஆவணமோ இல்லாத நிலையில், விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளதாகத் தெரிவித்தனர். (த-43-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் மீது மைத்திரிபால கடும் அதிருப்தி

## வெல்கம எம்.பியின் தோட்டத்தில் தேடுதல் நடத்தியதற்கு

அரசுக்கு சொந்தமான குண்டு துளைக்காத வாகனங்கள் இரண்டினை மறைத்து வைத்துள்ளதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவின் தோட்டத்தைச் சுற்றிவளைத்து சோதனையிட்டமை முறையற்ற செயல்.

இவ்வாறு பொலிஸாரின் நடவடிக்கை மீது அதிருப்தி வெளியிட்டார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.இது தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்ததாவது:

அரசுக்கு சொந்தமான வாகனங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக யாராவது தகவல் வழங்கினால் இவ்வாறான குழந்தைத்தனமான செயற்பாடுகளை மேற்கொள்ளாமல், அவற்றினை கண்டுபிடிப்பதற்கு தேவையான தொழில்நுட்பங்கள் உள்ளன. புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தில் இதற்கான உபகரணங்கள் உள்ளன.

இவ்வாறான செயற்பாட்டினை குற்றப்புலனாய்வு பிரிவு மேற்கொண்டதா? அல்லது நிதி மோசடி விசாரணை பிரிவு மேற்கொண்டதா? என்பது குறித்து எனக்கு தெரியாது. எனினும் இதனால் பொலிஸார் சேறு பூசிக் கொண்டனர்.

இறுதியில் இவ்வாறான செயற்பாடுகள் மக்களின் நகைப்புகுரியதாக மாறிவிடும்- என்றார். (வ-5)

# மத்திய மாகாணத்துக்கே அடுத்த ஆண்டு அதிகளவு நிதி

யாழ்ப்பாணம், ஒக். 21

அடுத்த நிதி ஆண்டுக்கு மத்திய மாகாணத்துக்கே அதிகளவி லான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணம் நிதி ஒதுக் கீட்டில் மூன்றாவதாக உள்ளது.

2017ஆம் நிதி ஆண்டுக்கான அரசின் மொத்தச் செலவினம் தொடர்பான நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்காவால் நேற்றுச் சபையில் முதலாம் வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

இதில் மத்திய மாகாணத்துக்கு ரூபா 24 ஆயிரத்து 712 மில்லிய னும், வடமேல் மாகாணத்துக்கு ரூபா 23 ஆயிரத்து 877 மில்லிய னும், வடக்கு மாகாணத்துக்கு ரூபா 22 ஆயிரத்து 94 மில்லிய னும், சப்பிரகமுவ மாகாணத்துக்கு ரூபா 21 ஆயிரத்து 659 மில்லியனும், தென் மாகாணத் துக்கு ரூபா 21 ஆயிரத்து 400 மில்லியனும், கிழக்கு மாகாணத்துக்கு ரூபா 20 ஆயிரத்து 103 மில்லியனும், ஊவா மாகாணத்துக்கு ரூபா 18 ஆயிரத்து 220 மில்லியனும், மேல் மாகாணத்துக்கு ரூபா 16 ஆயிரத்து 156 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (த-5)

# மெல்லக்கற்கும் மாணவர்களின் கல்விநிலையில் முன்னேற்றம்

## வேள்ட்விசன் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஒக்.21

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 543 மெல்லக்கற்கும் மாணவர்களில் 255 மாணவர்கள் உடனடி மாற்றம் பெறக் கூடிய நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். அவர்களின் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தியது பெருவெற்றியாகும்.

இவ்வாறு வேள்ட்விசன் நிறுவன கல்வித்திட்ட இணைப்பாளர் எஸ்.வென்சஸ் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டுக்கான வேள்ட்விசன் நிறுவனத்தின் அபிவிருத்தி முன்மொழிவுகள் தொடர்பான திட்டங்கள் தெரிவு தொடர்பாக அண்மையில் இடம் பெற்ற கூட்டத்தின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: '2016ஆம் ஆண்டில் சிறுவர்களின் கல்வி, போசாக்கு, ஆன்மிகம், சிறுவர் உரிமை ஆகிய துறைகளில் மாணவர்களை மையப்படுத்தியதாக பல்நோக்கு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன் மூலம் பாடசாலைகளில் மாணவர்களின் நிலைகளில் துரித முன்னேற்றம் இனம் காணப்பட்டது.

இதற்கேற்ப 8 பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக நிகழ்ச்சித்திட்டமிடலில் ஆயிரத்து 36 மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

14 சிறுவர் கழகங்கள் உருவாக்கப்பட்டன. சிறுவர்களுக்கான வீட்டுத்தோட்டம், சிறுவர் தலைமைத்துவம், சிறுவர் ஆன்மிகம் தொடர்பாகவும் அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டப்பட்டது –என்றார்.

இந்தக் கூட்டத்தில் வலி. மேற்கு பிரதேச அபிவிருத்திக்கான 2017ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் எந்தத் திட்டத்துக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தை முன்னிறுத்தியதுடன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், சமூகமட்டப் பிரதிநிதிகள், சுகாதார வைத்தியஅதிகாரிகள், உள்ளூராட்சி சபை அலுவலர்கள் ஊடாகவும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. மற்றும் வலி.மேற்கில் வேள்ட்விசன் நிறுவனம் 2016ஆம் ஆண்டில் கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம் உள்ளிட்ட துறைகளில் மக்கள் பயனடையக்கூடிய திட்டங்களும் முன்னிறுத்தப்பட்டது. (வ-ரி, 50)

# வலயக் கல்வி அலுவலகத்தில் மின்னொழுக்கு

வவுனியா, ஒக். 21

வவுனியா தெற்கு கல்வி வலய அலுவலக கணக்காளர் கிளையில் நேற்று மின்னொழுக்கு ஏற்பட்டதனால் சில ஆவணங்கள் எரிந்து நாசமாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை மின்விசிறியின் உட்பாகத்தில் மின் கோளாறு ஏற்பட்டு தீப்பற்றியது. அதனையடுத்து மின்விசிறியின் ஒருபாகம் விழுந்து எரிந்ததனால், அந்த இடத்தில் காணப்பட்ட சில ஆவணங்கள் தீப் பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக விரைந்து செயற்பட்ட அலுவலர்கள் தீயை அணைத்தனர். பின்னர் அந்த இடம் துப்புரவு செய்யப்பட்டு வழமைபோன்று பணிகள் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4,402)

# நிறுவுனர் தின விழா

தென்மராட்சி, ஒக். 21

மட்டுவில் கமலாசனி வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வும் நிறுவுநர் தின நிகழ்வும் எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.1.45 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அதிபர் ஐ.தேவராஜன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வித்தியாலய பழைய மாணவனும் பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்கல் முகாமையாளருமான கா.கோபால கிருஷ்ணன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசனும் கௌரவ விருந்தினர்களாக வேள்ட் வின் நிறுவனத் திட்ட இணைப்பாளர் சி.குகன் ஓய்வுநிலை அதிபர் நா.நல்லதம்பி ஓய்வுநிலை ஆசிரியர்களான திரு, திருமதி தர்மலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

வித்தியாலய நிறுவுநர் உரையை யாழ்.பல்கலைக் கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளர் திருமதி சஜிகரன் சிவரூபி நிகழ்த்துவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

# உள்ளூராட்சி அரசியலில் பெண்களின் பங்களிப்பு குறித்த கலந்துரையாடல்

உள்ளூராட்சி அரசியலில் பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்துதல் எனும் தொனிப் பொருளிலான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்டச் செயல்கத்தில் நேற்று நடத்தப்பட்டது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கருத்தரங்கு கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் சிஹாஜினி விஜயசுந்தர தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பெண்களின் அரசியல் பிரவேசம் குறைவதற்கான காரணங்கள், அரசியல் பிரவேசத்தை அதிகரிப்பதற்கு முன்னெடுக்கக் கூடிய செயற்றிட்டங்கள் போன்றன கலந்துரையாடப்பட்டன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மேலதிக மாவட்டச்செயலாளர் சத்தியசீலன், மாவட்ட உதவிச் செயலாளர் பிருந்தாகரன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற மேல் மாகாண உள்ளூராட்சி திணைக்கள உதவிஆணையாளர் தர்மசிறி நாணயக்காரவும் கலந்துகொண்டனர். (ற-21,35)

# மாணவர்களின் பாதணி விவகாரம்; அதிகாரிகள் இன்று நேரில் ஆராய்வர்

கிளிநொச்சி, ஒக். 21

கிளிநொச்சி, பாரதிபுரம் மகா வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சம்பவத்தை நேரில் ஆராயுமாறு அதிபர் விடுத்த கோரிக்கையினையடுத்து வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் தலைமையிலான குழுவினர் இன்று நேரில் சென்று ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி, பாரதிபுரம் மகா வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலைக்குச் சப்பாத்துகள் இன்றி சாதாரண பாதணி அணிந்து சென்ற மாணவர்களை வாசல் கதவோரம் கழட்டி விடுமாறு அதிபர் பணித்தமையினால் மாணவர்கள் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்தவிடயம் ஊடகங்களிலும் வெளிவந்த நிலையில் கல்வி அதிகாரிகளால் அதிபரிடம் விளக்கம் கோரப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் மாணவர்களைத் தடி கொண்டு தண்டிக்காது, செயல்பாடு மூலமாக மாற்றும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட செயலை நேரில் ஆராயுமாறு அதிபர் விடுத்த கோரிக்கையையடுத்து இன்றைய தினம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் தலைமையிலான குழுவினர் நேரில் சென்று ஆராயவுள்ளனர்.

இந்தக் குழுவில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் , வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருடன் கிளிநொச்சி வலயப் பணிப்பாளர் மற்றும் பெற்றோர் நலன் விரும்பிகளும் அழைக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (வ-101)

கடை இடமாற்றம்

164 ஸ்ரான்லி வீதியில் இயங்கும் எங்கள் ஸ்தாபனமான ஹரிணி காட்வெயர் அன் மோட்டோர்ஸ் (21.10.2016) இன்றிலிருந்து இல.281, கே.கே.எஸ் வீதியில் இயங்கும் என்பதை எமது வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உரிமையாளர்-ஸ்ரீபாதன் 021 2222850

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு எண் 1307
சீட்டிழுப்பு திகதி 2016.10.20
வெற்றி இலக்கங்கள்
23 48 56 61 B
ரூ. 27,352,540/=

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 565
சீட்டிழுப்பு திகதி 2016.10.20
வியாழக்கிழமை
29 48 52 56 U
சுப்பர் ஜக்பொட்
ரூ.56,161,640/=

முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

1st Happy Birthday

இத்தாலியை வசிப்பிடமாகக் கொண்ட சமந்தா - கனி தம்பதியரின் அன்புச் செல்வங்களான

செல்வன் அனாமிகன் செல்வி அனாமிகா

21.10.2015



ஆண்டொன்று ஆனதென்று
ஆடி நீவிர் மகிழ்திருக்க
தேடி ஒரு கவிதை வடித்து
தெள்ளு தமிழில்
வாழ்த்துகின்றோம்.

வையத்தில் வல்லவராய்
வாழ்வினில் இனியவராய்
எல்லோருக்கும் நல்லவராய்
என்றும் இன்புற்றிருக்க
எம் இனிய நல்வாழ்த்துக்கள்

வாழ்த்துவோர்
அப்பப்பா-குணம்,அப்பம்மா-பூவா
மாமா-கமல்,அத்தை-தர்ஷா
மச்சான்மார்-வைஷ்ணவி, டிலக்ஸ்ணவி,மச்சான்-நிந்துஷன்
(c 25961)(16 19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநர் பேரவையின் சிறப்புப் பொதுக் கூட்டம் 23.10.2016 அனைத்து வழிபடுநர்பேரவை உறுப்பினர்களுக்குமான அறிவித்தல்

01. இக் கோயிலின் முகாமைத்திட்டத்தின் விதி 10 (1) (ஏ) பின்வருமாறு கூறுகின்றது.

விதி -10

01) பின்வரும் நிலைமைகளின் போது ஒரு சிறப்புப் பொதுக்கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

ஏ) கோயிலின் அறங்காவலர்சபை சமர்ப்பித்த ஆண்டறிக்கையை அத்துடன் அல்லது ஆண்டுக்கணக்கறிக்கையை, ஆண்டுப் பொதுக்கூட்டம் நிராகரித்து உள்ளவிடத்து, அறங்காவலர்சபைக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதைப் பரிசீலனை செய்வதற்காக.

பீ).............

சீ) .............

02. 30.04.2016 இல் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் 2013 ஆம் ஆண்டுக்கும் , 2014 ஆம் ஆண்டுக்கும் உரிய ஆண்டுக்கணக்கறிக்கைகள் வழிபடுநர் பேரவையினரால் நிராகரிக்கப்பட்டன. குறிப்பாக 2013 ஆம் ஆண்டில் செய்யப்பட்டன வென்று கூறப்பட்ட சட்டச் செலவு ரூபா 694500.00/= ஐயும் 2014 ஆம் ஆண்டில் செய்யப்பட்டதென்று கூறப்பட்ட சட்டச் செலவு ரூபா 17000.00/= ஐயும் கணக்காய்வாளர்கள் ஆலயந் தொடர்பான செலவாக ஏற்றுக் கொள்ள முடியாததனால் அச் செலவின் தன்மை பற்றிய விவரம் தம்மால் சோதனையிடப்படவில்லை என கூறியிருப்பதனை வழிபடுநர்பேரவை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி, அச்செலவுகள் தொடர்பான ஆவணங்களை பரிசீலிப்பதற்காக சிறப்புப் பொதுக்கூட்டம் ஒன்றைக்கூட்டி அதில் அந்த விவரங்களைச் சமர்ப்பிக்கும்படி நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டனர்.

03. இந்த கோரிக்கைக்கு அமைவாகவே இந்த சிறப்புப் பொதுக்கூட்டம் கூட்டப்படுகின்றது. ஆகவே இதில் கலந்து கொண்டு உரிய முடிவுகளை எடுக்க உதவ வேண்டியது அனைத்து உறுப்பினர்களினதும் கடமையாகின்றது. அனைத்து உறுப்பினர்களுக்கும் முழுமையான நிகழ்ச்சி நிரலுடன் கூடிய அழைப்புக்கடிதங்கள் (கூட்ட அறிவித்தல்கள்) ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனவே தவறாது இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**அன்னையின் பணியில்**
**பொ. அன்பரசன்**
**செயலாளர்**
**அறங்காவலர் சபை**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு**



## வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை கேள்வி அறிவித்தல் - 2017

**நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை, கோழி இறைச்சிக்கடை / சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை நடத்துதல்**

வவுனியா தெற்கு. தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை, கோழி இறைச்சிக்கடை / சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக் கடை, மீன்கடை போன்றவற்றை 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிவரை நடத்துவதற்கான கேள்விகள் 2016.11.16 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் **2016.11.15** ஆம் திகதி பிற்பகல் 3 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி '**செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா**' என்ற முகவரிக்கும். ஒரு பிரதி "**பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், " பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்காவீதி, வவுனியா**" என்ற முகவரிக்கும் இடப்பட்டு. பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும்.குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்துக்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2016.11.16ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமாக இருக்க அனுமதிக்கப்படும்.

நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, கோழி இறைச்சிக்கடை, மீன்கடைகளுக்கு மாதாந்தம் ரூபா.2.000/= வாடகையாகவும். சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடைகளுக்கு மாதாந்தம் ரூபா 1.500/= வாடகையாகவும் செலுத்தப்படல் வேண்டும். மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகை.மாதாந்த வாடகை என்பவற்றுடன் அரசினால் விதிக்கப்படும் VAT, NBT என்பவற்றைச் செலுத்துதல் வேண்டும். கேள்வி தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் வழங்கப்படும்.

| கடை விவரம் | ஒருவருடத்துக்குரிய குறைந்த கேள்வித் தொகை அரசினால் விதிக்கப்படும் VAT, NBT நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப் படிவக்கட்டணம் அரசினால் விதிக்கப்படும் VAT, NBT நீங்கலாக |
|---|---|---|---|
| நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை. | 477,600.00 | 25,000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் மீன்கடை. | 775,550.00 | 25,000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் கோழியிறைச்சிக்கடை. | 426,100.00 | 25,000.00 | 1,000.00 |
| சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை. | 367,500.00 | 25,000.00 | 1,000.00 |
| சாளம்பைக்குளம் மீன்கடை. | 165,200.00 | 25,000.00 | 1,000.00 |

(C/25951) (11,18,21)

**சுகந்தி கிஷோர்,**
**செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை**

**நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா.**


## ஜனாதிபதிக்கு...

இதில் 2016 ஆம் ஆண்டில் ஜனாதிபதிக்கான செலவினமாக 239 கோடியே 20 லட்சத்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், 2017 ஆம் ஆண்டுக்கான செலவினமாக 406 கோடியே 6 இலட்சத்து 4 ஆயிரம் ரூபா வால் அதிகரிக்கப்பட்டு 645 கோடியே 26 இலட்சத்து 79 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

2016 இல் பிரதமருக்கான செலவினமாக 48 கோடியே 62 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2017 ஆம் ஆண்டுக்கான செலவினமாக 125 கோடியே 52 இலட்சத்து 71 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதமருக்கான மொத்த செலவினம் 76 கோடியே 90 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு கல்விக்கான ஒதுக்கீடு பெருமளவில் குறைக்கப்பட்டுள் ளது. 2016 இல் கல்விக்காக 18 ஆயிரத்து 597 கோடியே இலட்சத்து 30 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2017 ஆண்டுக்காக 7 ஆயிரத்து 694 கோடியே 37 இலட்சத்து 19 ஆயிரம் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. 2016 இல் பாதுகாப்புச் செலவினமாக 30 ஆயிரத்து 665 கோடியே 78 இலட்சத்து 24 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2017 க்கு 28 ஆயிரத்து 404 கோடியே 43 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாவாக ஒதுக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடும் குறைக்கப்பட்டுள்ளது. 2016 இல் 17 ஆயிரத்து 407 கோடியே 79 இலட்சத்து 98 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2017 ஆண்டுக்காக 16 ஆயிரத்து 97 கோடியே 18 இலட்சத்து 29 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(த-5-10)


### ஆறுவருட கால உத்தரவாதத்துடன் விற்பனை செய்த மரத்தளபாட விற்பனை நிலையம்



மொறட்டுவ தளபாட உற்பத்தியாளரின் அதி சிறந்த வீட்டுத் தளபாடங்கள். இல.54,கந்தர்மடம், பலாலி வீதியில் விற்பனை செய்யப்படுகின்றது. உங்களுக்குத் தேவையான சகல தளபாடங்களும் தேக்கு மரத்தில் 6 வருடகால உத்தரவாதத்துடன் செய்து தரப்படும். மரத்துக்கு உத்தரவாதம் உண்டு.

077 632 3881



### British College of Higher Studies
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
A1 IELTS Life Skills
இப்பாட நெறியானது எளிதாகக் கற்கக் கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகிறது. 2015 புதிய விசா நடைமுறையின் கீழ் British High Commission இனால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 077 730 4545



### VACANCY

**Montessori Teachers**

*Qualification:*
AMI Montessori Course Completed

They should forward their CV to
**jaffna@bchs.lk**

021 222 4550 | 077 730 4545



### காணி விற்பனைக்கு

கோண்டாவில் செருக்கற்புலம் ஒழுங்கையில் அமைந்துள்ள ஆதனம் செருக்கற்புலம் நிலப்பரப்பு 8 குளி 13.8 உம், கிணறும் விற்பனைக்கு உண்டு. (J 5531) (16,17,19)

077 1177013, 077 3273125

### மணமகள் தேவை

1979இல் பிறந்த 8இல் செவ்வாய், 27 கிரக பாவம், பூச நட்சத்திரம், அரச தொழில் புரியும் மணமகனுக்கு அழகிய உத்தியோகமுடைய கொழும்பில் அல்லது தென்மராட்சியை வதிவிடமாகக் கொண்ட மணமகள் தேவை. (தூரக் தேவையில்லை.)

077 913 0082



## நகராட்சிமன்றம், சாவகச்சேரி பெறுகை அறிவித்தல்

01. தவிசாளர், பெறுகைக்குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறிப்பீடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. பெறுகைக்கு தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் பெறுகைதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமானதரத்தில் **வேலைகளுக்கான** இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

03. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் **நகராட்சிமன்றம், சாவகச்சேரியில் 24.10.2016** தொடக்கம் **04.11.2016** ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் மு.ப **9.00**மணிமுதல் **15.00** மணிவரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.**847.50/- (With VAT, NBT)** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

04. பெறுகை ஆவணங்களின் மூலப்பிரதியை 07.11.2016 ஆம் திகதி 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **தவிசாளர் / செயலாளர், நகராட்சிமன்ற பெறுகைக்குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி** எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். இணைப் பிரதி பிராந்திய **உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகைதாரர்கள் வேலைக்கான பெறுகை விபரத்தினை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் 07.11.2016 ஆம் திகதியன்று பி.ப 2.30 மணிக்கு **நகராட்சிமன்றம், சாவகச்சேரி** அலுவலகத்தில் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டபிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

05. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமைவதுடன் குறித்ததொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை மில்லியனில் (Vat, Tax நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | மீசாலை,அல்லாரை வரெல்லைவீதி புனரமைத்தல் | 0.887 | 03மாதம் | C8/C9 | 8,900. 00 |
| 2 | புதிய வீரபத்திரர் வீதி. புனரமைத்தல் | 0.738 | 03மாதம் | C8/C9 | 7,400.00 |
| 3 | தாமோதரம்பிள்ளை வீதி. தொடர்வேலை. | 0.688 | 03மாதம் | C8/C9 | 6,900.00 |
| 4 | சங்கம் வீதி. புனரமைத்தல் | 1.253 | 03மாதம் | C8 | 12,600.00 |
| 5 | நகராட்சிமன்றவேட்பேர் கூட மண்டபம் கண்ணாடைப் பிரிப்பு செய்தல் | 0.460 | 03மாதம் | C8 | 4,100.00 |

**தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி.** (C)(11,18,21) **20.10.2016**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், கொழும்பு அரசினால் 22 ஆயிரத்து 94 மில்லியன் ரூபா நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அரசுக்கு அடுத்த ஆண்டுக்கு 32 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா தேவை என்று கொழும்பு அரசிடம் கேட்கப்பட்டிருந்தது. இதில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மற்றும் குறித்தொதுக் கப்பட்ட நன்கொடைக்காக 10 ஆயிரத்து 200 மில்லியனும், மீண்டெழும் செலவுக்காக 22 ஆயிரம் மில்லியனும் கோரப்பட்டிருந்தது. நாடாளுமன்றத்தில் நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்க அடுத்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவை நேற்றுச் சமர்ப்பித்தார். அதில் வடக்கு மாகாண சபைக்கு அடுத்த நிதி ஆண்டுக்கு 22 ஆயிரத்து 94.851 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபை கொழும்பு அரசிடம் கோரிய நிதியில் 10 ஆயிரம் மில்லியன் குறைவாகவே ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத்தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

தினசரி காலை 8 மணி முதல் மாலை 6.00 மணிவரை

நாதன் இன்
394 1/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.(வெலிங்டன் சந்தி)
072 681 6681, 076 557 5394

பாராட்டி வாழ்த்துகின்றோம்



நயினாதீவு - 01
நாகபூசணி வித்தியாலய
மாணவி
செல்வி பிரணவி ஸ்ரீகரன்
2016 ஆம் ஆண்டு தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சையில்
164 புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்ததையிட்டு அவரை மனதார பாராட்டி வாழ்த்துவதோடு அவர் பல்கலையும் கற்று பட்டங்கள் பல பெற்று மென்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், தங்கை, தம்பி
நயினாதீவு - 05

யா/மந்துவில் றோ.க.த.க.பாடசாலை
பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை மாணவன்
செல்வன் இராமச்சந்திரன் அன்புஜன்
2016 தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டுவதுடன் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற
செ.நிதுஷா - 146, து.நிக்ஷாந்- 145,
வி.சீராளன் - 131, பூ.துவாரகன் - 119
ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
பாடசாலைச் சமூகம்.

SK
சிறிகுமரன் ரெக்ஸ்
தித்திக்கும் தீபாவளியை " சிறிகுமரன் ரெக்ஸ் " உடன் கொண்டாடி மகிழுங்கள்



Office wear
சாறி ரூபா 590/= இலிருந்து
(With Blouse)

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய சாறி, சல்வார் மற்றும் ஆடைத் தெரிவுகளை அதிரடி விலைகளில் பெற்றிட.

இச்சலுகை 19.10.2016 - 29.10.2016 வரை மட்டுமே.

சிறிகுமரன் ரெக்ஸ்
770, K.K.S. வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.

சொவ்ட்லொஜிக்கின் தீபாவளி சிறப்பு தள்ளுபடிகள்.



30% வரை தள்ளுபடிகள்
இலகு தவணை திட்டம்
விசேட சலுகைகள்
வட்டியின்றி செலுத்தும் முறை.
softlogic

Panasonic LED TV - 32"
TH-32D400
ரூ. 15,000/- விலைக்கழிவு
ரூ. 49,999/-
ரூ.2,690 x 14 மாதாந்தம்

SAMSUNG LED TV - 32"
UA32FH4003
ரூ.15,000/- விலைக்கழிவு
ரூ. 49,999/-
ரூ.2,690 x 14 மாதாந்தம்

DELL
DELL 3558 CORE I3
ரூ. 10,000/- விலைக்கழிவு
4 YEARS WARRANTY
ரூ. 69,999/- ரூ.3,971 x 15 மாதாந்தம்

acer ES1-531
ரூ. 10,000/- விலைக்கழிவு
இலவசம்
A4 Colour Printer
ரூ. 54,999/-
ரூ.3,600 x 14 மாதாந்தம்

SAMSUNG RR19
ரூ. 46,999/-
ரூ.2,350 x 17 மாதாந்தம்

SAMSUNG RT27JARMASE
ரூ. 9,000/- விலைக்கழிவு
ரூ. 86,999/-
ரூ.4,300 X 17 மாதாந்தம்

Midea MAS70-S140STCL
ரூ. 2,500/- விலைக்கழிவு
ரூ. 46,999/-
ரூ.2,690 x 14 மாதாந்தம்

Whirlpool WWT-70X
ரூ. 1,500/- விலைக்கழிவு
ரூ. 27,999/-
ரூ.1,570 x 14 மாதாந்தம்

Panasonic Mixer Grinder - MXAC400
ரூ. 13,499/-
ரூ. 4,499/-
ரூ. 13,999/-

Panasonic
13000 BTU Inverter Type
ரூ. 116,999/-

| Puthukkudiyiruppu | Thirunelvely | Nelliady |
|---|---|---|
| 021 206 1571 | 021 567 1118 | 021 567 2148 |
| 077 505 7870 | 077 834 7733 | 077 372 5604 |
| Jaffna | Chunnakam | Cargills Square |
| 021 567 1108 | 021 567 2148 | 021 567 8989 |
| 077 799 1283 | 077 892 8168 | 077 739 |

Panasonic SAMSUNG Candy NOKIA

இன்று முதல்
யாழ் நகரில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட விசாலமான காட்சியறையை



ROYAL
Collection

இல. 223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின்புறமாக)



ஆண்கள் / பெண்களுக்கான
ஆடைத்தினுசுகள் மற்றும்
அழகு சாதனப்பொருள்கள்



தீபத்திருநாளை முன்னிட்டு விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படும்.

ROYAL COLLECTION
NO.223, POWER HOUSE ROAD
(Behind Jaffna Teaching Hospital) T.P : 021 2225573

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்

மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.00 a.m / 1.00 p.m / 4.00 p.m / 7.00 p.m Fri/Sat 9.30 p.m
சில்வர் 10.15 a.m / 1.15 p.m / 4.15 p.m / 7.15 p.m Fri/Sat 9.30 p.m
ப்ரொன்ஸ் 10.30 a.m / 1.30 p.m 4.30 p.m / 7.30 p.m Fri/Sat 9.30 p.m
விசாரணை 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

மெடல் ரூபாய் 200/= இருந்து
சீல்ட் ரூபாய் 250/= இருந்து
பச் ரூபாய் 45/= இருந்து
ரை ரூபாய் 75/= இருந்து
மக் ரூபாய் 300/= இருந்து
கருங்கல்லில் பெயர் பொறிக்க கல்லுடன் ரூபாய் 2000/=
எல்ரடி - எம்போஸ் - எச்சிங் பெயர்ப்பலகைகளுக்கும்
எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்
0777 110 610

## அநுராதபுரம்...

யும் வழங்கப்பட்டுள்ளது. சேதமடைந்த சிலைகளை மீளவும் அமைத்துக் கொடுக்கவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் மீது கடந்த 10ஆம் திகதி இரவு தாக்குதல் நடத்தப்பட்டது. இதன் போது ஆலயச் சிலைகள் சேதமாக்கப்பட்டிருந்தன. அத்துடன் ஆலய மூலஸ்தானத்தில் வைத்து இளைஞர் ஒருவரையும் வாளால் வெட்டியிருந்தனர். 7 பேர் கொண்ட குழுவினரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர் என ஆலய நிர்வாகத்தினர் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்த நிலையில் சிவசேனைக் குழு அநுராதபுரத்துக்கு நேற்று முன்தினம் சென்றது. சுவாமி ஜாக்கிரத சைதன்யர்சின் மயானந்தர், முன்னாள் மனித உரிமை அலுவலர் மோகன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவநேசன், சட்ட மாணவர் யசோதரன், சிவசேனையின் தலைவர் மறவன் புலவு சச்சிதானந்தம் ஆகியோர் இந்தக்குழுவில்அடங்கியிருந்தனர்.

வடமேல் மாகாண ஆளுநரின் செயலர், மேலதிக மாவட்டச் செயலர், அநுராதபுரம் நீராவிப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி, இந்து பௌத்த மதகுருமார் ஆகியோருடன் சந்திப்பு நடத்தப்பட்டது.

பின்னர் தாக்குதல்சம்பவம் நடைபெற்ற நீராவிப் பகுதிக்குச் சென்று, வாளால் வெட்டு வாங்கிய நபருக்கு, யாழ்ப்பாண மருத்துவர்களால் வழங்கப்பட்ட 40 ஆயிரம் ரூபா பணம் சிவசேனை அமைப்பினால் கையளிக்கப்பட்டது. உடைந்த சிலைகளை மீளமைத்துத் தருவதாக சிவசேனை அமைப்பு இதன்போது உறுதியளித்துள்ளது.

(த-5-102)

## பொறுப்புக்...

பொறுப்புக் கூறியே ஆக வேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைத்தே தீரவேண்டும்.

இவ்வாறு அமெரிக்காவிடம் மீண்டும் வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைக் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு வலியுறுத்தினார் என்று இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு மற்றும் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்டது.

இதேவேளை, சம்பந்தனைச் சந்திப்பதும், அவரது கருத்துக்களைச் செவிமடுப்பதும் எப்போதும் தமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், தமது ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

(த-5)

## வடக்குப்...

செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். பாடசாலை உணவூட்டல் நிகழ்ச்சி பயன் விளைவு மதிப்பீட்டு பயிற்சிப்பட்டறை நிகழ்வு வவுனியாவில் நேற்றுகாலை ஆரம்பித்துவைக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:

காலையில் 7.30மணிக்கு பாடசாலை ஆரம்பமாவது கற்றலுக்கு உகந்த சூழலை தோற்றுவிக்கும். இந்த நடைமுறை வவுனியாவில் உள்ளது. அதேபோல் எல்லா மாவட்டங்களிலும் இதனைநடைமுறைப்படுத்துவது நல்லது. அடுத்த வருட ஆரம்பத்தில் இது நடைமுறைக்கு வரும். அதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. இந்தப் புதிய நடைமுறையினால் பாடசாலையில் உணவூட்டல் செயற்பாட்டின் அவசியம் பலருக்கு புரியும். தற்போது உணவூட்டல் இடம் பெறும் பாடசாலைகளில் காலையில் உணவு அருந்தாமல் வரும் மாணவர்களுக்கு உலக உணவுத்திட்ட நிறுவனம் மூலம் வழங்கப்படும் உணவு பெரிதும் பயனள்ளதாக அமைகிறது.

இன்று வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமன்றி அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகளும் காலை உணவு அருந்தாமல் வருகிறார்கள். அதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. வழங்கப்படும் உணவு கிராமப்புற மாணவர்களுக்கு மட்டுமல்ல நகர்புற மாணவர்களுக்கு பயன்படுகிறது. பரீட்சை பெறுபேற்றை அதிகரிப்பதற்கு இந்த உணவு உதவுகிறது. மாணவர்களுக்கு இந்த உணவு ஒரு முதலீடு. எதிர்காலத்தில் மாணவனின் தேக ஆரோக்கியம் கற்றல் பெறுபேறுகளையும் அதிகரிக்கச் செய்யும். அண்மையில் வெளிவந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் அதிகளவான மாணவர்கள் வவுனியா மாவட்டத்தை சேர்ந்தவர்களே பெற்றுள்ளனர். வெட்டுப்புள்ளிக்கு மேல் எத்தனை பேர் சித்தியடைகிறார்கள் என்பதையே எல்லோரும் நோக்குகிறார்கள்.

இன்று பலருக்கு வாசிப்பு பழக்கம் இல்லை. குறிப்பாக மாணவர்கள் பலர் புத்தகங்களை வாசிப்பதில்லை. ஆனால் நன்றாக தொலைக்காட்சிபார்க்கிறார்கள். வாசிப்புப் பழக்கத்தை தூண்டுவதற்கு நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதிகபெறுபேறுகளை பெற்று சாதனை படைக்கும் மாணவர்கள் நன்றாக புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை கொண்டுள்ளார்கள். எனவே மாணவர்களின் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை வளர்த்துவிட பெற்றோர்களும் ஆசிரியர்களும் கவனமெடுக்க வேண்டும்-என்றார்.

(வ-4,402)

## வாள்வெட்டு...

கைது செய்யச் சென்றபோது ஒருவர் தப்பியோடிவிட்டார். கைதானவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெவ்வேறு இடங்களில் வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ள போதும், முக்கிய சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. இந்தநிலையில், விசாரணைகளிலிருந்து கொக்குவிலில் 2 இடங்களில் வைத்து 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஓரிடத்தில் 4 பேர் நின்றனர். அவர்களைப் பிடிக்கச் சென்றபோது ஒருவர் தப்பியோடினார். ஏனைய 3 பேரும் கைது செய்யப்பட்டனர். மற்றொரு இடத்தில் வைத்து 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வாள்வெட்டில் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பறக்கும்படை எனப்பெயரிடப்பட்ட பொலிஸ் குழு அவர்களைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. சில நாள்களாக யாழ்.நகர் உள்ளிட்ட பல இடங்களிலும் பொலிஸார் ரோந்தில் ஈடுபட்டுள்ளனர்.

(வ-4,101,39)

யாழ் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்பு யோகா பயிற்சிகள்
அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நலவாழ்விற்கு மனவளக்கலை யோகா
இடம்: யாழ் அறிவுத்திருக்கோயில்
காலம்: 22.10.2016 தொடக்கம் 27.10.2016
நேரம் : பி.ப 4.30 மணி
தலைமை
அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்
(மனவளக்கலை பேராசிரியர்)
பிரதம விருந்தினர்
திரு.ஐ.தயானந்தராஜா அவர்கள்
(அதிபர் யாழ் இந்துக் கல்லூரி)

வாழ்க வளமுடன்
பயிற்சிகள்
• காயகல்ப பயிற்சி
• எளிய முறை தியானப் பயிற்சிகள்
• எளியமுறை உடற்பயிற்சிகள்
• அகத்தாய்வுப் பயிற்சிகள்
பயிற்சிகளை வழங்குபவர்
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி S.இந்திரா அவர்கள்
உடல்நலம், உளநலம், உயிர்வளம் பெற மனவளக்கலை யோகா பயிற்சிகளை பயின்று பயன்பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(j 5559) (16 19)
யாழ் அறிவுத்திருக்கோயில், இல.81 பிறவுன் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
யாழ் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை.
T.P: 021 2222772

கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலை ஆசிரியர்
திரு.நா.மயூரன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
மனோன்மணி
நாகலிங்கம்

அவர்கள் 19.10.2016 புதன் கிழமை அன்று காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
பாடசாலை சமூகம்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.
(c 25960) (16,19)

ஓடுகள் விற்பனைக்கு
* நந்தி ஓடுகள்
* ஸ்ரார் ஓடுகள்
* குத்து விளக்கு ஓடுகள் தேவையானோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- 077 482 8248

ACCOUNTANT தேவை
யாழில் உள்ள பிரபல நிறுவனங்களிற்கு கணக்காளர்கள் உடனடியாகத் தேவை.
இடங்கள்: வர்த்தக நிலையம் வைத்தியசாலை,பிரபல நிறுவனம்.
சம்பளம்: 15,000/= -20,000/=
தகைமை: G.C.E A/L வர்த்தகப் பிரிவில் தோற்றியவர்கள் முன்னனுபவம் விரும்பத்தக்கது.
வயதெல்லை: 30 வயதிக்குட்பட்ட பெண்கள்
விரும்புபவர்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளவும்.
(பதிவுக் கட்டணம் உண்டு) 10 am -4 pm.
WINSTAR JOB BANK
# 106, தபாற்பெட்டிச் சந்தி,
(j 5561) (16,19)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு
K.T.பிரசாத் பெருமையுடன் வழங்கும்
தென் இந்திய பேச்சாளர்கள் பங்கு பெறும்
சிறப்புப்பட்டிமன்றம்
நல்ல சிறார்களை உருவாக்க காரணம் தாயா ? தந்தையா ?

பேராசிரியர் சுந்தரவள்ளி சிறப்புப்பேச்சாளர்

நந்தலாலா பட்டிமன்ற நடுவர் சிறப்பு பேச்சாளர்

தனிக்கொடி எழுத்தாளர் பேச்சாளர் கறுப்புநிறத்தழகி (கொம்பன்) திரைபட பாடலாசிரியர்
அனுமதி இலவசம்
காலம் : நாளை (22.10.2016) மாலை 3 மணி
இடம் : யாழ். இந்துக்கல்லூரி சபாலிங்கம் அரங்கம்
தொடர்பு:076 7316565, 077 4803020
அனுசரணை: NLB NSB National Savings Bank Telecom Mobitel ceco ANDRA
(J5518) (17.19.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி சீரமைக்கக் கொட்டப்படும் கிரவல் மண் அளவில் மோசடி

## துணுக்காய் பகுதி மக்கள் சந்தேகம்

முல்லைத்தீவு, ஒக்.21

முல்லைத்தீவு, துணுக்காயில் கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபாதிட்டத்தின்கீழ்முன்னெடுக்கப்படும் வீதித் திருத்தத்துக்காகக் கொண்டுவரப்படும் கிரவல் மண்ணில் அளவு மோசடிகள் இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

இவ்வாறு கிராம அபிவிருத்திச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

துணுக்காய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் உள்ள யோகபுரம், பட்டுப்பூச்சி கிராமத்தில் இடம்பெறும் ஒரு கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்தின் கீழ் வீதிச் செப்பனிடல் பணிக்காக ஒரு கிலோ மீற்றர் அனுமதிக்கப்பட்டது. ஒரு கிலோ மீற்றருக்கும் 320 கியூப் மண் கொட்டப்படவேண்டும் என்பதே ஒப்பந்தம். அதற்குப் பதிலாக 320 உழவு இயந்திர மண் பறிக்கப்பட்டு, பணிகளை ஆரம்பிக்கத் தயராகியுள்ளனர்.

நாம் அதைத் தடுத்து உடன் பிரதேச செயலாளரின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளோம்.- என்று அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. உடனடியாக தொழில் நுட்ப உத்தியோகத்தரை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளேன். தொழில் நுட்ப உத்தியோகத்தரின் இறுதி அறிக்கையின் பிரகாரமே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனால் பிரதேசமக்கள் ஐயம்கொள்ளத் தேவையில்லை.- என்று துணுக்காய் பிரதேச செயலாளர் தெரி வித்தார். (ந-101)



# பனம் பொருள் கண்காட்சியை முன்னிட்டு யாழ். நகரில் பேரணி

யாழ்ப்பாணம், ஒக்.21

பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் இன்று ஆரம்பமாகும் 'ஞாலத்தில் புதுமை புகும் தாலம்' எனும் கண்காட்சியை முன்னிட்டு நேற்று யாழ். நகரில் விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டது.

விழிப்புணர்வுப் பேரணி சபையின் பொது முகாமையாளர் எம்.பி.லோகநாதன் தலைமையில் நடைபெற்றது. பேரணியில் சபைப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். பனை வளத்தை ஊக்குவிக்கவும் கண்காட்சியை மக்கள் பார்வையிட்டு பயன்பெறும் முகமாகவும் இந்த விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டது.

இன்று யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பாகவுள்ள கண்காட்சி மூன்று நாள்கள் நடைபெறவுள்ளன. முதல் நாள் நிகழ்வுக்கு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். மறுநாள் சனிக்கிழமை நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ்வுக்கு மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதியும், ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மூன்றாம் நாள் நிகழ்வுக்கு வடக்கு மாகாண உதவிக் கணக் காளர் நாயகம் ஜி.தேவஞானம் ஆகியோர் முதன்மை விருதினர்களாகக் கலந்துகொள்வர்.

பனை அபிவிருத்திச் சபையில் தொடர்ந்து 25 வருடங்கள் சேவையாற்றிய 47 பணியாளர்கள் பாராட்டிக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளனர். பனம் கைப்பணிப் போட்டியில் வெற்றி பெற்ற 225 பயனாளிகளுக்கு மூலப் பொருள் கொள்வனவுக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன. ஞாலத்தில் புதுமை புகும் தாலம் எனும் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (ந-17)

# மாணவ குழுக்கள் இடையே மோதல்

## மாணவர் ஒருவர் படுகாயம்

வவுனியா, ஒக்.21

மாணவ குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் மாணவன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வவுனியா தரணிக்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா தரணிக்குளத்தில் உள்ள பாடசாலையில் கல்வி பயிலும் 12 ஆம் தர மாணவர்களுக்கும், அதே பாடசாலையில் கல்வி பயிலும் 9ஆம் தர மாணவனுக்கும் இடையே நேற்று முன்தினம் பாடசாலை முடிவடைந்த பின்னர் சிறிய முரண்பாடு ஏற்பட்டது. அது மோத லாக மாறியது. அருகே காணப்பட்ட குளிர்பானப் போத்தலால் தாக்கப்பட்டு பாடசாலை மாணவர் ஒருவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். தாக்குதலில் ஈடுபட்ட 6 மாணவர்கள் கைது செய்யப்பட்டு (பாடசாலைச் சீருடையுடன்) வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டனர். பாடசாலை மாணவர்கள் மதுபோதையில் அந்த மாணவனை தாக்கியுள்ளனர். அவர்களை மருத்துவச் சோதனைக்கு உட்படுத்தி மருத்துவ அறிக்கையுடன் வவுனியா மாவட்ட நீதிவான் மன்றத்தில் முன்னிலைப் படுத்தவுள்ளோம்.- என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தை அடுத்து வவுனியா நீதிவான் மன்றத்துக்கு முன்பாக மாணவர்களின் பெற்றோர் ஒன்று கூடினர். சம்பவ இடத்துக்குச்சென்ற வடக்கு மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் பெற்றோருடன் கலந்துரையாடினார். (ந-21)


## தமிழ் அன்னையர்காய் குடிமனையில் தாலத்தின் தர்ம தானங்கள்

| | | |
|---|---|---|
| ஊட்டச்சத்தாய் | பதநீர் | நுங்குநீர் |
| பனங்களி | பனங்காய்ப்பணியாரம் | பனாட்டு |
| ஒடியல்மாப்பிட்டு | ஊதுமாக்கூழ் | ஒடியல்கூழ் |
| புழுக்கொடியல் | புழுக்கொடியல்மா | லட்டு |
| விருந்தினர் | விருந்தோம்பலுக்காய் | பனம்பானம் |
| பனம்கிறஸ் | பனம்கோடியல் | பாம்ரா |
| பாம்ரொபி | பாம்புல்டோ | பாம்பிஸ்கற் |
| பாம்ஜெலி | பாம்கேக் | பனம்பாகு |
| குழந்தைகள் | சூரியக்குளியலுக்காய் | தடுக்குப்பாய் |
| இல்லத்தார் | தூங்குவதற்காய் | ஆறடிப்பாய் |
| பனங்களி | உலர்வதற்காய் | பனாட்டுப்பாய் |
| நெல்மணி | காய்வதற்காய் | நெடும்பாய் |
| திருமணத்தாலி | வைப்பிற்கு | மூடுபெட்டி |
| பலகாரங்கள் | பாதுகாக்க | ஓலைப்பெட்டி |
| மாப்பொருள் | புதமாக்க | தட்டுப்பெட்டி |
| மோதகம், பிட்டு | அவிப்பதற்கு | நீத்துப்பெட்டி |
| ஏட்டுச்சுவடி | அழைப்பிதழ் | வாழ்த்துமடல் |
| பூமாலை | பூங்கொத்து | பூந்தொங்காய் |
| தொப்பி | விசிறி | மேசைத்தட்டு |
| சுவர்மாட்டி | பூவாஸ் | அலங்காரங்களென |

பனை எங்கள் உயிர்

"ஞாலத்தில் புதுமை புகும் தாலம் கண்காட்சி"
"காண்பதற்காய் அலையெனத் திரண்டு வாரீர்"

*பா.மதுரா, பனை அபிவிருத்திச் சபை.*

இடம் : யாழ்.மத்தியகல்லூரி
காலம்: 21.10.2016
நேரம் : முற்பகல் 10.00 மணி

இங்கு அனுசரணை : உதயன்


# சட்டவிரோத மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 9 பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக.21

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். ஏழு உழவியந்திரங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.



கிளிநொச்சி ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி தர்சன தலமையில் சோதனையில் ஈடுபட்ட பிரதீஸ், குலதீபன், அனுர பிரியங்கர ஆகியோர் நேற்று முன்தினம் கோணாவில் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல்ஏற்றிய இரண்டு உழவியந்திரங்களை கைப்பற்றினர். அதன் சாரதிகளையும் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் முரசுமோட்டை மற்றும் கல்மடுநகர் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிய மூன்று உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டன. அதன் சாரதிகளும் கைதுசெய்யப்பட்டனர். நேற்று, நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் 5 உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

ஜெயந்திநகரில் அனுமதிப்பத்திரம் [illegible] வெப்பமரக் குற்றிகளை [illegible] செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். - என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் முல்லைத்தீவுமாவட்ட போதைப்பொருள்தடுப்புப் பிரிவின் உப பரிசோதகர் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இரண்டு உழவியந்திரங்களைப் பறிமுதல் செய்தனர். நான்கு சந்தேகநபர்களையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். - என்று முல்லைத்தீவு [illegible] தெரிவித்தது. (ந-21பி3,பி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுப்பிட்டியில் இன்று முதியோர் தின விழா

அச்சுவேலி, ஒக்.21

சிறுப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர் பிரிவு (ஜே/271), முதியோர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிறுப்பிட்டி கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

முதியோர் சங்கத்தின் தலைவர் சு.கனகராசா தலைமையில் நடைபெறும் விழாவில் முதன்மை விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச செயலக நிர்வாக அலுவலர் து.அருள்ராஜ் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக சிறுப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர் ஐ.சிவானந்தம் கலந்து கொள்கின்றார்.

சனசமூக நிலைய ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மூத்த குடிமகன்கள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-11)

## தரம் 11 மாணவர்களுக்கு மூன்றாம் தவணை பரீட்சை

கரணவாய் ஒக்.21

தரம் 11 மாணவர்களுக்கு வடக்கு மாகாணகல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் மாகாண மட்டமூன்றாம்தவணைப்பரீட்சை எதிர்வரும் 24ஆம் திகதி முதல் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் மூன்றாம் தவணைப் பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகி 29ஆம் திகதி வரை இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்தார். (108)

## குறுந்திரைப்பட தயாரிப்பாளர் தெரிவுக்கு விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 21

நல்லூர்ப் பிரதேச செயலக பிரிவில் குறுந்திரைப்படத் தயாரிப்பாளர்கள் தெரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் ஆ.சிறி தெரிவித்தார்.

விண்ணப்பதாரிகள் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். 2015, 2016ஆம் ஆண்டு காலப் பகுதிக்குள் வெளியிட்ட குறுந்திரைப் படங்களாக இருக்கவேண்டும். ஒருவர் இரண்டு குறுந்திரைப் படங்களுக்கு மேல் முன்வைக்கக்கூடாது. தமது சுயவிவரக் கோவையுடன் குறுந்திரைப் படப் பிரதியுடனான விண்ணப்பங்களை நாளை சனிக்கிழமைக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலகத்தில் முன்வைக்க வேண்டும் என்று நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்தார். (வ-ரி)

## சிறப்பு முழுக்கு

யாழ்ப்பாணம், ஒக்.21

கோப்பாய், பூதர்மடம் வைரவர் ஆலயத்தின் குடமுழுக்கு தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை சிறப்பு முழுக்கு மற்றும் வழிபாடுகள் இடம்பெற்று நண்பகல் மகேசுவர பூசையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-17)

### நடு வீதியில் சாரதியைத் தாக்கிய வழக்கில்

# காணொலி குறித்து விசாரிக்க டி.ஐ.ஜிக்கு நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 21

கிளிநொச்சியில் நடு வீதியில் வைத்து சாரதி ஒருவரைப் போக்குவரத்துப் பொலிஸார் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில், விசாரணை நடத்த ஏதுவாக கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெலிக்கன்னவிடம் தாக்குதல் பற்றிய காணொலியை கிளிநொச்சி நீதிவான் மன்றினால் வழங்கப்பட்டது.

கிளிநொச்சியில் நடு வீதியில் வைத்து சாரதி ஒருவரைப் பொலிஸார் இரும்புக் கம்பியால் தாக்கும் காணொலி கடந்த மாதம் வெளியாகியிருந்தது. அவ்வாறு தாக்கியதாக்கியதனால் காயமடைந்ததாகக்கூறி அந்தச் சாரதி கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், தமது கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்று காயப்பட்டவர் மீது கிளிநொச்சிப் பொலிஸார் குற்றஞ்சாட்டி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரணை செய்த நீதிவான், சந்தேகநபரினை மன்றில் முன்னிலைப்படுத்துமாறு கடந்த வாரம் பொலிஸாருக்கு கட்டளையிட்டார். இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை அவர் நீதிமன்றில் முன்னிலையாகி சத்தியக் கூற்று மற்றும் காணொலி இறுவட்டு (சி.டி) ஆகியவற்றை மன்றில் ஒப்படைத்தார்.

அதனை அடுத்து அதன் பிரதியைப் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பக் கட்டளையிட்ட நீதிவான் மன்று, காணொலி தொடர்பில் விரைவில் விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டது.

அது தவிர, தாக்குதல் நடத்திய விடயம் தொடர்பான வழக்கு விவகாரத்தில் மன்றில் முன்னிலையான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் சம்பவம் தொடர்பில் மேற்கொண்டு விசாரணை நடத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். அதன்படி வாக்குமூலம் எடுக்கும் பணி பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்கான அனுமதியைப் பளைப் பொலிஸார் நீதிமன்றில் கோரினர். அதற்கு மன்று அனுமதி வழங்கியது. இந்த வழக்கு எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அது பற்றி 14 நாள்களுக்குள் அறிக்கை முன்வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட பொலிஸ்மா அதிபருக்கு தெரிவிக்கப்பட்ட போதும், 14 நாள்கள் கடந்த நிலையிலும் இது வரை கிடைக்கவில்லை என்று இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார். (வ-4,ரி3)

## இப்படியும் நடக்கிறது



யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ். நகர் கே.கே.எஸ். வீதியில் உள்ள உணவகம் முன்பாக யாசகர் ஒருவரை உணவகத்தில் வேலை செய்யும் நபர் ஒருவர் நீர் ஊற்றி துரத்தும் காணொலி காட்சிகள் இணையத்தளங்களில் வெளியாகியுள்ளன.

இந்தச் செயல் தொடர்பில் பலரும் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.

அந்தக் கடை முன்பாக யாசகம் பெற்ற வயோதிபரை கடையில் வேலை செய்யும் நபர் அப்புறப்படுத்தும் நோக்குடன், நீரினை அவர் மீது ஊற்றி, அவரை கடையின் முன்பாக இருந்து அப்புறப்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த காட்சி காணொளியாக பதியப்பட்டு இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளது. (வ-37)

## மாணவர் நாடாளுமன்றத் தேர்தல்

யாழ்ப்பாணம், ஒக். 21

அத்தியார் இந்துக் கல்லூரியில் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும் என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார். (வ-ரி)

## சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம் ஒக். 21

யாழ். மாவட்டத்தில் ஜி.சி.ஈ சதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள சிறப்புத் தேவையுடைய பரீட்சார்த்திகளுக்கு சலுகை வழங்கலுக்கான நேர்முகத்தேர்வு யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. எனவே சிறப்புத் தேவையுடையோர்கள் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரராஜா கேட்டுள்ளார். (வ-ரி1)

## மக்களிடம் கருத்துக்கள் கோரல்

யாழ்ப்பாணம் ஒக். 21

யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நகர அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஏனைய உத்தேச அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ளவர்கள் இரண்டு பக்கத்துக்கு மேற்படாமல் தங்களது கருத்துக்களைச் சுயமாகத் தயாரித்து எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கேட்டுக்கொண்டுள்ளார். (வ-ரி1)

## வயோதிபப் பெண்ணை பொறுப்பேற்க கோரிக்கை

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட வயோதிப பெண் ஒருவரை அவ ரது குடும்பத்தினர் பொறுப்பேற்க வேண்டும் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா கோரிக்கை விடுத்தார்.

'கடந்த 11 ஆம் திகதி பி.ப. 4.45 மணியளவில் பஸ் தரிப்பிடத்தில் இருந்து பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்ட 85 வயது மதிக்கத்தக்க தம்பிஐயா தனலட்சுமி என்ற வயோதிபப் பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர் என்றும், மகள் ஒருவர் உள்ளார் அவர் வத்தளையில் வசிக்கின்றார் என்று அந்தப் பெண் தெரிவித்தார். அவரது குடும்பத்தினர், மகள் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்' என்று அவர் தெரிவித்தார். (ற-17)

## தொழிலாளர்கள் சம்மதித்தாலே பனை ஏறும் கருவி கொள்வனவு

யாழ்ப்பாணம், ஒக்.21

பனை அபிவிருத்திச் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட பனை மரம் ஏறும் கருவிகளை தொழிலாளர்கள் பார்வையிட்டு அதை அவர்கள் பரீட்சார்த்தமாக பயன்படுத்தி முழுமையான திருப்தி ஏற்பட்டால் மட்டுமே குறித்த கருவிகளைத் தருவிக்க முடியும்.

இவ்வாறு சபையின் தலைவர் மருத்துவர் இ.சிவசங்கர் தெரிவித்தார்.

'பனை மற்றும் தென்னை மரங்களில் ஏறுவதற்கு தொழிலாளர்களுக்காக மரம் ஏறும் கருவி களைத் தருவிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டின் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக இந்தக் கருவிகளை தருவிக்க ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்தக் கருவிகளை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கும் பட்சத்திலேயே அவற்றைக் கொள்வனவு செய்து அவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என்று மருத்துவர் இ.சிவசங்கர் தெரிவித்தார். (ற-17)

## மூன்று நூல்கள் இன்று வெளியீடு

அச்சுவேலி, ஒக்.21

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் எழுதிய மூன்று நூல்கள் இன்று வெளியீடு செய்யப்பட உள்ளன என்று அறிவிக்கப்பட்டது.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறும் நூல் வெளியீட்டு விழாவில் 'வட கோவை சபாபதி நாவலரின் நான்மணிகள்', 'இருபாலை சேனாதிராச முதலியார்', 'ஒளிவளர் தீபங்கள்' என்னும் மூன்று நூல்களே வெளியீடு செய்யப்பட உள்ளன.

இவ் விழாவில், முதன்மை விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ம.பிரதீபன் கலந்து கொள்வார். நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி சுகந்தினி சிறி முரளிதரன் நிகழ்த்துகின்றார். நூல் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி செல்வ அம்பிகை நந்தகுமார் நிகழ்த்துகின்றார். முதற்பிரதியை தொழிலதிபர் லயன் ப.சிவபாஸ்கரன் பெற்றுக்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-11)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.21

வேலாயுதம் மகா வித்தியாலய நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## விழிப்புணர்வு செயலமர்வு இன்று

யாழ். பிரதேச கலாசார அதிகார சபையின் கலை, கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் இலக்கியத்தை நேசிக்கும் சமுதாயத்தை உருவாக்குவோம் என்ற விழிப்புணர்வுச் செயற்றிட்டம் இன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஜாக்ரத சைத்ன்யா ஆச்சாரியார் கருத்துரை வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

## இடர் முகாமைத்துவ ஒத்திகை இன்று

யாழ்ப்பாணம், ஒக். 21


சாவகச்சேரி பிரதேசத்தின் கிராம அலுவலர் பிரிவு ஜே/324 பிரிவுப் பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடர் முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சியும் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

இந்த ஒத்திகைச் செயற்பாடு தொடர்பில் பொதுமக்கள் எவரும் குழப்பமடையத் தேவையில்லை என்று யாழ். மாவட்டச் செயலகம் அறிவித்தது. (வ-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநியோகக் குழாய் வெடிப்புக்கு மாற்றுத் திட்டங்கள் ஏதுமில்லை

## வீதி அடிக்கடி கிளறப்படுவதால் போக்குவரத்துக்கு பெரும் இடையூறு




யாழ்ப்பாணம், ஒக்.21
யாழ்ப்பாணம் மாநகர சபையின் குடிதண்ணீர் விநியோகக் குழாய்கள் பலாலி வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்ட பின்னர் 10 தடவைகள் வெவ்வேறு இடங்களில் வெடித்துள்ளன. காப்பெற் வீதிகள் கிளறப்பட்டு அவை சீர் செய்யப்படுகின்றன. எனினும் விநியோகக் குழாய்களில் வெடிப்பு ஏற்படாது இருப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் எவையும் இன்னமும் மாநகர சபையால் இனங்காணப்படவில்லை.
பலாலி வீதியில் கந்தர்மடம் சந்திக்கு அண்மையான இரு இடங்களில் தற்போதும் திருத்த வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன. வீதியால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் இதனால் அசௌகரியங் களை எதிர்கொள்கின்றனர். காப்பெற் வீதி அடிக்கடி கிளறப்படுவதால் வீதியும் பாதிப்படைகின்றது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.
யாழ். நகரின் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக 1962ஆம் ஆண்டு தரைக் கீழ் குடிதண்ணீர் விநியோகம் உருவாக்கப்பட்டது. குருநகர் தண்ணீர் தாங்கியில் சேமிக்கப்படும் தண்ணீர் குழாய் மூலம் விநியோகிக்கப்படுகின்றது.
2012ஆம் ஆண்டு பலாலி வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டது. அதன்பின்னர் பல இடங்களில் தண்ணீர் விநியோகக் குழாய்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டன.
குடி தண்ணீர் விநியோகம் நடைபெறும் சமயம் வீதியால் அதிக எடையுள்ள வாகனங்கள் பய ணிப்பதால் ஏற்படும் அழுத்தம் காரணமாக குழாய்களில் வெடிப்பு ஏற்படுகின்றது. அவற்றை யாழ். மாநகர சபை சீர் செய்கின்றது. வெடிப்பு ஏற்பட்டு நீர்க் கசிவு ஏற்பட்டு சீர மைப்புச் செய்யும்போது பெரும் தொகைப் பணம் செலவு செய்யப் படடே வீதிச் சீரமைப்பு நடைபெறு கின்றது. மாற்றுத் திட்டம் குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது.- என்று யாழ்.மாநக சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (ம-5,ரி7)

## கொடிகாமத்தில் திடீர் சோதனை; மருந்து விசிறிய பழங்கள் சிக்கின

தென்மராட்சி, ஒக். 21
கொடிகாமம் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தை என்பவற்றில் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் நேற்று காலை மேற்கொண்ட திடீர் சோதனையில் பாவனைக்கு உதவாத பழவகைகள் மற்றும் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.
சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் உணவு கையாளும் நிலையங்களில் பணியாற்றியோருக்கும், திகதி காலாவதியான பொருள்களை வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர்களும் இனங்காணப்பட்டனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
கொடிகாமம் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் அ.ஜென்சன்றொனால்ட் தலைமையிலான சுகாதார பொது பரிசோதகர்கள் குழு, சாவகச்சேரி பிரதேச சபை பணியாளர்கள் ஆகியோர் சோதனைகளை மேற்கொண்டனர். மருந்து விசிறப்பட்டு பழுக்க வைக்கப் பட்டிருந்த பழவகைகள் 3 வியாபாரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டன.
வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர்களும், உணவு கையாளும் நிலையங்களில் பணியாற்றுவோரில்வெற்றிலைமென்று கொண்டும், முகச்சவரம் செய்யாமலும் காணப்பட்டவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப் பட வுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## பஸ் மீது தாக்குதல்; கைதானோருக்கு மறியல்

யாழ். நகரில் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் மீது பட்டா ரக வாகனத்தில் வந்து தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 12 பேரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.
வவுனியா - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் பஸ் மீது யாழ். நகரில் பட்டா வாகனத்தில் வந்தவர்கள் தாக்குதல் நடத்தினர். அது தொட்பில் வடமராட்சியைச் சேர்ந்த 12 பேர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் யாழ். நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். (ம-4,101)

# அதிகாரி தாக்கப்பட்டதைக் கண்டித்து பிரதேச சபை ஊழியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.21
நல்லூர் பிரதேச சபை அதிகாரி ஒருவர் வெளி நபரால் தாக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸாரால் உரிய முறையில் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. அதனாலேயே குறித்த நபர் பிணையில் விடுவிக் கப்பட்டார் என்று குற்றஞ்சாட்டி நேற்று பிரதேச சபை ஊழியர்கள் இரு மணி நேரப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்ததாவது-
நல்லூர் பிரதேச சபையின் எல்லைக் குட்பட்ட பிரதேசமொன் றில் அனுமதியின்றி கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடம் தொடர்பில் சபையின் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். அது தொடர்பில் நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கட்டட உரிமையாளர் நல்லூர் பிரதேச சபைக்கு தனது குடும்பத்தினர் மற்றும் உறவினர் சகிதம் வந்தார். கட்டடம் தொடர்பில் நீண்ட வாக்கு வாதத்தில் ஈடுபட்டார். அப்போது கட்டட உரிமையாளரின் மனைவி சபை வளாகத்துக்குள் மயங்கி வீழ்ந்தார். அங்கு நின்ற பிரதேச சபை ஊழியர்கள் உடனடியாக அவருக்கு முதலுதவி வழங்கினர். கட்டடம்தொடர்பில்நடவடிக்கைமேற்கொண்ட அதிகாரி அலுவலகத்திலிருந்து வெளியில் சென்றார். கட்டட உரிமையாளரின் உறவினர் என்று கூறி வந்திருந்த நபர் ஒருவர் அரச அலுவலகமான நல்லூர் பிரதேச சபை வளாகத்துக்குள் வைத்து அந்த அதிகாரியைத் தாக்கினார். அத னால் அதிகாரி நிலைகுலைந்தார். கோப்பாய் பொலிஸாருக்கு இது குறித்துத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகள் நடத்தினர். பாதிக்கப் பட்ட அதிகாரி சார் பிலும் பிரதேச சபை சார்பிலும் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டது. முறைபாடுகளை பெற்றுக்கொண்ட பொலிஸார் தாக்குதல் நடத்திய நபரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். குறித்த நபர் அன்றேபிணை யில் விடுவிக்கப்பட்டார்.- என்றார்.



இந்தச் சம்பவத்தைக் கண்டித்து பிரதேச சபை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அரச அதிகாரி அலுவலக வளாகத்தில் வைத்துத் தாக்கப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஓர்அரசஅதிகாரியைஅலுவலகத்தில்வைத்துத் தாக்கிய நபருக்கு பிணை வழங்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் உரிய முறையில் வழக்குத் தாக்கல் செய்ய வில்லை. பாதிக்கப்பட்ட அதிகாரிக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதை உணர்ந்து அனைத்துத் தரப்பும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.- என்று பிரதேச சபை ஊழியர்கள் தெரிவித்தனர். அரச அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிப் படுத்து, அரச ஊழியர்களைத் தாக்காதே எனும்வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர். (ம-21,ரி)

மரண அறிவித்தல்



திருமதி செல்வமணி (செல்லக்கண்டு) புலேந்திரன்

ஏழாலை வடக்கு. ஊரங்குளையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கு. முடமாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வமணி புலேந்திரன் கடந்த 18.10.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா புலேந்திரனின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும்.காலஞ்சென்றவர்களான இராசையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும். கவிதா (லண்டன்). அரவிந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும். சிவகுமார் (லண்டன்). தர்சிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும். சியாகன் (லண்டன்). கவிசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும். காலஞ்சென்ற தவமலர். புனிதமலர் (லண்டன்). மகாலட்ஷ்மி (லண்டன்). ஜெயலட்ஷ்மி (லண்டன்). சரோஜா(லண்டன்). சுதாமதி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும். சிவானந்தன் (கனடா). திருப்பதி (லண்டன்). சிதம்பரநாதன் (லண்டன்). சோமசுந்தரம் (லண்டன்). ராஜ்குமார் (லண்டன்). சுகுமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும். குகன் (கனடா). சுமதி (அபுதாபி). நிமலன் (லண்டன்). மாலதி (நியூஸ்லாந்து). செந்தூரன் (லண்டன்). குமரன் (லண்டன்). கார்த்திகா (கனடா). நித்தியா (லண்டன்). சஞ்சீவன் (லண்டன்). ஜனனி (லண்டன்). கீர்த்தனா (லண்டன்). தீபனா (லண்டன்). லாவண்யா (ஆஸ்திரேலியா). லக்ஷிகா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்பாடு இந்து மயானத்துக்கு நண்பகல் 12 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

166, இராமலிங்கம் வீதி,
முடமாவடி, திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.

021 222 1706

(ஜே.5553) (13.18.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதையுடன் சாரத்தியம்: சாரதிக்கு தண்டம்

தென்மராட்சி, ஒக்.21
மதுபோதையில், ஆவணங்கள் ஏதுமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்று 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.
குறித்த நபருக்கு எதிராக சாவகச்சேரி போக்குவரத்துப் பிரிவு சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது.
காப்புறுத்திப் பத்திரம், வானக வரிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி மதுபோதையில் குறித்த நபர் வாகனம் செலுத்தினார் என்று குற்றஞ் சாட்டப்பட்டது.
இந்த வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரண்ணக்கு எடுக்கப் பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் தன் மீதான குற்றச்சாட்டை ஏற் றுக் கொண்டார்.
அவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது.
அதேவேளை, வாகனப் பதிவுப் புத்தகம், சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி மது போதையில் வாகனம் செலுத்திய பிறிதொரு சாரதிக்கு 15 ஆயிரம் ரூபா தண்டமும், ஆபத்தான வகையில் வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய பிறிதொரு சாரதிக்கு 6 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.
(ற-9)

# இந்திய பனைகள் வடக்குக்கு

அச்சுவேலி, ஒக்.21
பனை வளத்தைப் பெருக்கி பனையில் இருந்து அதிகளவு பயனைப் பெறும் நோக்குடன் இந்தியாவில் இருந்து உயரம் குறைந்த நல்லின பனம் விதைகள் கொண்டு வரப்படவுள்ளன. அவை பனை நாற்றுக்களாக வளர்க்கப்பட்டு நடுகை செய்யப் படவுள்ளன.
இவ்வாறு பனை் அபிவிருத்திச் சபையின் தலைவர் மருத்துவர் இ.சிவசங்கர் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது–
இலங்கையில் மரபு ரீதியான பனைகளே இதுவரை நடுகை செய்யப்பட்டன. அவற்றைக் கையாண்டு பயன்களைப் பெறுவதில் பனம் தொழில்சார் வல்லுநர்கள் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இந்தியாவில் சமகால சூழலுக்கு ஏற்ப பனைகளில் மரபியல் மாற்றங்கள் செய்யப்பட்டுஉயரம்குறைந்த நல்லினப் பனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றை இங்கு நடுகை செய்யத் திட்டமிட்டுள்ளோம். இந்தச் செயற்றிட்டம் கடந்த காலங்களில் வாய்மொழியாகக் கூறப்பட்ட போதும் நடைமுறைப்படுத்தப் படவில்லை. தற்போது நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளோம். குறித்த பனை நாற்றுக்களாகப் பொலித்தீன் பைகளில் நடுகை செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப் படும். அடுத்த ஆண்டு அவற்றை மக்களுக்கு வழங்க எதிர்பார்த்துள்ளோம் – என்றார். (ற-11)



## கிழக்கு மாகாண சபை சுகாதார அமைச்சில் தீ

அம்பாறை, ஒக் 21
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக் காரியாலயத்தில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.
மின்னொழுக்குக் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாகவும், இதனால் பெரும் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முகம்மட் நஸீர் தெரிவித்தார்.
தீயணைப்புப் படையினர் தீயை அணைத்துக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும், கிழக்கு மாகாணசபையின் கட்டடங்கள் அனைத்தும் தீயணைப்புப் பரிசோதர்களால் பரிசோதனை செய்யப்படு வருவதாகவும் சுகாதார அமைச்சர் மேலும் கூறினார். (த-48)

## தொற்றா நோய்கள் குறித்த உடற் சோதனை அவசியம்

முல்லைத்தீவு, ஒக்.21
தொற்றா நோய்களுக்கான முழுமையான உடற் சோதனைகள் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்திய சாலையில் நடைபெறுகின்றன. அதில் அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் அனைவரும் உடல் நிலைகளைச் சோதித்துக் கொள்ள வேண்டும்.
இவ்வாறு தொற்றா நோய்களின் தடுப்புப் பிரிவு வைத்திய அதிகாரி சூரிகா தெரிவித்தார்.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அனைத்து உள்ளக, வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு நேற்றுமுன்தினம் தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இலங்கையில் மாரடைப்பால் 40 வீதமும், விபத்துக்களால் 14 வீதமும், நீரிழிவு மற்றும் அத னைச் சார்ந்த நோய்களால் 11 வீதமும், தோற்று நோய்களால் 10 வீதமும், இயற்கை உயிரிழப்பு, தற்கொலைகள், இதர காரணங்களால் 25 வீதமும் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன.
தொற்றா நோய்களுக்கான முழுமையான உடற் சோதனை நடவடிக்கைகள் வாரந்தோறும் புதன் கிழமைகளில் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்திய சாலையில் நடைபெறுகின்றன. அதில் அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் அனைவரும் தமது உடல் நிலை குறித்து சோதித்து அறிந்து கொள்ள வேண்டும்.– என்றார்.
விழிப்புணர்வு கருத்தரங்கு ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி டிலக்சனின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் ய.அனிருத்தனன் தலைமையில் நடைபெற்றது. (ற-21,102)

## சாரதிக்கு பிணை

தென்மராட்சி, ஒக்.21
கைதடியில் நேற்றுமுன்தினம் நடந்த இ.போ.ச. பஸ், மோட்டார் சைக்கிள் விபத்தையடுத்துக் கைது செய்யப்பட்ட இ.போ.ச. பஸ் சாரதி ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்று அனுமதித்தது.
விபத்தில் இளம் குடும்பஸ்தரான – மோட்டார் சைக்கிளில் பயணித்த சகாதேவன் சிவயோகன் (வயது -34) உயிரிழந்தார். விபத்துத் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்ததுடன் பஸ் சாரதியையும் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் சாரதியைப் பிணையில் செல்ல அனுமதித்தார்.
உயிரிழந்தவரின் சாவு தொடர்பாக பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மூலம் விசாரணைமேற்கொண்டுஅறிக்கை தாக்கல் செய்யுமாறும் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.
கைடிப் பாலத்துக்கும், கைதடி குட்டிப்பிள்ளையார் ஆலயத்துக்கும் இடையே உள்ள வீதி வளைவிலேயே விபத்து ஏற்பட்டது. (ற-9)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



பிறப்பு 11 . 08 . 1981

இறப்பு 19 . 10 . 2016

### சகாதேவன் சிவயோகன் (யோகன்)

தச்சன் தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சகாதேவன் சிவயோகன் 19.10.2016 புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சகாதேவன் - சொர்ணம்மா (மணி) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் கைலாசபதி தம்பதியரின் அன்பு மருமகனும், சத்தியசுமியின் அன்புக் கணவரும், கவின், வருண் ஆகியோரின் அன்புத் தந்தையும், சா்மினி, பிரேமினி (பிரான்ஸ்), சிவறாஜ் (கனடா), கிருபைதாஸ் (குட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலன் பிராய் பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தச்சன் தோப்பு,
கைதடி.

(ஜே.5553) (13.18.17)

## கட்டைக்காட்டில் சிக்கியது கசிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.21
கிளிநொச்சி, தருமபுரம் கட்டைக் காட்டில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் 45 போத்தல் கசிப்பும், 365 போத்தல் கோடவும் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.
இவ்வாறு தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.



தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பு நடத்தப் பட்டது. கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் அழிக்கப்பட்டது.
கைது செய்யப்பட்டவர் ஆரம்ப விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற் படுத்தப்படுவார். கைப்பற்றப்பட்ட உபகரணங்களும் நீதிமன்றில் பாரப் படுத்தப்படும் என்று பொலிஸ் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (ற-21,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுவலை பயன்படுத்திய மீனவர்களுக்கு தண்டம்

வலி.தென்மேற்கு, ஒக்.21
கொக்கிளாய் கடலேரியில் தடை செய்யப்பட்ட கூட்டு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஆறு மீனவர்களுக்கு 55 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட வலைகளை அழிக்குமாறு நீதி மன்று உத்தரவிட்டது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கொக்கிளாய் கடலேரியில் தடை செய்யப்பட்ட மீன்பிடிமுறைகளைப் பயன்படுத்தித் தொழில் செய்யும் மீனவர்களை இனம்காணும் நோக்குடன் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் தேடுதல் நடத்தினர். அதில் தடை செய்யப்பட்ட கூட்டுவலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.
3 வள்ளங்கள், இயந்திரங்கள், வலைகள் கைப்பற்றப்பட்டன.
குறித்த மீனவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஆறு மீனவர்களும் தம்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டனர். ஐந்து மீனவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபாவும், ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.
கைப்பற்றப்பட்ட மீன்பிடி உபகரணங்களை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் வலைகளை அழிக்குமாறு உத்தரவிட்டார்.
(ற-21,115)



கையெழுத்துக்களை வழங்கும் மக்கள்

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி கையெழுத்து வேட்டை

கிளிநொச்சி, ஒக்.21
காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டியும், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தியும் நேற்றுக் கிளிநொச்சியில் கையெழுத்துப் போராட்டம் நடத்தப்பட்டது.
பெரும் எண்ணிக்கையான மக்கள் அதில் தமது கையெழுத்துக்களை வழங்கினர்.
கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கமும், கிளிநொச்சி மாவட்ட சிவில் அமைப்புகளின் அமையமும் இணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்தன.
காலை 8 மணிக்கு ஆரம்பமான கையெழுத்துப் போராட்டம் பரந்தன், கரடிப்போக்கு, கிளிநொச்சி, இரணைமடு, முறிகண்டி ஆகிய இடங்களில் நடத்தப்பட்டது. ஏற்பாட்டாளர்கள் குழுக்களாகப் பிரிந்து கையெழுத்துப் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
பெரும் எண்ணிக்கையான மக்கள் இதற்கு ஆதரவு வழங்கித் தமது கையெழுத்துக்களை இட்டனர். கையெழுத்துக்கள் அடங்கிய மனு ஜனாதிபதிக்கு அனுப்பப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21,35)

## மண் அகழ்ந்த குற்றச்சாட்டில் அறுவர் கைது

கிளிநொச்சி, ஒக்.21
மணல் ஏற்றுவதற்கான அனுமதியைப் பெற்று கிளிநொச்சிக் காட்டுப் பகுதியில் மண் அகழ்ந்த குற்றச்சாட்டில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த நபர்கள் கிளிநொச்சி, வன்னேரிக்குளம் காட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவுக்குக் கிடைத்த தகவலை அடுத்து குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர். நான்கு டிப்பர் வாகனங்களும், ஜேசிபி ரக வாகனமும் கைப்பற்றப்பட்டன. சான்றுப் பொருள்களுடன், கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார்கள்- என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(ற-21,35)

## கிளிநொச்சி மாவட்டத்தில் 64,000 ஏக்கரில் காலபோகம்

யாழ்ப்பாணம், ஒக்.21
கடந்த ஆண்டு காலபோகநெற்செய்கையை விடவும் அதிகமாக இந்த ஆண்டு 5 ஆயிரத்து 254 ஏக்கர் நிலப் பரப்பில் நெல் விதைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தயாரூபன் தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடத்தப்பட்ட விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மேலதிக மாவட்ட செயலாளர் த.சத்தியசீலன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.
அதில் எதிர்வரும் காலபோகச் செய்கை தொடர்பாக ஆராயப்பட்டது. காலபோக நெற் செய்கைக்கான அட்டவணையும் தயாரிக்கப்பட்டது.
இந்த ஆண்டு காலபோக நெற் செய்கை 64 ஆயிரத்து 885 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
விவசாயக் குளங்களின் கீழ் உள்ள விவசாயிகள் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குரிய நெல்லினங்களை விதைக்க வேண்டும் என்றும் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.
கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் தெரிவித்ததாவது-
கடந்த ஆண்டை விடவும் அதிக நிலத்தில் காலபோகச் செய்கை செய்யப்படவுள்ளது. கடந்த ஆண்டு காலபோகச் செய்கையில் 60 ஆயிரம் ஏக்கரில் விதைப்புச் செய்ய எதிர்பார்க்கப்பட்டது. 59 ஆயிரத்து 629 ஏக்கரில் விதைப்புச் செய்யப்பட்டது. அவற்றில் 4 ஆயிரத்து 885 ஏக்கர் நெற் செய்கை அழிவடைந்தது.- என்றார்.
கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள், மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினர், விவசாயத் திணைக்களத்தினர், விதை ஆராய்ச்சித் திணைக்களத்தினர், விதை உற்பத்தித் திணைக்களத்தினர், தெங்கு அபிவிருத்திச் சபையினர், பனை அபிவிருத்திச் சபையினர், விவசாயிகள், விவசாய அமைப்புகளின் பிரநிதிகள் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.
(ற-21,ரி3)

## குரங்குகளை அடக்காவிட்டால் உணவு தவிர்ப்பே கடைசி வழி

### தென்மராட்சி பிரதேச மக்கள் தெரிவிப்பு

தென்மராட்சி, ஒக்.21
மக்களின் வாழ்வாதாரங்களை அழித்து பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் குரங்குகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்படும்.
இவ்வாறு தென்மராட்சிப் பிரதேச மக்கள் எச்சரிக்கை விடுத்தனர்.
இது தொடர்பாக அல்லாரைக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.
தென்மராட்சியில் பெரும்பாலானோர் விவசாயத்தையே நம்பியுள்ளனர். போரின் பின்னர் இந்தப் பிரதேசத்தில் குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பயிர்ச் செய்கைகளை அவை நாசப்படுத்துகின்றன. பிரதேச, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பல தடவைகள் இது குறித்துத் தெரிவித்தோம். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
அல்லாரையில் இயங்கும் விவசாயப் பண்ணையில் அண்மையில் 60 முருங்கை மரங்களை குரங்குகள் நாசம் செய்தன. விவசாயக் கொட்டில்களையும் சேதப்படுத்தின. குடியிருப்பு ஓடுகளும் உடைக்கப்படுகின்றன. தென்மராட்சிப் பிரதேசத்தின் பழச் செய்கையும் குரங்குகளால் பின்னடைவைச் சந்தித்துள்ளது. குரங்குகளால் பல விவசாயக் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலையும் ஏற்பட்டுள்ளது.
கமநல சேவைகள் திணைக்களம் கடந்த வாரம் வீட்டுத் தோட்டச் செய்கைக்கு ஆள்களைத் தெரிவு செய்து விதைகளை வழங்கிப் பயற்சி வழங்கியது. குரங்குகளைக் கட்டுப்படுத்தாவிட்டால் எமக்கு விதைகள் தேவையில்லை என்று மக்கள் விசனிக்கும் நிலை அங்கு காணப்பட்டது.
பிரதேச மக்களின் பிரச்சினையை உணர்ந்து இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் உங்கள் அலுவலகத்தின் முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை.- என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ற-9)

## பிரதேச செயலாளர் பிரிவுகளில் போதை தடுப்பு செயற்குழுக்கள்

அச்சுவேலி, ஒக்.21
பிரதேச செயலாளர் பிரிவுகளில் குறுகிய கால அவகாசத்துக்குள் பிரதேச மட்ட போதைப் பொருள் தடுப்புச் செயற் குழுக்கள் ஆரம்பிக்கப் படவுள்ளன.
பிரதேச செயலக பிரிவுகளில் பிரதேச மட்ட போதைப் பொருள் தடுப்புச் செயற் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. யாழ். மாவட்டத்தில் இதுவரை 4 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
போதைப் பொருள் உற்பத்தியைத் தடை செய்தல், பாவனையைக் கட்டுப்படுத்தல், விற்பனையை இல்லாது செய்தல், சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற செயற்றிட்டங்களை மேற்கொள்வதன் ஊடாக போதை இல்லாத நாட்டை உருவாக்குதல் என்ற தொனிப் பொருளுடன் இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. (ற-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மக்கள் ஆதரவற்ற அபிவிருத்தி தேவையா?

யாழ்ப்பாணம் மாவட்டம் பலாலியில் விமான நிலைய விரிவாக்கத்துக்காக சுமார் 1,000 ஏக்கர் காணிகளைச் சுவீகரிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்துவதாக இருக்கிறது. கடந்த 30 ஆண்டுகளாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து வரும் இந்தப் பகுதியைத் தம்மிடம் மீண்டும் தரவேண்டும் என்று மக்கள் தொடர்ந்து வலியுறுத்திவரும் நிலையில் அந்தக் காணிகளைச் சுவீகரிக்க எடுக்கப்படும் முயற்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையே.

இந்தப் பிரச்சினை முன்னரும் ஒரு தடவை எழுந்தபோது, மக்களுக்கு அபிவிருத்தியா, காணியா தேவை என்பதை அறிந்து அதற்கு ஏற்றவகையில் செயற்படுங்கள் என்று இலங்கையின் தலைமை அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அதற்குத் தமக்கு அபிவிருத்தியைவிட காணியே முக்கியம் என்று மக்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். இந்தக் கருத்து அந்தப் பகுதிக்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் ஆணித்தரமாகப் பதிவு செய்யப்பட்டது.

அதையெல்லாம் உதாசீனப்படுத்திவிட்டு தற்போது மீண்டும் அந்தக் காணகளைச் சுவீகரிப்பதற்கான அளவீடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுமார் 996 ஏக்கர் காணி நிலம் பலாலி வானூர்த்தித் தளத்தைச் சுற்றி இவ்வாறு சுவீகரிப்புக்கு உள்ளாகப்போகின்றது என்று அதிகாரிகள் கூறுகின்றனர். அதிலும், காணி உரிமையாளர்கள் விருப்பத்தை அறியாமலேயே இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பது மக்களை ஏமாற்றுவது போன்று அமைந்திருக்கிறது.

2015 ஜனாதிபதித் தேர்தலின்போது, தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் மக்களின் காணிகள் அனைத்தும் மக்களிடமே திரும்ப ஒப்படைக்கப்படும் என்று வாக்குறுதியளித்திருந்தனர். அதன் அடிப்படையிலேயே தமிழ் மக்களும் மைத்திரிபால சிறிசேனவுக்கு தமது முழுமையான ஆதரவை வழங்கியிருந்தனர்.

இவ்வாறு அரச தலைவரும் தலைமை அமைச்சரும் வழங்கிய வாக்குறுதிகள் எல்லாம் காற்றில் பறக்க விடப்பட்டு பலாலியைச் சுற்றி ஆயிரம் ஏக்கர் காணியைச் சுவீகரிப்பது என்பது மக்களை முழுமையாக ஏமாற்றும் நாடகமாகவே இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் மக்களுக்கு வழங்குவதற்கு என அரச காணிகள் எவையும் இல்லாத நிலையில் இருக்கும் காணிகளையும் அரசு சுவீகரிப்பது பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும். பாலாலி வானூர்தித் தளத்தை விரிவாக்கம் செய்வதாயின் அதனை கடலினுள் மேற்கொள்ள முடியும் என்கிற யோசனை முன்வைக்கப்பட்டு வருகின்றது. அதேபோன்று பலாலியை ஒரு பிராந்திய வானூர்தித் தளமாகத் தரமுயர்த்துவதற்கு மேலதிக காணிகள் எவற்றையும் சுவீகரிக்க வேண்டியதில்லை என்று இந்திய அதிகாரிகள் பரிந்துரைகளை முன்வைத்ததாகவும் முன்னர் செய்திகள் வந்திருந்தன.

இந்த இரண்டு விடயங்களையும் கவனத்தில் எடுக்கும்போது பலாலியில் ஆயிரம் ஏக்கர் காணியை அரசு சுவீகரிப்பதற்கு நியாயமான காரணங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

அதேநேரத்தில் தமக்கு பலாலி வானூர்தி நிலையத்தின் விரிவாக்கத்தைவிட காணிகளைத் திரும்ப ஒப்படைப்பதே தேவை என்று மக்களும் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றனர். இந்த நிலையில் மக்கள் விரும்பாத அவர்களின் ஆதரவு இல்லாத அபிவிருத்தித் திட்டத்தால் யாருக்கு என்ன இலாபம்? அதுவும் வானூர்தி நிலையத்தின் விரிவாக்கத்துக்கு மாற்று வழிகள் இருக்கின்றபோது மக்களின் காணிகளைச் சுவீகரித்துத்தான் அத்தகைய அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டுமா? இதுவும் பின்னாளில் அந்தப் பகுதியில் தொடர் அமைதியின்மையைத்தானே தோற்றுவிக்கும்.

பலாலி வானூர்தித் தளத்தின் விரிவாக்கத்துக்காக இந்தக் காணிச் சுவீகரிப்பு இல்லையென்றால், அது இராணுவத் தேவைக்கான சுவீகரிப்பாகவே அமையும். அதன் பொருள் இராணுவ ஆக்கிரமிப்பே!

போர் முடிந்து 7 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், புதிய அரசு பதவியேற்று சுமார் இரு வருடங்கள் ஆகின்ற நிலையிலும், தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வாகப் புதிய அரசமைப்பு ஒன்று முன்வைக்கப்படும் என்ற நிலையிலும் பாதுகாப்புக்காகக் காணி சுவீகரிப்பு ஏன் என்கிற கேள்வியையும் தவிர்க்க முடியவில்லை. இந்த விடயத்தில் அரசு நன்கு சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் அந்தப் பகுதி மக்கள் விரும்பாத எதைச் செய்தாலும் அது வேண்டத்தகாத விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதால் அரசு இந்த விடயத்தை மீள்பரிசீலனை செய்வதே சிறந்தது.

இந்திய அமைதிப் படையினர் 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21 ஆம் மற்றும் 22 ஆம் திகதிகளில் யாழ்.போதனா வைத்திய சாலைக்குள் வைத்து மேற்கொண்ட படுகொலைகளின் 29 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.



■ மு.ஈழத்தமிழ்மணி

இந்திய அமைதிப் படை என்ற பெயரில் 1987ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த இந்தியப் படையினர் தமிழினத்துக்குப் புரிந்த அட்டூழியங்கள் ஏராளமாகும். ஈழத்தமிழர்கள் மத்தியில் என்றுமே ஆறாத வடுக்களையும், வலிகளையும் உண்டாக்கிக் கொண்டிருப்பது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்இந்திய அமைதிப் படையினரால் மேற்கொள்ளப்பட்டபெரியதொரு படுகொலை நிகழ்வாகும். காந்திய தத்துவத்தையும், சீரிய ஜனநாயகக் கோட்பாடுகளையும் கொண்டதாகக் கூறிக்கொள்கின்ற இந்தியதேசத்து இராணுவத்தினர் 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21மற்றும் 22ஆம் திகதிகளில்யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைக்குள் புகுந்து வைத்திய நிபுணர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் மற்றும் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏறக்குறைய 80க்கும் மேற்பட்டவர்களை துடிதுடிக்கக் கொன்று குவித்துச்சங்காரம்செய்திருந்தனர்.

ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி யாழ்.நகர்ப்பிரதேசம் பெரும் அச்சத்தில் உறைந்திருந்தது. இந்தியப்படையினர் நிலை கொண்டிருந்த கோட்டை முகாமிலிருந்து நகருக்குள் ஊடுருவுவதற்குத் தமது கடுமையான முயற்சிகளை தீவிரப் படுத்தியிருந்தனர். தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதல்கள் விமானத்தாக்குதல்களை ஆரம்பித்திருந்தனர். யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் கோட்டைப் பகுதி இருந்தது. அங்கிருந்து இந்தியப்படையினர் முன்னேறு வதற்குத் தமது கடுமையான முயற்சிகளை எடுத்திருந்தனர்.

வைத்தியசாலை சுற்றாடலில் கேட்டுக்கொண்டிருந்த கடுமையான எறிகணைத்தாக்குதல்களின் சத்தங்களும் துப்பாக்கிகளின் வேட்டோசைகளும் விமானப்படையினர் தாழப் பறந்து வீசிய குண்டு வீச்சுத் தாக்குதல்களும் அச்சத்தைக் கடுமையாக்கிக் கொண்டிருந்தன.

தீபாவளிப்பண்டிகைத்திருநாளில் வைத்தியசாலை வளாகத்தில் தாக்குதல் மேற்கொண்டு கைப்பற்றுகின்றதிட்டத்தோடு முற்பகல் 11.30மணிக்கு இந்தியப் படையினர் ஏவிய எறிகணை ஒன்று முதலில் வெளிநோயாளர் பகுதிக்குள் வீழ்ந்து வெடித்திருந்தது.

மும்முனைத் தாக்குதல்களை முழுவீச்சில் நடத்திக் கொண்டிருந்த படையினர் யாழ்.மாநகரை நோக்கி முன்னேறுகின்ற முயற்சியிலீடுபட்டுக் கொண்டிருந்தனர். பிற்பகல் 2மணியளவிலும் சத்திரசிகிச்சை விடுதியான எட்டாம் இலக்க விடுதியை நோக்கி மீண்டும் இந்தியப்படை யினர் ஏவிய எறிகணை வீழ்ந்து வெடித்ததில் எட்டு நோயாளர்கள் கொல்லப்பட்டிருந்தனர். பலர் காயமடைந்தனர்.

பாதுகாப்புக்கருதி வேறு விடுதிகளிலிருந்த நோயாளர்கள் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், என அனைவரும் வைத்தியர்கள் தங்குகின்ற விடுதிகளுக்குக் கீழுள்ள கதிர் இயக்க கட்டடப்பகுதிக்குள் தஞ்சமடைந்திருந்தனர். இயலாத நோயாளிகள் பலரைத் தள்ளு வண்டிகளிலும் கொண்டு வந்து பாதுகாப்பளித்திருந்தனர்.

நேரம் செல்லச் செல்ல அச்சமும் பதற்றமும் அதிகரித்துக் கொண்டிருந்தது. கோட்டையிலிருந்து வெளியேறிய இந்தியப் படையினர் வைத்தியசாலையை அண்மித்த பகுதிகளில் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தபடி முன்னேறி, முன்வாசல் பகுதியூடாக வைத்தியசாலைக்குள் நுழைந்தனர். கொலைவெறித்தனத்தோடும் மூர்க்க குணம் கொண்ட வர்களாகவும் ஒன்பதாம் விடுதியை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைப் படையினர் தீர்த்திருந்தனர்.

### கண்மூடித் தனமாக சுட்டுத் தீர்த்த படையினர்

பின்னர் இந்தியப்படையினர் எக்ஸ் கதிர் இயக்கப் பகுதிக்குள் பாதுகாப்புக்காக ஒதுங்கியிருந்த அனைத்து மக்களையும் சுட்டுக் கொன்றபடியிருந்தனர். பாதுகாப்புத்தேடி அங்கு தஞ்சமடைந்தவர்கள் எல்லோரும் உரத்துக் கத்தினார்கள். ஆளுக்கு ஆள் தள்ளுப்பட்டுக் கொண்டு ஓடினார்கள். படையினரின் ஓயாத துப்பாக்கி வேட்டுக்களுக்குள் அகப்பட்டவர்களில் பலர் அந்தந்த இடங்களில் உயிரற்ற சடலங்களாக வீழ்ந்தனர். படையினருடன் பேசி உயிர் ஆபத்தை தவிர்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் சீருடையணிந்து படையினர் முன் நின்ற உத்தியோகத்தர்கள் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு முதலில் இரையாகினர்.

நான்கு மணிக்கு ஆரம்பமான துப்பாக்கி வேட்டுச் சத்தங்களால் வைத்தியசாலை வளாகத்துக்குள் பெரும்போர் நடைபெறுவதுபோல் இருந்தது. வைத்தியசாலை வளாகம் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களாலும், அழுகுரல்களாலும் மரண ஓலமாக ஆகியிருந்தது. படையினரது தாக்குதல்கள் ஒரு மணி நேரத்துக்குத் தொடர்ந்தப்படியிருந்தன. காயப்பட்டவர்கள் பலர் குருதி வெளியேறிக் கொண்டிருந்த நிலையில் அசையாதபடி உயிரற்ற சடலங்களுடன் சடலங்களாக வீழ்ந்துபடுத்திருந்தனர். இந்தியப்படைகளில் சிலர், தாதியர் அலுவலகத்திலும், மேற்பார்வையாளர் அலுவலகத்திலும் தாதிய பொறுப்புப் பரிபாலகியையும் இருமேற்பார்வையாளர்களையும் கண்டவுடன் அவர்களை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததில் அவர்கள் சடலங்களாக நிலத்தில் வீழ்ந்திருந்தனர். தாதிய பொறுப்புப் பரிபாலகிகளில் ஒருவரான திருமதி பா.வடிவேலு என்பவர் கந்த சஷ்டி கவசம் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் நோயாளர் காவு வண்டிச் சாரதியும் பிணமாகக் கிடந்தார்.

அதுமட்டுமன்றி அன்றைய படுகொலைச் சம்பவத்தில் இரு வைத்தியர்கள், பொறுப்புத் தாதிய உத்தியோகத்தர், இருமேற்பார்வையாளர்கள், சாரதி மற்றும் சிற்றூழியர்களென 18 உத்தியோகத்தர்கள் உயிரிழந்தனர். நோயாளர்கள் பலரும் கொல்லப்பட்டனர். இரவுநேரமாகிக் கொண்டிருந்தது. மேல்மாடி, வைத்தியர்கள் தங்கும் விடுதியாகும். இந்தியப்படையினர் மேல் மாடியில் நின்று உரத்துக் கதைத்து அட்டகாசமிட்ட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தி தேசத்துப் படைகள் நிகழ்த்திய

# கொடூரமான மனிதப் படுகொலைகள்

படியிருந்தனர். பலத்த மரண அச்சுறுத் தலுக்கு மத்தியில் இரவுப்பொழுது கழிந்து அடுத்த நாள் 22ஆம் திகதி மற்றுமொரு படுகொலை இடம்பெறு மெனவரும்நினைக்கவே யில்லை. அன்று இரண் டாவது நாளாகவும் இந்தி யப் படையினரால் படு கொலை நடத்தப்பட்டது.
மேல்மாடியில் தங்கிநின்ற இந்தியப்படையினருக் கும் சிலருக்குமிடையில் சிறு உரையாடல் ஆங்கி லத்தில் நடை பெறுகின் றது. வைத்தியசாலை சீரு டையிலிருந்த நால்வரால் உரையாடல் மூலம் இந்தி யப்படைகளுக்கு நிலைமை விளங்கப் படுத்தப்படுகின்றது

### இரண்டாம் நாளும் மனித வேட்டை

உயிர்தப்பிய வைத்தியர்கள், ஊழியர்கள், அடுத்தகட்ட நடவடிக்கைக்கு அச்சத்துடன் ஆயத்தப்படுத்துகையில் விக்ரோறியா வீதியிலுள்ள வைத்தியசாலையின் பின் புறவாசலூடாககுழந்தைவைத்திய சிகிச்சை நிபுணரான மருத்துவர் சிவபாத சுந்தரம் 22ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வைத்தியசாலைக்குள் உட்பிரவேசித்த தும், கூடவே மூன்று பெண் தாதியர்கள் வைத்திய நிபுணரிடம் நிலைமைகளை எடுத்துவிளக்கியவாறு ஒன்பதாம் விடுதியை நோக்கி வந்துகொண்டிருந்தனர். வைத் திய நிபுணரான சிவபாதசுந்தரம் கைகளை மேலே உயர்த்தியவாறும் அதனைத் தொடர்ந்து தாதிய உத்தியோகத்தர்களும் கைகளை உயர்த்தியவாறும் நடந்து வந்து கொண்டிருந்தனர்.
அந்தவேளையில் இந்தியப் படைச்சிப்பாய் ஒருவர் துப்பாக்கியை எடுத்துவந்து வைத் திய நிபுணரான சிவபாதசுந்தரத்தை நோக் கிச் சுட்டான். அடுத்து தாதியர்களையும் குறிவைத்தபடி சுட்டுக் கொண்டிருந்தான். சூடுபட்டு நிலத்தில் சரிந்த வைத்திய நிபுணர் அலறலோடு உயிர் துறந்தார்.
நேரம் கடந்து செல்கின்றது. துர் நாற்ற மும், குருதிவாடைகளும் வீசிக் கொண்டி ருக்கையில் இந்தியப்படை அதிகாரி



ஒருவர் விடுதி ஒன்றுக்குள் நுழைந்து கொண்டிருக்கையில் விடுதியிலிருந்த பெண்வைத்தியரொருவர் அந்த அதி காரியை இடைமறித்து வாதாடிப் பின்னர் இருவருமாக எக்ஸ்ரே கதிர் இயக்கப் பகுதி க்குள் வந்தனர்.
மதியநேரமளவில் பெண் வைத்தியரின் அழுகுரல் ஓங்கி ஒலித்தது. இங்கு நோயாளர்களும் வைத்தியர்களும் வைத்தியசாலை ஊழியர்களுமே இருக் கின்றனர் என்று அழுதவாறு பெண்வைத் தியர் கூற, இந்தியப்படையினர் உரை யாடுகின்ற சத்தமும் கேட்க, தப்பியிருக் கின்றவர்கள் உங்கள் கைகளை உயர்த்திய படி எழுப்பி வாருங்கள் என்று பெண் வைத் தியர் குரல் கொடுக்க என்ன செய்வதென்று புரியாமல் சத்திரசிகிச்சை வைத்திய நிபு ணரான பொன்னம்பலம் உட்பட கூட இருந்த வைத்தியர்களும் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று தெரியாத நிலை யில் கைகளை உயர்த்தியவாறு வெளியே வந்தனர்.
தப்பிப்பிழைத்த வைத்தியர்கள் உத்தி யோகத்தர்கள் மத்தியிலிருந்து ஓவென்று கத்திக் கதற முடியாத நிலை. குருதிக் கண்ணீர்வடித்த நிலையில் சடலங்களாக வைத்தியநிபுணர் அ.சிவபாதசுந்தரம், வைத்தியர்களான கே.பரிமேலழகர், கணேசரட்ணம், பிரதமதாதிய பொறுப்புப் பாலகியான திருமதி பா.வடிவேல் உட்பட 21 அரச உத்தியோகத்தர்கள் இந் தியப் படையினர் நடத்திய படு கொலைகளின் போது உயிரிழந் திருந்தமை அப்போதுதான் தெரிந் தது. இறந்தவர்களது உடல்களை வெளியில் எடுத்துச் செல்வதற்கு இந்தியப்படையினர் அனுமதிக்க வில்லை.
மூன்றாம் நாள் காலை தற்போ தைய குருதி வங்கி உள்ள, சமை யலறைக்குப் பின்புறமாகச் சட லங்களை வைத்தியசாலை ஊழி யர்களாலும் ஏனையவர்களாலும் ஒன்றுசேர்ந்து குறித்த இடத்துக்கு கொண்டு வரப்பட்டு சகல சடலங் களுக்கும் தீமூட்டப்பட்டது. ஏறக்குறைய எண்பது சடலங்கள் தீயுடன் எரிந்து சங்கமமாகின. சோகமயமாகிய நிலையில் வைத்தியசாலை வளாகம் அமைதியில் உறைந்திருந்தது.
இத்தகைய பதற்றமான சூழ்நிலையிலும் எஞ்சி உயிர்தப்பியிருந்த வைத்தியர்கள், ஏனையஊழியர்கள் முழுமூச்சோடு சேவையைத் தொடர்ந்தனர். விரக்தி, அர்ப்பணிப்பு, பயப்பீதி போன்றவற்றுக் கிடையில் பெரும் இழப்புகளையும் தாங்கிய வாறு காயப்பட்டவர்களை மீட்டெடுத்தது மட்டுமன்றி உயிர்காக்கும் வரைக்கும் போராடியவர்கள் அவர்கள்.
இப்படிப்பட்ட பெரும் இழப்புகளோடு பல் லாயிரக்கணக்கில் நோயாளர்களுக்கு சிகிச்சையை மேற்கொண்டு வருகின்ற யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சந்தித்த இழப்புக்களும் துயரங்களும் ஏராளம்.
இந்தியப்படையினரால் படுகொலை செய் யப்பட்டவர்களின் 29ஆவது ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.
இந்தக் காலகட்டத்தில் துணிச்சலோடு பணிபுரிந்த வைத்தியர்கள், ஊழியர்கள், தாதியர்கள் போன்றவர்களுடைய முழுமை யான வரலாறு எழுதப்பட்டு ஆவணப் படுத்தப்படவேண்டும். இந்தியப்படைகள் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நடத்திய கொலை வெறியாட் டமானது தலை தலை முறையாக தமிழ் மக்களது மனங்களில் அழியாது நிலை பெற்றிருக்க வேண்டும்.

## எம்கையே எமக்குதவி

எம்கையே எமக்குதவி; ஊரோடு ஒத்து ஓடு என்பவை ஒற்றுமையாய் வாழ்தலுக்கான முதுமொழிகள். சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்தி ருப்பதால் தொற்று நோய்ப் பரம்பலைக்கட்டுப்படுத்த முடியும். இன்று டெங்கு நோயின் ஆதிக்கம் பெருகி வருவதைத் தடுப்பதற்கும் இது உதவும் என்பது கண்கூடு. ஆனால் எம்மத்தியில் வாழும் ஒருசிலர் நாம் பயன்படுத்தும் ஒழுங்கை, வீதிகளைத் துப்புரவு செய்பவர்களை கேலி செய்வதுடன் அதனைத் தடுப்பதிலும் முனைப்புக்காட்டிக் செயற்பட்டு வருவது கவலைக்குரியதே.
உதாரணமாக, மட்டுவிலில் உள்ள ஒரு ஒழுங்கையை இந்தப்பகுதியில் வசிக்கும் நாம் துப்புரவு செய்யும்போது அதன் மறுபக்க காணிக்காரர்கள் அந்தவிதம் குப்பைகளைக் கூட்டிச் சுத்தப்படுத்துவதைத் தடுப்பதும், ஒழுங்கையில் வேண்டுமென்றே குப்பைகளைப்போடுவதுமாகச் செயற் பட்டு வருவது கவலைக்குரியது.
நீங்களாவது துப்புரவு செய்யுங்களேன் என்று கூறினால், உங்களுக்கு இதைவிட வேறு வேலை இல்லையா என்ற கேள்வி எழுப்புவதும், அவர்களது வாடிக்கையாக ஆகியுள்ளது. இத்தகையோர் எப்படிச் சுற்றுச் சூழலைப் பேணிப் பாதுகாப்பது பற்றி மற்றவர்களை விழிப் படையச் செய்வார்கள் என எண்ணவேண்டியுள்ளது.
எதையும் வருமுன் காப்போம், என்ற ரீதியில் எமது சுற்றுச் சூழலைப் பேணிப் பாதுகாப்பதற்கு சகலரும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். எனவே நாம் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக ஆகியுள்ளது. எனவே நாம் பேதங் களை மறந்து ஒன்றிணைந்து எமது சுற்றுச் சூழலை, சுகா தாரத்தைப் பேணிப்பயன் பெறுவோமே!

குணசிங்கம்

## கவனிப்பார்களா?

கல்லுண்டாய்– காரைநகர் வீதியில் வட்டுக்கோட்டைச் சந்திக்கும் பொன்னாலைச் சந்திக்கும் இடையில் உள்ள மதகு கடந்த வரு டத்துப் பெருமழையின்போது ஒரு சமயம் கனரக வாகனமொன்று சென்ற வேளையில் உடைந்து வாகனம் நகரமுடியாத நிலையில் அவ்விடத்திலேயே நின்று விட்டது. பின்னர் வாகனம் பெரும் சிர மத்தின் மத்தியில் அப்புறப் படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து மதகு உடைந்த நிலையிலேயே போக்குவரத்து இடம்பெறுகிறது. இரண்டு பக்கமும் சிமெந்திலான இரு புருவங்கள் அமைக்கப்பட்ட நிலை யில் வாகனங்கள் அச்சத்தின் மத்தியில் வேகத்தைத் தணித்துச் சென்றுவருகின்றன. அந்தஉடைவுஎந்நேரமும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவகையில் உள்ளது. மழைகாலங்களில் வெள்ளம் இந்த மதகினூடாகத்தான் கடலைச் சென்றடையும். அந்த நேரம் இந்த உடைவு மேலும் பெருத்து வாகனப்போக்குவரத்து முற்றாகத் தடைப் படும் நிலை ஏற்படலாம். அத்துடன் இந்த மதகு முற்றாக உடைந்து நிரவுமானால் மழைநீர் வடிந்தோட முடியாத நிலை ஏற்பட்டு மூளாய்க் கிராம மக்களுக்கும் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படலாம். இந்த வீதி தான் காரைநகர் – யாழ்ப்பாணத்துக்கான கிட்டிய வீதி ஆகும். இத னையே காரைநகர் மக்கள் பெரிதும் பயன்படுத்துகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இதனைக் கவனத் தில் எடுத்து மதகைச் சீர்படுத்தி காரை நகர் மக்களுக்கு ஏற்படக் கூடிய போக்குவரத்துத் தடையையும், மூளாய் கிராம மக்களுக்கு ஏற்படக்கூடிய வெள்ள அபாயத்தையும் தடுப்பார்கள் என நம்புகிறோம்.

*கண்ணன், மூளாய்*

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதுபவர்களின் விபரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன ஆயுதங்களை ஐ.எஸ்.ஐ.எஸ். பாவிக்கும்

## அமெரிக்க உளவுத்துறை எச்சரிக்கை

வொஷிங்ரன், ஒக். 21
மோசூல் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக பெரும் போர் நடைபெற்றுவரும் நிலையில் தமது பின்னடைவைச் சமாளிக்க ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கலாம் என்று அமெரிக்க உளவுத் துறை எச்சரித்தது.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடாக ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரியா இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு அறிவித்து அங்கு தனது கொடூரத்தனமான ஆட்சியை அரங்கேற்றி வருகிறது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரின் பலமாகவும் தலைமையகமாகவும் ஈராக்கின் மோசூல் நகரமே உள்ளது. மோசூலை மீண்டும் அரச வசமாக்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. 30 ஆயிரம் ஈராக் சிப்பாய்கள் உள்ளடங்கலாக கிட்டத்தட்ட 90 ஆயிரம் படையினர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினருக்கு எதிராக களத்தில் உள்ளனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. இதுவரை 10 கிராமங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியிலிருந்து விலகி படையினரின் பக்கம் வந்துள்ளனர். இந்த நிலையில் தமது பின்னடைவைச் சமாளிக்க ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கத் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க உளவுத்துறை எச்சரித்தது. மக்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியிலிருந்து விலகி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்கின்றனர். இது வரவேற்கத்தக்கது. இவ்வாறு அதிகமான மக்கள் குறித்த அமைப்பின் பிடியிலிருந்து விலகி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றால் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தனிமைப்படுத்தப்படும். அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டால் படைகள் தாக்குதல் நடத்த இலகுவாக இருக்கும். இந்த நிலை ஏற்பட்டால் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் ஒரே தெரிவாக இரசாயன ஆயுதங்களே அமையும் என அமெரிக்க உளவுத்துறை மேலும் எச்சரித்தது. (ம-ரி4)



மோசூலில் இருந்து பொதுமக்களை மீட்டுவரும் இராணுவ வீராங்கனை

## சவுதி அரேபிய இ... சாவுத்தண்டனை...

ரியாத், ஒக. 21
சவுதி அரேபியாவில் மன்னரின் ... நிறைவேற்றப்பட்டமை உலக நாடு... துர்கி பின் சாவுத் பின் என்ற இள... தண்டனை நிறைவேற்றப்பட்டது. ச... முன்னர் ஒருவரைச் சுட்டுக்கொ... கைது செய்யப்பட்டார். அவர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து அவருக்குச் சாவுத்தண்டனை நிறைவேற்றப்பட்டது.

கடந்த 40 வருடங்களின் பின்னர் அரச வம்சத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்படுவது இதுவே முதல் தடவை. உலக அளவில் சாவுத்தண்டனை வழங்கும் நாடுகளில் சவுதி அரேபியா முன்னிலை வகித்து வருகின்றது. இந்த வருடம் மாத்திரம், 130 பேருக்கு சவுதியில் சாவுத்தண்டனை வழ... உரிமைகள் அமைப்பு தெரிவித்த...

## மூன்றாவது... மீண்டும் ...

வொஷிங்ரன், ஒக். 21
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக் கான மூன்றாவது நேரடி விவாதத்திலும் ஹிலாரி கிளிங்டன் அபார வெற்றிபெற்றார்.

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் 8




# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்....

அமரர்

## தேவகுஞ்சரி பரம்சோதி

(இடைப்பிட்டி காரைநகர்)



பாதம்பட்ட இடமெல்லாம் பார்த்து மனம் ஏங்குதம்மா!
கண்பார்க்கும் இடமெல்லாம் - உந்தன்
அழகு முகம் தெரியுதம்மா!
காட்டிநின்ற உன் அன்பு கைத்தடியாய்
வழி நெடுக வந்திடாதோ!
கானல் நீராய் எமையெல்லாம் கலங்கவைத்து
போனதென்ன?
எம் பாசம் கசந்ததுவோ ஏங்குதம்மா எங்கள் மனம்
உன் அன்பு பாசத்தை சிந்தையிலே ரசித்தோமே!
இன்று தனியே தவிக்கவிட்டு நீர் மட்டும் எமைப்பிரிந்த
மாயமென்ன?
உன் வதனம் காணாது எம் உள்ளம் வாடுதம்மா
இனி எங்கு காண்போமே
என்ன சொல்லி அழைப்போமே உனை!
வார்த்தை ஏதுமில்லை. எம் துயர் துடைக்க
தேற்றுவார் யாருமின்றி தேம்பி அழுகின்றோம்.
தேடுகின்றன விழியெல்லாம் உம் வதனம்
காணமுடியவில்லை.
ஈர விழிகளுடன் உறக்கம் தொலைத்த இரவுகளுடன்
உங்கள் வரவினில் சாத்தியமில்லை என்றாலும்
மறுஜென்மம் உண்டென்பதை மனதார நம்புகின்றோம்.

தோற்றம்
03.09.1961

மறைவு
16.11.2011

திதி: சஷ்டி (21.10.2016)

354/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
(வெங்கடேஸ்வரா)

(C/15341) (7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவரசருக்கு ...னை நிறைவேற்றம்

...ளரின் மகனுக்கு சாவுத்தண்டனை ...நாடுகளின் கவனத்தைப் பெற்றது. ... இளவரசருக்கே அவ்வாறு சாவுத் ...டது. கடந்த மூன்று வருடங்களுக்கு ...கொன்ற குற்றச்சாட்டில் இளவரசர்



... வழங்கப்பட்டுள்ளது என மனித ...வித்தது. (ம-ரி4)

# வடகொரியாவின் ஏவுகணை தோல்வியில் முடிவடைந்தது

### தென்கொரியா வெளிப்படுத்தல்

வொஷிங்ரன், ஒக். 21



வடகொரியாவின் கண்டம் விட்டுக் கண்டம் தாண்டும் ஏவுகணைச் சோதனை தோல்வியைத் தழுவியதாக தென்கொரியா வெளிப்படுத்தியது.

உலகநாடுகளின் எதிர்ப்பை மீறி வடகொரியா தொடர்ந்து பல ஏவுகணைச் சோதனைகளையும், அணுவாயுதச் சோதனைகளையும் நடத்தி வந்தது. இதுவரை ஐந்து சோதனைகளில் வெற்றிபெற்றுள்ளது. இதனால் உலக நாடுகள் பலவும். ஐக்கிய நாடுகள் சபையும் அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதித்துள்ளன. ஆனால் உலக நாடுகளின் தடைகளைக் கண்டுகொள்ளாத வடகொரியா அணுகுண்டுச் சோதனையும், ஐதரசன் குண்டுச் சோதனையையும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அணுகுண்டுச் சோதனையையும் அவ்வப்போது நடத்தி வருகிறது.

இந்த வரிசையில் வடகொரியா 4 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம்வரை சென்றுதாக்கக்கூடிய ஏவுகணையொன்றை நேற்றுமுன்தினம் சோதித்தது. இது தோல்வியில் முடிந்ததாக அயல் நாடான தென்கொரியா தெரிவித்தது.

குறித்த வகை ஏவுகணைகளை வடகொரியா இது வரை 8 தடவைகள் சோதித்துள்ளது. ஒருதடவை மட்டுமே வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)

# காவிரியிலிருந்து நீர் வராவிட்டால் தமிழ்நாட்டிலிருந்து மின்சாரம் வராது

### விவசாயிகள் நேற்றுப் போராட்டம்

காவிரி விவகாரம் இன்னும் முற்றுப் பெறாமல் நீண்டுகொண்டு செல்லும் நிலையில், காவிரியிலிருந்து (கர்நாட காவிலிருந்து) நீர் வராவிட்டால் தமிழ் நாட்டிலிருந்து மின்சாரம் வழங்கக் கூடாது என்று தெரிவித்து தமிழ்நாட்டு விவசாயிகள் பலர் நேற்றுப் போராட்டங்களை நடத்தினர். காவிரி விவகாரத்தைக் கையாள காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு அமைக்க வேண்டும் எனப் பலதரப்பிடமும் இருந்து அழுத்தம் கொடுக்கப் பட்டது. ஆனால் மத்திய அரசு இந்த விவகாரத்தில் தலையிடாமல் பின் வாங்கியது. மத்திய அரசின் முடிவைக் கண்டித்து தமிழ்நாட்டில் புல இடங் களிலும் போராட்டங்கள் முன்னெடுக் கப்பட்டன.

ஆயிரக் கணக்கானோர் கைது செய்யப் பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

காவிரியிலிருந்து தமிழ் நாட்டுக்கு கர்நாடகா தண்ணீர் தராவிட்டால் நெய்வேலியிலிருந்து கர்நாடகாவுக்கு தமிழ்நாடு மின்சாரம் வழங்கக்கூடாது என வலியுறுத்தி தமிழ் நாட்டு விவசாயிகள் ஆயிரக் கணக்கானோர் நேற்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து வந்த விவசாயிகளே அவ்வாறு ஆர்ப் பாட்டங்களில் ஈடுபட்டனர். பொலிஸாருடன் முரண்படும் வகையில் நடந்துகொண்ட ஐநூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கைது செய் யப்பட்டனர். (ம-ரி4)

# ...வது நேரடி விவாதம்; ... வென்றார் ஹிலாரி



...ஆம் திகதி நடைபெறவுள்ளது. குடி...யரசுக் கட்சியின் தலைமை வேட்பா...ளராக டொனால்ட் ட்ரம்ப்பும், ஜனநாய...க் கட்சியின் பிரதான வேட்பாளராக ...ஹிலாரி கிளிங்டனும் உள்ளனர். ...தேர்தல் களங்கள் சூடு பிடித்துள் என. ...ஜனாபதித் தேர்தலுக்கான மூன்றா...வதும் இறுதியானதுமான நேரடி ...விவாதம் நேற்று நடை பெற்றது. ...ஆயிரத்து 503 பேர் வெற்றியைத் ...தீர்மானிக்கும் வாக்குரிமையைப் ...பெற்றிருந்தனர். அதிகப்படியான ...வாக்குகளைப் பெற்று ஹிலாரி வெற்றி பெற்றார். முன்னதாக முடிவடைந்த முதல் இரு நேரடி விவாதங்களிலும் ஹிலாரியே வெற்றி பெற்றார். மெக்சிகோ நாட்டவர்கள் தவறானவர்கள், ஹிலாரி கேவலமான பெண் மற்றும் தேர்தலில் தோற்கும் பட்டசத்தில் தேர்தல் முடிவை நான் ஏற்கமாட்டேன் என ட்ரம்ப் தெரிவித்தார். ரஷ்யாவுடனான ட்ரம்பின் நட்பு தொடர்பாக ஹிலாரி கடுமையாக விமர்சித்தார். புடினின் கைப்பொம்மையாக ட்ரம்ப் இருப்பார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-ரி4)



# சீனா - பிலிப்பைன்ஸ் உறவு பலப்படுகிறது

பீஜிங், ஒக். 21

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி றொட்றிக்கோ டுடேர்தே சீனாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

அமெரிக்காவுடன் முரண்பட்டுள்ள பிலிப்பைன்ஸ், தனது ஆயுத பலத்தை உறுதிப்படுத்த ரஷ்யாவையும், சீனாவையும் நாடியது. ரஷ்யாவும் பிலிப்பைன்ஸுக்கு ஆயுதத்தை விற்கத் தயார் எனத் தெரிவித்தது. இதனையடுத்து சீனாவுடனும் தனது உறவை பலப்படுத்திக் கொள்ள விருப்பம் தெரிவித்த பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டுடேர்தே, நான்கு நாள்கள் பயணமாக நேற்று சீனாவுக்குச் சென்றார். அவருக்கு அங்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

அமரிக்காவுடனான அனைத்து இராணுவ உறவுகளையும் பிலிப்பைன்ஸ் முறித்துக் கொள்ளவுள்ளது. சீனாவிலிருந்து எமக்கு உதவிகள் தேவை. முன்னர் பிலிப்பைன்ஸ் - சீனாவுக்கிடையில் இருந்த முரண்பாடுகளை முற்றாக களைந்து செயற்படுவோம். நட்பு ஒப்புரவு அடிப்படையில் இந்தப் பயணத்தை நான் மேற்கொண்டுள்ளேன் என டுடேர்தே தெரிவித்தார். தவிர, தென்சீனக் கடல் விவகாரத்தில் பிலிப்பைன்ஸ்- சீனா பரஸ்பரம் உரிமை பாராட்ட உள்ளமையால் அது ஏனைய நாடுகளுக்குச் சிக்கலாகவும் அமையும் என்று கணிக்கப்படுகிறது. (ம-ரி4)

பஸ் டிக்கட் வாங்க வரிசையில் காத்திருக்க வேண்டிய அவசியம் இப்போது இல்லை

எந்தவொரு நேரத்திலும் எந்தவொரு இடத்திலிருந்தும் Dialog மொபைலில்

444 க்கு அழைத்து பஸ் டிக்கட்டுக்களை முன்பதிவு செய்துக்கொள்ளுங்கள்



இந்த சேவையின் மூலம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், அனுராதபுரம், கண்டி, காலி மற்றும் இன்னும் அதிகமான நகரங்களுக்கு பிரயாணிக்க பஸ் ஆசனங்களை முன்பதிவு செய்துக்கொள்ள முடியும்.

Dialog
எதிர்காலம் இன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்ரோபர் மாத எண் பலன்



### 3, 12, 21, 30 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு

இந்த மாதம் எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் ஓரளவு நிம்மதி உண்டு. பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். அழகு, இளமை கூடும். ஓரளவு பணவரவு உண்டு. உங்கள் ரசனைக்கேற்ப வீட்டை விரிவுப்படுத்திக் கட்டுவீர்கள். சகோதரருக்கு இருந்த பிரச்சினை தீரும். பழைய இடத்தை விற்று புது வீடு வாங்குவீர்கள். வழக்கில் திருப்பம் ஏற்படும்.

மாதத்தின் நடுப் பகுதியில் பல விடயங்களையும் போராடி முடிக்க வேண்டி வரும். மற்றவர்களை நம்பி பெரிய வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். உறவினர், நண்பர்கள் விடயத்தில் அத்துமீறித் தலையிட வேண்டாம். கடந்த ஓராண்டு காலமாக இலாப வீட்டில் நின்றிருந்த ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். முன்பின் அறியாதவர்களிடம் குடும்ப அந்தரங்க விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். அரசியல்வாதிகள் சகாக்களைப் பற்றிக் குறைக் கூற வேண்டாம்.

**கன்னிப் பெண்கள்:**
தமது தடைப்பட்ட உயர்கல்வியைத் தொடர வாய்ப்புக் கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு இலாபம் சம்பாதிப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரித்தாலும் தலைமையின் நம்பிக்கையைப் பெறு வீர்கள். வர வேண்டிய சம்பள மீதியைப் போராடிப் பெறுவீர்கள். கலைத் துறையினரின் கற்பனைத் திறன் வளரும். புதிய திட்டங்கள் நிறைவேறும் மாதம் இது.

அதிர்ஷ்ட திகதிகள்: 3, 12, 10, 12,27
அதிர்ஷ்ட எண்கள்: 1, 4
அதிர்ஷ்ட நிறங்கள்: ஊதா, க்ரீம் வெள்ளை
அதிர்ஷ்ட கிழமைகள்: புதன், சனி

### 4, 13, 22, 31 ஆகிய திககளில் பிறந்தவர்களுக்கு

இந்த மாதத்தில் இழுபறியாக இருந்த வேலைகள் உடனே முடியும். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகள் வீட்டில் ஏற்பாடாகும்.சமூகத்தில் மதிப்பு, மரியாதை கூடும். புது வீடு கட்டி குடிபுகுவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அதிகாரப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். புதுச்சொத்து சேரும். அரசால் அனுகூலம் உண்டு. என்றாலும் பிள்ளைகளை அதிகம் செலவு செய்து அவர்கள் விரும்பிய பாடப்பிரிவில் சேர்ப்பீர்கள். உறவினர் வீட்டு விசேட நிகழ்வுகளை முன்னின்று நடத்துவீர்கள். விலை உயர்ந்த தங்க ஆபரணம் வாங்குவீர்கள். வெளிநாடு, அண்டை மாநிலங்கள் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும். புது வேலைக்கு முயற்சி செய்தால் நல்ல பதில் வரும். குடும்பத்தினருடன் உல்லாசப் பயணம் சென்று வருவீர்கள். அரசியல்வாதிகளுக்கு கட்சி தலைமைகள் உங்களை நம்பிப் பெரிய பொறுப்புக்களை ஒப்படைப்பார்கள்.

**கன்னிப் பெண்களின்:**
உங்களின் புது முயற்சிகளை பெற்றோர் ஆதரிப்பார்கள். வியாபாரத்தில் புது யுக்திகளைக் கையாளுவீர்கள். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருந்த அலட்சியப் போக்கு மாறும். மேலதிகாரிகள் உங்களைப் புரிந்துக் கொண்டு வலிய வந்து உதவுவார்கள். கலைத்துறையினர்களே! வருமானம் உயர வழி பிறக்கும். எதிர்பாராத திடீர் திருப்பங்கள் நிறைந்த மாதமிது.

அதிர்ஷ்ட திகதிகள்: 4, 1, 6, 8, 15
அதிர்ஷ்ட எண்கள்: 5, 7
அதிர்ஷ்ட நிறங்கள்: இளம் சிவப்பு, சில்வர் கிரே
அதிர்ஷ்ட கிழமைகள்: ஞாயிறு, வெள்ளி

**நாளை**
**ஐப்பசி-06**
சனிக்கிழமை -22.10.2016
திதி: ஸப்தமி மு.இ. 07.41
நட்சத்திரம்: புநர்பூசம் பி.இ.02.56
ராகுகாலம்: 09.02-10.32 வரை
சுபநேரம்: 03.02-04.32 வரை

# புத்தி மாறவில்லையே

புதிய அரசமைப்பை உருவாக்கும் பணி இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அடுத்த மாதம் இடைக்கால வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. அதன் பின்னர் இந்த நாட்டிலுள்ள மக்களிடம், பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மக்கள் அங்கீகாரம் வழங்கினாலேயே புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரும்.

புதிய அரசமைப்பில் தமிழ் மக்களால் ஏற்கக்கூடிய தீர்வுகள் இல்லாதபோதும், தங்களைத் தாங்களே ஆளு கின்ற அதிகாரங்கள் எதுவும் வழங்கப்படாத போதும், புதிய அரசமைப்புக்கு ஆதரவாக அவர்கள் பொது வாக்கெடுப்பில் ஒரு போதும் வாக்களிக்க மாட்டார்கள். ஆனால், தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய புதிய அரசமைப்பு வருமாக இருந்தால் அதற்கு ஆதரவாக வாக்களிப்பார்கள்.

நிலைமை இவ்வாறுதான் இருக்கின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இரு தேசம் ஒரு நாடு என்ற கோட்பாட்டுடன் களமிறங்கிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகக் களமிறங்கிய கஜேந்திரகுமாரினால், பெரும்பான்மைக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியது. ஒற்றுமைக்கு வேட்டு வைக்க கிளம்பிய அவர், அதில் ஓரளவு வெற்றியையும் பெற்றுக் கொண்டார். அதுதான் கூட்டமைப்புக்கு வரவேண்டிய ஆசனத்தை, ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாரை வார்த்தது எனலாம்.

இப்போதும், தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு வேட்டு வைக்கின்ற காரியங்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது தனது காழ்ப்புணர்வு விமர்சனங்களைக் காறி உமிழ்ந்து கொண்டேயிருக்கின்றார். அவர் அண்ணாந்து பார்த்துக் கொண்டு எச்சில் துப்புகின்றார் என்பதை மறந்து விட்டார்போல் தெரிகின்றது.

சிங்களத் தலைவர்களுடன் சரணடைந்து போன, தேசியக் கொடியில் சிறுபான்மையினத்துக்கு அங்கீகாரம் கிடைக்காது இல்லாதொழித்தபோது அங்கீகரித்த, சிங்கள அரசில் அமைச்சுப் பதவிபெற்று அதனுடன் இரண்டறக் கலந்துபோன, தனது மூதாதையர்களை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மறந்திருக்க நியாயமில்லை. தமிழர்களின் இந்த இழிவு நிலைக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் மூதாதையர்களின் அரசியல் முதிர்ச்சியற்ற முடிவுகளே காரணம்.




அத்தகைய முடிவுகளையே கூட்டமைப்பும் எடுக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். அதனால்தான் கூட்டமைப்பு ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்கின்றது, பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதை அங்கீகரிக்கின்றது என்று பதற்றப்பட்டுச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாகத் தனது நிலைப்பாட்டைத் திரும்பத் திரும்பச் சொன்னாலும், செவிடன் காதில் ஊதிய சங்கு போல் கஜேந்திரகுமாருக்கு ஏறுவதில்லை. கூட்டாட்சி அடிப்படையிலேயே தீர்வு அமைய வேண்டும் என்பதை கூட்டமைப்பு அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வருகின்றது. பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதற்கு கூட்டமைப்பு இணங்கியதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்தை, கூட்டமைப்பு மறுத்திருந்தது. அவ்வாறு இணங்கவில்லை என்று சொல்லியிருந்தது.

இவ்வாறு சொல்லிய பின்னரும், கூட்டமைப்பு ஒற்றையாட்சிக்குள் தீர்வு காண்பதற்கு இணங்கியதாகவும், பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்க ஒத்துக்கொண்டதாகவும் கஜேந்திரகுமார், தேய்ந்துபோன றெக்கோட் போன்று மீண்டும் மீண்டும் ஏன் தெரிவித்து வருகின்றார்? இதற்கு ஒரே காரணம்தான் இருக்கக்கூடும். கூட்டமைப்பின் மக்கள் ஆதரவைச் சிதைப்பதுதான் அது. தனது அரசியல் எதிர்கால இருப்பு கேள்விக்குறியாகிக் கொண்டு செல்வதால், கூட்டமைப்பு மீது சேறடிப்பதே ஒரே வழி என்று அவர் தெரிவு செய்திருக்கக் கூடும்.

கூட்டமைப்பின் ஊடாக தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைத்தால், குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் இவர்கள் போன்றவர்களுக்கு அரசியல் எதிர்காலம் என்பதே இருக்காது. இதனால்தான், தனது அரசியல் மூதாதையரின் சிந்தனையில் இருந்து கொண்டு அவர் சிந்திக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# மக்களை கண்டு கொள்ளாத வடக்கு மாகாணசபை




வடபகுதியின் பாதுகாப்பும் கேள்விக்குறியாக மாறி நிற்கின்றது. வாள்வெட்டுச் சம்பவங்கள் இடையில் சிறிது காலம் ஓய்ந்திருந்த நிலையில், மீண்டும் தலைதூக்கிக் காணப்படுகின்றன. போர் காரணமாக வீடுகளை இழந்தவர்களுக்கு மாற்று வீடுகளை வழங்க வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. ஆனால், பொருத்து வீடுகளா? அல்லது கல்வீடுகளா? என்ற விவாதம்தான் இங்கு இடம்பெற்று வருகின்றது. அனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போன்று நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்துள்ள விவகாரம் கிணற்றினுள் போட்ட கல்போன்று சலனம் எதுவுமின்றிக் காணப்படுகின்றது.

வடக்கு மாகாணசபைக்குப் புதிய பிரதி அவைத்தலைவரை நியமிப்பதில் ஆளுங் கட்சிக்குள் வழக்கம்போன்று குழப்பங்கள் நீடிப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கூட்டமைப்பினுள் இத்தகைய குழப்பங்கள் நிலவுவது ஒன்றுமே புதிய விடயமல்ல.

வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் இடம்பெற்றபோது அபேட்சகர்களைத் தெரிவுசெய்வதிலும், அதன் பின்னர் அமைச்சர்களை நியமிப்பதிலும் பெரும் இழுபறியே நிகழ்ந்தது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமைகளுக்குப் போராடுவதைவிடத் தமது பதவிச் சுகங்களுக்கு மாகாணசபை உறுப்பினர்கள் முன்னுரிமை வழங்குவது இதன் மூலமாகத் தெளிவாகத் தெரிகின்றது.

தமிழர்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெறுவதற்காகவும் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகவுமே, நாடாளுமன்றத்துக்கும், மாகாண சபைக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்பி வைக்கின்றனர்.

வடக்கு மாகாண சபைக்கு இடம்பெற்ற தேர்தல் வடக்கு மக்களைப் பொறுத்தவரையில் நீண்டகால எதிர்பார்ப்புக்களுக்கிடையில் நடந்தேறிய ஒன்று. நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் மாகாணசபைத்தேர்தல்கள் இடம்பெற்றபோதிலும், வடக்கு மாகாணம் நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்தது.

இலங்கை அரசின் இனப் பாகுபாடு காரணமாகவே வடக்கில் தேர்தல்கள் இடம்பெறவில்லை. நீண்ட இழுபறியின் பின்னர் மகிந்த அரசு தேர்தலை நடத்த முன்வந்தது. இது சுயமாக எடுக்கப்பட்டதொரு முடிவல்ல. வெளிநாடுகள் மற்றும் இந்தியாவின் வற்புறுத்தல் காரணமாகவே மகிந்த அரசு தேர்தலை நடத்தியது. தேர்தல் இடம்பெற்றபோது அச்சுறுத்தும் சம்பவங்கள் பல இடம்பெற்றன. ஆனால், மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியை ஈட்டியது. மாகாண அரசு தொடர்பான மக்களின் எதிர்பார்ப்பும் அதிகரித்தது.

ஆனால் அதற்குப் பின்னர் நடந்தவை வெறுப்பின் உச்சத்துக்குக் கொண்டு சென்று விட்டது. மாகாண சபைத் தேர்தலின்போது, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகிய கட்சிகள் ஓர் அணியில் இணைந்து போட்டியிட்டன. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான ஆனந்தசங்கரியால் வெற்றி பெறுவதற்கான விருப்பு வாக்குகளைப் பெற முடியவில்லை. அதனால் அவர் தோல்வியைத் தழுவிக் கொண்டார். அதன்பின்னர் அவர் கூட்டமைப்பிலிருந்து விலகியும் கொண்டார். ஏனைய கட்சிகள் கூட பதவிகளுக்காகவே கூட்டமைப்பாக இயங்கி வருகின்றமை தெளிவாகத் தெரிகின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமக்கு தேசியப்பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்காததையிட்டுக் கடுமையான கோபத்தை வெளிப்படுத்தினார். கூட்டமைப்பையும் அதன் தலைவரான சம்பந்தனையும் சாடுவதற்கும் அவர் தயங்கியதில்லை. அவரது எண்ணம் நிறைவேறாத கனவாகவே முடிந்து விட்டது. அதன்பின்னர் சம்பந்தனைக் குறை கூறுவதை ஒரு வழக்கமாகவே அவர் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் பேரவையின் தோற்றமும் கூட்டமைப்பினுள் சலசலப்பை ஏற்படுத்திவிட்டது. கூட்டமைப்பிலுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் பேரவைக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன. இதுவும் கூட்டமைப்பின் ஐக்கியத்துக்கு உகந்ததாகத் தெரியவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அண்மைக் கால நடவடிக்கைகள் திருப்தி தருவனவாக அமைந்திருக்கவில்லை. கூட்டமைப்பிலிருந்தும், அவரைப் பதவியில் நிறுத்திய தமிழ் அரசுக் கட்சியிலிருந்தும் அவர் விலகி நிற்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. இவையாவும் கூட்டமைப்பின் ஒற்றுமையைக் குலைத்து விடுகின்ற செயல்களாகும்.

இதேவேளை வடக்கு மாகாணசபையைப் பொறுத்தவரையில் ஏனைய மாகாண சபைகளுடன் ஒப்பிட முடியாத அளவுக்கு வேறுபட்டுக் காணப்படுகின்றது. ஏனென்றால் வடக்கில் வாழ்கின்ற மக்கள் நீண்டகாலமாகத் தொடர்ந்து இடம்பெற்ற போரால் பாதிக்கப்பட்டவர்கள். இழப்புகளைச் சந்தித்தவர்கள். இவர்களில் பலர் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாத நிலையில் அகதி வாழ்வு வாழ்கின்றனர். இவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. அரசு வாக்குறுதிகளை வழங்குவதுடன் தனது கடமை முடிந்து விட்டதாகக் கருதி வருகின்றது. இவர்களுக்கு ஜனாதிபதியால் வழங்கிய வாக்குறுதிகள்கூட வெறும் வார்த்தை அளவிலேயே நின்றுவிட்டன. இதைவிட வடபகுதியில் தொழில் வாய்ப்பின்றிப் பலர் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு வறுமையான சூழலில் வாழ்கின்றனர். வேறு ஆள்களின் வருகையால் வடபகுதி மீனவர்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். வடபகுதியின் வர்த்தகச் செயற்பாடுகள் கூட தென்பகுதியிலிருந்து வருகை தருபவர்களால் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டன. வடபகுதியின் பாதுகாப்பும் கேள்விக்குறியாக மாறி நிற்கின்றது. வாள்வெட்டுச் சம்பவங்கள் இடையில் சிறிது காலம் ஓய்ந்திருந்த நிலையில், மீண்டும் தலைதூக்கிக் காணப்படுகின்றன. போர் காரணமாக வீடுகளை இழந்தவர்களுக்கு மாற்று வீடுகளை வழங்கவேண்டிய தேவை அதிகரித்துள்ளது. ஆனால், பொருத்து வீடுகளா? அல்லது கல்வீடுகளா? என்ற விவாதம்தான் இங்கு இடம்பெற்று வருகின்றது. அனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போன்று நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்துள்ள விவகாரம் கிணற்றினுள் போட்ட கல்போன்று சலனம் எதுவுமின்றிக் காணப்படுகின்றது.

இவ்வாறு ஏராளமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாத நிலையில், வடபகுதி மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கும்போது வடக்கு மாகாண அரசு தேவையற்ற விடயங்களில் தனது கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கின்றது. தற்போது பிரதி அவைத் தலைவரை நியமிப்பதில் குழம்பிக் கொண்டிருக்கின்றது. ஏற்கனவே வடக்கு மாகாணசபை மீது மக்கள் நம்பிக்கையிழந்து விட்டனர். ஆனால், மாகாண அரசு இதைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. தன்னைத் திருத்துவதாகவும் தெரியவில்லை. ஆனால், மக்கள் நல்லதொரு தீர்ப்பை எதிர்காலத்தில் வழங்கப்போகின்றார்கள் என்பதுதான் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சித மான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமை களில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.





கிரிதரன் வரப்பிரகன்,
தரம் 2 F
புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.



சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற் கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1512 - விற்றன்பேர்க் பல்கலைக்கழக வேதாந்த பீடத்தில் மார்டின் லூதர் கிங் இணைந்து கொண்டார்.
1824 - போட்லந்து சிமெந்துக்குரிய காப்புரிமத்தை, யோசப் சப்டின் பெற்றுக் கொண்டார்.
1854 - புளோரன்ஸ் நைற்றிங்கேலும் 38 தாதியர்களும் கிரிமியன் போர்ப் பிரதேசத்துக்கு அனுப்பப்பட்டனர்.
1895 - பேர்மோஸா குடியரசு ஜப்பானியப் படையின் ஆக்கிர மிப்பையடுத்து வீழ்ச்சியடைந்தது.
1943 - சுபாஸ் சந்திரபோஸினால் சுதந்திர இந்தியாவுக்கான தற் காலிக அரசு, முறைப்படி பிரகடனப்படுத்தப்பட்டது.
1945 - பிரான்ஸில் முதற் தடவையாக பெண்களுக்கான வாக்களிப்பு உரிமை வழங்கப்பட்டது.
1977 - ஐரோப்பிய காப்புரிமை நிறுவனம் உருவாக்கப்பட்டது.
1987 - சிறிலங்காவில் இந்திய அமைதிப் படையால் 70 வரையான தமிழ் நோயாளர்கள், மருத்துவர்கள், தாதிகள் கொல் லப்பட்டனர்.
1994 - தென்கொரியாவில் சியோங்கு பாலம் உடைந்ததில் 32 பேர் உயிரிழந்தனர்.
1992 - பருத்தித்துறைக் கடலில் மீனவர்கள் மீது தாக்குதல்.
- உடுப்பிட்டி, வல்வையில் பொம்மர்கள் குண்டு வீச்சு.
- மட்டக்களப்பில் 20 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.
2004 - அடுத்த நாள் முதல் முதல் உதயன் விலை 2 ரூபாவால் அதி கரிப்பு என நிர்வாகம் அறிவிப்பு. தற்போதைய விலை 8 ரூபா.
- அரசியல் புள்ளிகளின் குட்டுக்கள் அம்பலமாகும் என்பதாலேயே வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டதாக த.தே.கூ எம்.பி ஈழவேந்தன் கருத்து.
2007 - வடக்கை அரசு தாக்கினால் 4 லட்சம் பேர் இடம்பெயர்வர் என ஐ.நா. பொதுச் செயலருக்கு அறிக்கை.
- வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி இளம் குடும்பஸ்தர் கடத்தப்பட்டார்; பொலிகண்டியில் சம்பவம்.

## விடுகதைகளும் விடைகளும்

1. சுளகு நிறையப் பொரி, விடியப் பார்த்தால் ஒன்றுமில்லை. அது என்ன?
   வெள்ளி (நட்சத்திரம்)
2. உச்சிக் கொப்பில் உலக்கை தொங்குது. அது என்ன?
   முருக்கங்காய்
3. உரிச்ச புறா சந்தைக்குப் போகுது அது என்ன?
   தேங்காய்
4. நான் ஆற்றில் இருக்கிறேன், நீ கொப்பில இருக்கிறாய், அந்தியில் சந்திப்போம். அது என்ன?
   மீனும், புளியம்பழமும்.
5. காட்டுக்குள் கறுப்பியும் சிவப்பியும் நின்று கைகாட்டுகிறார்கள். அது என்ன?
   ஈச்சங்காயும், பழமும்.

சிவலோகநாதன் விமாகி,
யா / கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

## முயற்சி நற்பலனைத் தரும்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந் தான் கண்ணன். அவன் வகுப்பில் சராசரி மாணவனாகவே காணப்பட்டான். இதனால் அவனது பெற்றோர் அவனை எந்த எந்த நேரமும் படி படியென வற் புறுத்திக் கொண்டே இருப்பார்கள்.

கண்ணனின் வகுப்பாசிரியருக்கு அவனிடம் பிரியம் அதிகம். அவனது அமைதியான சுபாவமும், கீழ்ப்படியும் தன்மையும் இதற்கான பிரதான காரணமாகும். அவரும் நன்கு படித்து பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றுச் சித்தியடைய வேண்டுமென அவனிடம் அடிக்கடி கூறுவார்.

கண்ணனுக்குத் தான் பாடங்களில் அதிக புள்ளிகள் பெறுவதில்லையே என்ற கவலை அடிக்கடி எழும். ஒரு நாள் வெள் ளிக்கிழமை அதிகாலை அவன் அவ்வூ ரில் அமைந்துள்ள அம்மன் ஆலயத் துக்குச் சென்றான். அந்த ஆலயம் அவனது வீட்டுக்கு மிக அருகில் இருந் ததால் எதுவித அச்சமுமின்றி அவன் அங்கு சென்றான். அப்போது தான் ஆலயத்துக்கு வந்த அர்ச்சகர் அம்மன் விக்கிரகத்துக்குத் தீபம் காட்டிக் கொண்டிருந்தார். உடனே கண்ணன் இரு கரம் கூப்பி அம்மனை வணங்கினான். தாயே! எனக்குக் கல்விச் செல்வத்தைக் கொடு, நான் பரீட்சையில் சித்தி யடைவதற்கு அருள் புரி வாய் தாயே! என மன முருகி வணங்கி னான்.



இதன் பின்னர் கண்ணனிடம் பெரும்மாறுதல் காணப்பட்டது. அவன் எந்த நேரமும் பாடங்களைப் படிப்பதிலேயே கவனம் செலுத்தினான். அந்த மாதம் இடம்பெற்ற வகுப்புப் பரீட் சையில் அவனுக்கு அதிக புள்ளி கள்கிடைத்தன. இதைக் கண்டு அவ னது வகுப்பாசிரியாரும் பெற்றோரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

கண்ணன் இரவும், பகலும் பாடங்களைக் கற்பதில் அதிக ஆர்வத்துடன் ஈடு பட்டு வந்தான். புலமைப் பரிசில் பரீட்சையும் வந் தது. கண்ணன் அம்மனை வணங்கிவிட்டுப் பரீட்சை எழுதச் சென்றான். சிறந்த பெறுபேறு கிடைக்குமென்ற நம் பிக்கை அவனிடம் ஏற்பட்டது.

முடிவுகளும் வெளிவந்தன. கண்ணன் அதிக புள்ளிகளைப் பெற்று மாவட்டத் திலேயே முதல மாணவனாகத் தேர்ந் தெடுக்கப்பட்டான். இதையறிந்து பலரும் அவனைப் புகழ்ந்தனர். பரிசில்களும் ஏராளமாகக் குவிந்தன. அவனது ஆசி யருக்கும், பெற்றோருக்கும் ஏகப்பட்ட மகிழ்ச்சி.

கண்ணன் தனது பெற்றோரையும் அழைத்துக் கொண்டு அம்மன் ஆல யத்துக்குச் சென்று வணங்கினான். அம் மனுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்தான். எதிர்காலத்தில்தான் உயர்ந்த கல்வியைக் கற்பதற்கு அம் மனின் அருளையும் வேண்டிக் கொண் டான்.

ப.நிவேதிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதல்வர் ஜெயலலிதா நலம் பெற யாகம் நடத்தும் நடிகர்

சென்னை அப்பலோ மருத்துவமனையில் கடந்த செப்ரெம்பர் 22ஆம் திகதி முதல் உடல் நலம் பாதிக்கப்பட்டு முதல்வர் ஜெயலலிதா சிகிச்சை பெற்று வருகிறார். இந்த நிலையில் முதல்வர் குணமடைய வேண்டி இன்று அண்ணாசாலை ஜெமினி மேம்பாலம் அருகில் உள்ள வர்த்தக சபைக் கட்டடத்தில் யாகம் நடத்தத்தென்னிந்தியநடிகர்சங்கம்முடிவுசெய்துள்ளதாகத்தகவல்வெளியாகியுள்ளது. சென்னை அப்பலோ மருத்துவமனையில் கடந்த செப்டம்பர் 22ஆம் திகதி முதல் உடல் நலம் பாதிக்கப்பட்டு முதல்வர் ஜெயலலிதா சிகிச்சை பெற்று வருகிறார். இந்த நிலையில் திரைப்படத்துறை சார்பில் நடிகர் சங்கத் தலைவர் நாசர், தாணு, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் ஆகியோர் நலம் விசாரித்து வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மிருத்யுஞ்ஜய மூல மந்திர ஜெபம் மற்றும் மஹா மிருத்யுஞ்சய யாகம். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடக்கும். இதில் 30 சிவாச்சாரியார்கள் கலந்து கொண்டு ஒரு லட்சத்து 25 ஆயிரம் மிருத்யுஞ்ஜய மந்திரத்தை ஓதுகிறார்கள். இதில் திரையுலகினர் கலந்து கொள்ள வேண்டும் என்றும் யாகத்துக்கு வருபவர்கள் கைப்பேசிகளையும், அநாகரிக உடைகளையும் தவிர்க்க வேண்டும் என்றும் திரைப்பட வர்த்தக சபை கேட்டுகொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

## சுடோக்கு எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | 7 | 6 | | 1 | | |
| | | | | 8 | | | | |
| | | 6 | | | | | 7 | 2 |
| | | 9 | | | | 2 | 4 | |
| | 1 | | | | | 5 | | 3 |
| | | 4 | | | | | | |
| | | 2 | | | 7 | | | |
| | | 7 | 8 | 1 | | | 9 | |
| 3 | | | | | 5 | 7 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 5 | 2 | 8 | 4 | 1 | 7 | 3 |
| 8 | 7 | 2 | 9 | 1 | 3 | 5 | 4 | 6 |
| 1 | 4 | 3 | 5 | 6 | 7 | 2 | 8 | 9 |
| 3 | 5 | 4 | 8 | 7 | 9 | 6 | 2 | 1 |
| 6 | 2 | 8 | 3 | 4 | 1 | 7 | 9 | 5 |
| 7 | 1 | 9 | 6 | 5 | 2 | 4 | 3 | 8 |
| 5 | 3 | 7 | 1 | 2 | 8 | 9 | 6 | 4 |
| 2 | 9 | 6 | 4 | 3 | 5 | 8 | 1 | 7 |
| 4 | 8 | 1 | 7 | 9 | 6 | 3 | 5 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** பேச்சில் நிதானம் தேவைப்படும். தொழில், வியாபாரத்தில், கூடுதல் பணிச்சுமை உருவாகும். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**இடபம்:** மனதில் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். சுப விடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும். ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள்.

**மிதுனம்:** எதிர்பார்த்த சுப செய்தி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.

**கடகம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும். பெண்கள், புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு. மாணவர்கள், ஆர்வத்துடன் படிப்பர்.

**சிங்கம்:** குடும்பத்தினரின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். பெண்கள், கணவரின் அன்பைபெறுவர். மாணவர்கள், படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர்.

**கன்னி:** குடும்ப விடயம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவது நல்லது. எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள், ஆடம்பர பொருள்கள் வாங்குவர்.

**துலாம்:** குடும்பத்தினரின் அன்பைக் கண்டு நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வாகனத்தில், மித வேகம் பின்பற்றுவது நல்லது.

**விருச்சிகம்:** நல்லவர்களின் நட்பை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி சிறப்பாக நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** பொறுமையால் நன்மை அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில், லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள், குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடுவர்.

**மகரம்:** எவருக்கும், தகுதிக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில், தடங்கல் குறுக்கிட வாய்ப்புண்டு. லாபம் சுமாராக இருக்கும். மனைவியின் செயற்பாடு, நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**கும்பம்:** குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடு உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெண்கள், நகை பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**மீனம்:** எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். குடும்பத்தினரின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.













**வெங்கி** @VenkysTwitts · 28 Oct 2015

எழுதப்படிக்கத் தெரியாத எத்தனையோ பேர்களில் எமனும் ஒருவன். ஓர் அழகிய கவிதைப் புத்தகத்தை கிழித்துப் போட்டு விட்டான் கண்ணதாசன் இறந்த போது வாலி சொன்னது.

86 56




"இந்த மிச்சர் பாக்கெட் என்ன விலை?"
"பத்து ரூபா." "லூசுன்னா எவ்ளோ?"
"எல்லாருக்கும் ஒரே விலை தான்பா."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 60 | 40 | 50–60 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 50 | 60 | 40 | 50–60 | 50 | 90 | 35 |
| கரட் | 80 | 80 | 100–140 | 100 | 120–140 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 60 | 70 | 50 | 50–60 | 50–60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 80 | 50 | 80 | 140 | 80–100 | 160 | 100 | 60 |
| பாகல் | 100 | 110 | 160 | 180 | 160–180 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 80 | 80 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 80 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 80–100 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 30 | 30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 60 | 60 | 50 | 80 | 70–80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 60 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 10 | 20 | 30 | 20 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 70 | 80 | 70 | 80–70 | 100 | 200 | 70 |
| புடோல் | 40 | 40 | 60 | 50 | 60 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 100 | 80 | 120 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 200 | 160 | 180 | 180 | 180–200 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 80 | 120–140 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 30 | 45 | 30 | 25–30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 120–140 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 500 | 600 | 600 | 300 | 480–520 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 100 | 160 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 170 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 80 | 80 | 100–120 | 200 | 80 | 100 |

## இது புதுசு

கறிச் சட்டியை இறக்கி வைக்கும் உலோக தாங்கி அறிமுகமாகியுள்ளது. சூடான பாத்திரங்களை தாங்கியில் இறக்கி வைக்க முடியும். அதனால் மேசையில் அழுக்கு, ஈரம் படுவது தவிர்க்கப்படும். இது 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. முன்னர் பனை ஓலையால் செய்த திருகாணிகள் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க தாகும்.





# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | 700 | 800 | 800 | 600 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 500 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 700 | 400 | – |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 600 | 500 | – |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 800 | 700 | – |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 400 | 300 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 450 | 500 | 600 |
| முரல் | 300 | 350 | 300 | 500 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 500 | 600 | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 450 | 300 | 400 |
| திரளி | 300 | 250 | 100 | 150 | 300 | 300 | 350 |
| நகரை | 250 | 250 | 100 | 250 | 300 | 250 | 400 |
| சூடை | 150 | 130 | 100 | 200 | 120 | 200 | – |
| ஓட்டி | 300 | 250 | 200 | – | 300 | 300 | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 500 | 200 | 130 |
| மதனம் | 150 | 150 | – | 400 | 350 | 300 | 300 |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 80 | 70 | – |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 400 | 300 | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 300 | 250 | – |

# மரவள்ளிக் கிழங்கு பாயசம்



**தேவையான பொருள்கள்**

மரவள்ளிக்கிழங்கு - அரை கிலோ
உப்பு - ஒரு சிட்டிகை
சர்க்கரை - 100 கிராம்
ஏலக்காய் - ஒன்று
தேங்காய் - கால் மூடி

**செய்முறை**

மரவள்ளிக் கிழங்கை துருவி வைத்துக் கொள்ளவும்.

துருவிய கிழங்குடன் 3 டம்ளர் அல்லது கிழங்கு மூழ்கும் அளவிற்கும் சற்று அதிகமாக் தண்ணீர் மற்றும் ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து வேக விடவும்.

கிழங்கு பாதி வெந்ததும் ஏலக்காய் மற்றும் சர்க்கரை சேர்க்கவும்.

கிழங்கு முழுவதும் வெந்ததும் வெள்ளை நிறம் மாறி கண்ணாடி போல் மாறி விடும். அப்போது தேங்காய் துருவல் சேர்த்து கிளறி விட்டு இறக்கவும். மரவள்ளிக்கிழங்கு பாயசம் தயார்.

# கொத்தமல்லித் தழையின் மருத்துவக் குணங்கள்



கொத்தமல்லி உணவு அலங்கரிப்புக்கு மட்டுமின்றி இது உடல் நலத்திற்குப் பலவகையான நன்மைகளை அள்ளித்தரும் ஒரு முக்கியமான மூலிகை ஆகும். இதில் உள்ள மருத்துவ குணங்கள் நம் ஆரோக்கியத்தை வாழ்நாள் முழுவதும் பாதுகாக்கும் என்றே கூறலாம்.

கொத்தமல்லியை வீட்டுத் தோட்டங்களிலும் மட்டுமின்றி சிறு தொட்டிகளில் கூட வளர்க்கலாம். வழக்கமாக ரசம், சாம்பார், குழம்பு போன்றவற்றில் மணத்திற்காக இக்கீரையைப் பயன்படுத்துவார்கள்.

கொத்தமல்லியில் நிறைந்துள்ள இரும்புச்சத்துகள், உடலில் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்தி, அம்மை நோயின் தீவிரத்தை குறைக்கும்.

கொத்தமல்லிக் கீரை உப்புச் சுவையுடையது. உஷ்ணமும் குளிர்ச்சியும் கலந்த தன்மை உடையது. கொத்தமல்லிக் கீரையை உணவில் சேர்த்துக் கொள்வதால் காய்ச்சல் குணமாகும். வாதம், பித்தம் நீங்கும். உடல் பலம் பெறும். தாது விருத்திக்கும் நல்லது.

இக்கீரை பசியைத் தூண்டும் சக்தி படைத்தது. இக்கீரையின் சாறு பிழிந்து பித்தத் தழும்புகள் மீது பூசினால் விரைவில் குணம் கிடைக்கும்.

இக்கீரையை எண்ணெயில் சிறிது வதக்கி, கட்டிகள், வீக்கங்களின் மீது வைத்துக் கட்டினால் குணம் கிட்டும். கொத்தமல்லிக் கீரையைத் துவையல் செய்து சாப்பிடலாம். பற்களுக்கு உறுதியை அளிக்கும். பல் சம்பந்தமான எல்லா நோய்களும் இக்கீரையை உண்டுவரக் குணமாகும். முதுமைப் பருவத்தில் ஏற்படும் தோல் சுருக்கத்தைப் போக்கி தேகத்திற்கு அழகையும் மினுமினுப்பையும் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 பேருக்கு...

சிலாவத்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். அந்த விடயத்தைப் பொலிஸார் உடனே மன்னார் நீதிவான் மன்றுக்குக் கொண்டு சென்றனர்.

காயமடைந்த இரு சிப்பாய்களில் ஒருவர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

முத்தரிப்புத்துறை மீனவக் கிராமத்தில் கடற்படையினர் நிலைகொண்டுள்ள நிலையில், அங்கு இரவு நேர திருட்டுச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. அவ்வாறு சில நாள்களுக்கு முன்னர் அந்தக் கிராமத்து வீடு ஒன்றுக்குள் நுழைந்து திருட முற்பட்டபோது, திருடர்களைக் கண்ட பொதுமக்கள் அவர்களைத் துரத்திச் சென்றனர். இதன்போது திருடர் பொது மகன் ஒருவர் மீது வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றிருந்தார். அதனால் வெட்டுக்காயங்களுக்கு உள்ளான நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவும் கிராமத்துக்குள் சிலர் புகுந்தனர். அவர்களைக் கண்ட பொதுமக்கள் துரத்திச் சென்ற போது, அருகிலுள்ள பற்றைக் காட்டினுள் அவர்கள் ஒழிந்து கொண்டனர். ஏற்கனவே பாதிக்கப்பட்ட பொதுமக்கள் திருட வந்திருந்ததாகக் கருதும் நபர்களை எப்படியாவது பிடித்துவிடவேண்டும் என்று தேடுதல் நடத்தி 3 பேரைப் பிடித்தனர். அவர்கள் தப்பியோட முற்பட்டனர். அவர்களைத் தாக்கித் தப்பியோடாதவாறு பொதுமக்களால் கட்டிவைக்கப்பட்டனர். எனினும் திருட வந்தனர் என்று கருதப்படும் 3 நபர்களுள் 2 பேர் தப்பியோடினர். ஒருவர் பொதுமக்களிடம் சிக்கிக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னரே அவர் கடற்படையைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தப்பியோடியவர்கள் சென்ற சில நிமிடங்களில் அங்கு கடற்படையினர் குவிந்து பொதுமக்களால் தடுத்து வைக்கப்பட்டவரை விடுவிக்குமாறு கோரினர். ஆனால் பொதுமக்கள் அவரை விடுவிக்கவில்லை. அதன்போதே கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் பொலிஸார் சென்று பிடித்து வைத்துள்ளவரை விடுவிக்குமாறு கோரியபோதும் பிடிபட்டவர் கடற்படைச் சிப்பாய் என்பதனால் முதலில் பொதுமக்கள் சம்மதிக்கவில்லை. பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தநிலையில் அன்று தொடக்கம் நேற்றுவரை அங்கு பதற்றமான நிலை காணப்படுகிறது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன. பொலிஸார் கிராமத்தில் குவிக்கப்பட்டுள்ளனர். மீனவக் கிராமம் என்பதனால் அவர்கள் தொழிலுக்குச் செல்வதில் இதுவரை காலமும் இல்லாத சட்ட நுணுக்கம் இறுக்கமாக்கப்பட்டுள்ளது. "பல தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சிப்பாய்க்குத் தாக்குதல் நடத்தியதாக முத்தரிப்புத்துறைக் கிராமத்தைச் சேர்ந்த 10 பேரின் பெயர் விவரங்களைச் சிலாவத்துறை பொலிஸிடம் வழங்கிய கடற்படையினர், அது தொடர்பில் முறைப்பாடும் செய்துள்ளனர். அந்த விவகாரம் மன்னார் நீதிவான் மன்றுக்கு நேற்று தகவல் வழங்கப்பட்ட நிலையில், இன்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4,21)

## தெற்கு...

கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு மீன்பிடி அமைச்சினால் இதற்கான பணிப்புரை கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்துக்கு விடுக்கப்பட்டிருப்பதாக நம்பகரமாகத் தெரிய வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பகுதிகளில் தென்பகுதி மீனவர்கள் தங்கி நின்று தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் சட்டவிரோதமான முறைகளைப் பயன்படுத்தி மீன் பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், அத்துமீறித் தங்கியிருந்தே மீன்பிடி நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் முல்லைத்தீவு மீனவர்கள் தொடர்ச்சியாகக் குற்றம் சுமத்தி வந்தனர்.

தென்னிலங்கை மீனவர்கள் தற்போது தங்கியுள்ள காணிகளை நிரந்தரமாகக் கையகப்படுத்தி அதனைப் பகிர்ந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவுள்ளது. இதற்குரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு கொழும்பு அரசின் மீன்பிடி அமைச்சினால் கரைதுறைப்பற்றுப்பிரதேச செயலகத்துக்கு அறிவுறுத்தல் வழங் கப்பட்டுள்ளது.

தற்போது தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள 272 தென்னிலங்கை மீனவர்கள் அந்தப் பிரதேசத்தில் நிரந்தரமாகக் குடியேறும் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5-10)

## முன்னாள்...

இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க, ஜனாதிபதி ஆணைக் குழுவினால் நேற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க பதவியில் இருக்கும்போது, 50 மில்லியன் ரூபா நிதியை முறை கேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே, பெரிய ஊழல், மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் விசாரணை களை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக் குழு, நேற்று அவரை விசாரணைக்கு அழைத்திருந்தது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் உத்தரவுக்கு அமைய முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க நேற்று முற்பகல் பத்து மணியளவில் ஆணைக்கு ழுவில் முன்னிலையானார். (த-5)


## மரண அறிவித்தல்கள்



### நாகலிங்கம் செகராசசிங்கம்

பெரியவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும் யாழ். அத்தியடியை வசிப்பிடமாகவும் தற்பொழுது ஆஸ்திரேலியாவில் வசித்தவருமாகிய நாகலிங்கம் செகராசசிங்கம் 19.10.2016 புதன்கிழமை காலை ஆஸ்திரேலியாவில் இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சி.சு.நாகலிங்கம் (N.O.B பஸ்கம்பனி உரிமையாளர்) தங்கம்மா தம்பதியரின் இளைய மகனும், மாலினியின் அன்புக் கணவரும், தேவ்சங்கர், பிறேமிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியானந்தம், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், இராசசிங்கம் மற்றும் கலாநிதி எதிர்வீரசிங்கம், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பரராசசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.10.2016 திங்கட்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
"அன்னவாசா" சண்டிலிப்பாய்
செ.நித்தியானந்தம்
நா.எதிர்வீரசிங்கம்

077 746 6100 (ஜெ.5550) (13.18)

### ஐயம்பிள்ளை ரவிச்சந்திரன் (ரவி)



தோற்றம்
18.06.1964

மறைவு
14.10.2016

யாழ்.சுன்னாகம் வருஷப்புலத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Anthony, லண்டன் Clayhall Essex ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை ரவிச்சந்திரன் கடந்த (14.10.2016) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை (தலைமை ஆசிரியர், யாழ்.சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்) மற்றும் சிவபூசணி (பேபி) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை (ஆசிரியர்) மற்றும் விஜயலக்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் கீத்தா அவர்களின் அன்புக் கணவரும் துஷாராவின் அன்புத் தந்தையும் கலாவாணி, சத்தியவாணி, ஜெயவாணி, ஜமுனா, முருகதாஸ் (தாசன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நவரத்தினம், தயாளன், பழனிவேல், ஸ்ரீ கதிர்காமநாதன், பிரபாகினி, பகீரதி, கோமதி, சாந்தா, பிருந்தாபன் ஆகியோரின் மைத்துனரும் ஜனனி, நிராகுலன், விக்ஸ்னா, வர்ஜிதன், கோபிகா, கபிலன், கிஷாந்த், அஜந்த், மிதுசாந்த், ரிஷிகேஷ்.நிகிலேஷ் ஆகியோரின் மாமனாரும் பவிஷியாவின் பாசமிகு பெரியப்பாவும் விஸ்வாதிகா, அபிலாஷ், அபிநயா, அஸ்வின் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஸ்ரீஸ்கந்தராஜா, ஜெயந்தன், ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஜெயராணியின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.10.2016 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(J 5516) (16,17,19)

வானிவாசா, வருஷப்புலம், சுன்னாகம்.
தகவல்: குடும்பத்தினர்.

முருகதாஸ் (தாசன்-பிரித்தானியா) +447870568380
கலா- 011 2732851, ஜெயா- 021 2240773

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### செல்லத்துரை வினோகரன்

திதி: சஷ்டி



இறைவன் தந்த பொக்கிஷம் நீ எமக்கு!
அவனே தன் மனம் பொறுக்காமலுக்கு
உன் 30 ஆவது அகவையில் எம்மிடம்
இருந்து பிரிந்து விட்டான்
இது அவன் சதியா ?
இல்லை இதுதான் உன் விதியா?
ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
அன்பான உன் பேச்சும்
அழகான உன் புன்னகையும்
என்றும் எம் மனதை விட்டு நீங்காது!

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
இடைக்குறிச்சி, வரணி

மண்ணில்
1981.01.01

விண்ணில்
2011.10.18

## UNIVERSITY OF JAFFNA

FACULTY OF AGRICULTURE

ADMISSION OF PUBLIC OFFICERS

FOR DEGREE PROGRAMME IN B.Sc AGRICULTURE (2015/2016)

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Program to follow B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2015/2016

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

   OR

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

   AND

2. Diploma in Agriculture (Course duration not less then 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Assistant Registrar, Admissions Branch, University of Jaffna, on a payment of Rs.100/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.100/- drawn in favour of the Bursar, Envelope (for Rs. 5.00)not less than 9"x 4" size.

**Date of closing is 23rd November2016.**

Applications should be forwarded through the relevant Heads of Department. If not those applications will be rejected.

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

No application will be entertained after the closing date of application.

Registrar

(C/25955)(11.18.21)


22.10.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்காசிய பங்குடைமை மாநாட்டில் 4 விருதுகள் வென்ற கொமர்ஷல் வங்கி



2016 தெற்காசிய பங்குடைமை உச்சி மாநாடு மற்றும் வர்த்தக விருது வழங்கும் நிகழ்வில் இலங்கையின் சிறந்த தனியார் பிரிவு வங்கி என்ற கீர்த்தி மிக்க விருது உட்பட நான்கு விருதுகளை கொமர்ஷல் வங்கி வென்றுள்ளது.

ஆசிய வர்த்தக கூட்டமைப்பின் அங்கீகாரத்தோடு உலக எச்.ஆர்.டி மாநாடு இந்த விருதுகளை வழங்கியுள்ளது.

இந்த வைபவத்தில் ஆகக் கூடுதலான விருதுகளை வென்ற வங்கி கொமர்ஷல் வங்கியாகும். சிறந்த தனியார் பிரிவு வங்கி என்ற விருதுக்கு மேலதிகமாக சிறந்த செயற்பாடுகள், வர்த்தக முத்திரை, காப்புறுதிச் சேவை மற்றும் நிதிச் சேவைகளில் சிறப்பு, சிறந்த நிலைத்தன்மை கொண்ட வங்கி என்பன வங்கிக்குக் கிடைத்துள்ள ஏனைய விருதுகளாகும்.

கடந்த 13ஆம் திகதி வோர்ட்டர்ஸ் ஹெட்ஜில் இந்த வைபவம் இடம்பெற்றது. தெற்காசிய நாடுகள் பலவற்றைச் சேர்ந்த சுமார் 200க்கும் மேற்பட்ட சிரேஷ்ட கூட்டாண்மைப் பிரிவுத் தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

பிராந்திய நாடுகளின் தலைவர்கள் புடை சூழ தெற்காசிய வர்த்தக விருது கௌரவம் என்பது வலிமை, ஐக்கியம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பனவற்றுக்கான ஒரு வாய்ப்பாக அமையும். தெற்காசிய பங்குடைமை மாநாட்டின் நோக்கம் தர அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான உறுதியானதோர் அடித்தளத்தை அமைப்பதாகும். மேலும் தர ஆற்றலை மிகச் சிறந்த முறையில் வெளிப்படுத்தும் செயற்பாடு களுக்குப் பொறுப்பாகவுள்ள தனிநபர்களையும் நிறுவனங்களையும் கௌரவிப்பதும் இதன் நோக்கமாகும்.

இந்த விருதுகள் பற்றிக் கருத்து வெளியிட்ட கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜெகன் துரைரட்ணம், "நாம் செய்யும் எல்லா பணிகளிலும் மிகச் சிறந்த ஆற்றலை வெளிப்படுத்துவது தான் எப்போதும் எமது நோக்கமாகும்.

வணிகம்

எமது முயற்சிகளுக்கான அங்கீகாரம் எப்போதும் எமக்கு கிடைக்கின்றமையும் மகிழ்ச்சி அளிக்கின்றது. எமது மூலோபாய வர்த்தக முயற்சிகளைக் கட்டியெழுப்பும் முயற்சி மற்றும் எமது நிலையான வர்த்தக முயற்சி செயற்பாடுகளில் நாம் காட்டும் அர்ப்பணம் என்பனவற்றில் நாம் பெருமை அடைகின்றோம். பன்னாட்டு மற்றும் உள்ளூர் விருதுகளை வழங்கும் அமைப்புக்கள் எப்போதும் இவற்றுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கி வந்துள்ளன"-என்றார்.

ஆறு வருடங்களாக தொடர்ந்து உலகின் தலைசிறந்த ஆயிரம் வங்கிகள் வரிசையில் இடம்பிடித்துள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கியான கொமர்ஷல் வங்கி நாடுமுழுவதும் 251 கிளை வலையமைப்புடனும் 640 ஏ.ரி.எம் வலையமைப்புக்களுடனும் செயற்படுகின்றது. இலங்கையின் தலை சிறந்த வங்கி, மிக உறுதியான வங்கி, மிக கௌரவமான வங்கி என பல விருதுகளை உள்ளூர் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் வெளியீடுகளிடம் இருந்து கடந்த பல ஆண்டுகளில் கொமர்ஷல் வங்கி பெற்றுள்ளது. அத்தோடு இலங் கையின் மிகச் சிறந்த பத்து கூட்டாண்மை பிரஜைகளில் ஒன்றாகவும் இலங்கை வர்த்தக சபையால் பல வருடங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (த)

# சந்தையில் நம்பிக்கையை கட்டியெழுப்பும் 'குவாவி'

'குவாவி' அலைபேசிகள் அவற்றின் தரத்திற்குப் பெயர் பெற்றுள்ளதுடன், அண்மையில் இடம் பெற்ற துரதிர்ஷ்டவசமான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமானது, குவாவி அலைபேசிகள் உற்பத்தி செய்யப்பட்டு சந்தையில் அறிமுகம் செய்யப்படுவதுக்கு முன்பாக பல்வேறு தரக் கட்டுப்பாட்டுச் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுவதை மீளவும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

உலகில் திறன்பேசிகளை உற்பத்திசெய்வதில் முதல்மூன்று இடங்களில் திகழும் நிறுவனங்களில் ஒன்றான 'குவாவி' தனது வன்பொருள் மற்றும் மென் பொருளை தொடர்ச்சியாக நேர்த்தி செய்து வந்துள்ளது மட்டுமன்றி, மிகச் சிறந்த தரத்திலான ஸ்மார்ட் போன்களை வழங்கும் தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகளையும், உற்பத்தி நடைமுறைகளையும் தொடர்ச்சியாக மேம்படுத்துவதில் பெருமளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. குவாவி கைக்கொள்கின்ற உலகத்தரம் வாய்ந்த தர நடைமுறைகள் ஐரோப்பா அல்லது அமெரிக்காவிலுள்ள கட்டாயமான தர நடைமுறைகளை விடவும் மிக உயர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் 'குவாவி' சாதனங்களுக்கான உள்நாட்டுத்தலைமை அதிகாரியான ஹென்றி லியு கூறுகையில், "தரம் தொடர்பில் சந்தையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற கொள்கை எப்போதும் குவாவிக்கு வெற்றியைத் தேடித் தந்துள்ளது. தொடர்ச்சியான புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மூலமாக குவாவி தொடர்ச்சியாகத் தனது தொழில்நுட்பத்தை மேம்படுத்தி வந்துள்ளது. இலங்கையிலும், உலகெங்கிலும் எமது வெற்றிக்கு இதுவே முக்கியமான ஒரு காரணமாகும். நாம் எமது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மீது தொடர்ந்தும் முதலிட்டு, எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மிகச் சிறந்த தர அனுபவத்தை வழங்குவோம்"-என்றார். (த)

# சிறிய தொழில் முயற்சிக்கு நேஷன்ஸ் ட்ரஸ்ட் உதவி

இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையை ஊக்குவிக்கும் வகையில், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, பிரத்தியேகமான வியாபாரக் கருத்தரங்கு ஒன்றை அநுராதபுரம் கோல்டன் மெங்கோ ரிசோர்ட் ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்தக் கருத்தரங்கில் 125 தொழில் முயற்சியாளர்கள் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாண்மைத் துறையிலிருந்து பங்குபற்றியிருந்தனர். வயம்ப பல்கலைக் கழகத்தின் மூத்த விரிவுரையாளரான அமிந்த பெரேரா இந்த நிகழ்வின் முதன்மை பேச்சாளராகப் பங்கேற்றிருந்தார் என்பதுடன், பங்குபற்றுநர்களுக்கு அபிவிருத்தி மற்றும் பன்முகத்தன்மை தொடர்பில் பயனுள்ள தகவல்களை வழங்கியிருந்தார். மேலும் பன்னாட்டு மற்றும் உள்ளூர் சந்தைகளில் நிலவும் தொழில்நுட்பப் போக்குகள் தொடர்பிலும் விளக்கங்களை வழங்கியிருந்தார். (த)

# வீதிகளுக்கு பெயரிடும் பணிகள் ஆரம்பம்


சாவகச்சேரி நகரசபையினர் உள்ளூராட்சி மாதத்தையொட்டி சபை எல்லைக்குட்பட்ட வீதிகளுக்குப் பெயர்ப்பலகையிடும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு எஸ்.லோன் நிறுவனத்தினர் வழங்கிய வீதிப் பெயர்ப்பலகைகள் சபையின் அலுவலர்களால் வீதிகளில் நடப்பட்டு வருகின்றன.

சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் சாவகச்சேரி தேவாலய வீதிக்கான பெயர்ப்பலகையை நட்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (த)



# நுட்பம்



## கோம் பட்டன் இயங்காவிடில் மாற்றுவழி ஐபோன்களில் அறிமுகம்

கைபேசிகளில் பிரதான கோம் பட்டன் பழுதடைந்து இயங்க நிலையில் இருப்பின் திரையிலே தற்காலிகமான கோம் பட்டனை தோற்றுவித்து பயன்படுத்தக்கூடிய வசதியினை ஐபோன்களில் தற்போது பெற்றுக் கொள்ள முடியும்.

பிரபல கைபேசிகளின் தயாரிப்பு நிறவனமான அப்பிள் அண்மைய நாட்களில் அறிமுகம் செய்துள்ள ஐபோன் 7 மற்றும் ஐபோன் 7 பிளஸ் சிமாட் கைப்பேசிகளிலேயே இந்த புதிய செயலியின் அறிமுகம் இணைத்தக் கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆரம்பத்தில் அறிமுகம் செய்யப்பட்ட கைபேசிகளில் காணப்படுவது போன்று வன்பொருள் பாகமாக இந்தச் செயலி தரப்படவில்லை. மாறாக கப்ரிக் எனும் சென்சார் மூலம் இயங்கும் தொழில்நுட்பத்தை இது கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இனிவரும் காலங்களில் கைபேசிகளில் பிரதான கோம் பட்டனை அமைக்கும் போது இருவகை தொழில் நுட்பமும் பயன்படுத்திக்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.




## பேஸ்புக் வேக்பிளேஸ் சமூகவலைத்தளத்தில் புதிய அறிமுகம்

சமூக வலைத்தளமான பேஸ்புக் தற்போது பேஸ்புக் வேக்பிளேஸ் என்ற புதிய செயல் வசதியொன்றை அறிமுகம் செய்துள்ளது.

இந்தப் புதிய பக்கத்தின் மூலம் அலுவலகத்தில் உள்ள அனைத்துப் பிரிவுகளையும் ஒரே பக்கத்தின் கீழ் இணைத்துக் கொள்ள முடியும் அத்துடன் அலுவலக வேலைகளை வெளிப்படைத் தன்மையுடன் செய்யவும் இவை உதவுகின்றன.

குறிப்பாக பணிகளை, முக்கியமான தகவல்களை பகிர்ந்து கொள்ள முடிவதுடன் உயரதிகாரிகள் இந்தப் பக்கத்தின் மூலம் ஊழியர்களுக்கு அறிவுறுத்தல்களையும் வேலைகளையும் வழங்கமுடியும்.

அலுவலக பணியாளர்களுக்கு மட்டுமானதாக மூன்று மாத காலத்திற்கு இந்த வசதியை பேஸ்புக் இலவசமாக வழங்குவதாகத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கிரமிப்பு...

கின்றனர். அவர்களினால் எத்தகைய வடிவங்களில் தாம் நெருக்குதல்களை எதிர் கொள்கின்றோம் என்பதையும் மக்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

இவ்வாறு இலங்கைக்குப் பயணம் மேற் கொண்டிருந்த ஐ.நா.வின் சிறுபான்மை இனங்களுக்கான சிறப்பு அறிக்கையாளர் ரீட்டா தெரிவித்தார்.

இலங்கைக்குப் பத்து நாள் பயணமாக வந்திருந்த ரீட்டா, தனது பயண முடிவில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

எனது பயணத்தின்போது, வடக்கு – கிழக்கில் என்னைச் சந்தித்த மக்கள் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் மற்றும் அதில் சிறுபான்மையினத்தவர் களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் ஏற்பாடுகள் குறித்துக் கருத்துத் தெரிவித்தனர். இலங்கையின் அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவது, சிறுபான்மை மதங்களும் இனங்களும் மேலும் ஒடுக்கப்படுவதற்கு வழிவகுக்கும் என்று பெரும்பான்மையானவர் கள் அச்சம் வெளியிட்டனர்.

வடக்கு–கிழக்கில் நான் நடத்திய கலந்துரையாடல்களில் எல்லாம், இராணுவ வெளியேற்றம், கைதிகள் விடுதலை மற்றும் காணிகளைப் பொதுமக்களிடம் மீளக் கையளித்தல் ஆகிய விடயங்கள் முக்கியமாகவும் திரும்பத் திரும்பவும் வலியுறுத்தப்பட் டன.

வடக்கு–கிழக்கில் படையினர் தொடர்ந்தும் நிலை கொண்டிருப் பது சில சர்ச்சைகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது. வட பகுதி மக்களின் நிலைமையை முன்னேற்றுவதற்காக இராணுவம் முன்னெடுத்துள்ள பல திட்டங்கள் குறித்து என்னிடம் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இராணுவம், வடக்கு – கிழக்கில் கண்ணுக்குப்புலப்படாமல்பிரசன்னத்தைப் பேணுகின்றபோதிலும், பொதுமக்கள் எவ்வாறு இராணுவப் பிரசன்னம் தங்கள் வாழ்வின் பல படிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது குறித்து என்னிடம் விப ரித்தனர். பல சந்தர்ப்பங்களில் அது அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்றது.

இராணுவத்தினால் துன்புறுத்தப்படுவது, அச்சுறுத்தப்படுவது குறித்த கவலை தரும் குற்றச்சாட்டுக்களையும் வடக்கு –கிழக்குப் பொதுமக்கள் முன்வைத்தனர். இராணுவத்தில் பெரும்பாலான வர்கள் சிங்களவர்கள் என்பதாலும், வடபகுதியில் அதன் அளவுக்கு அதிகமான பிரசன்னத்தினாலும் அதனை அந்த மக்கள் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவ மாகவே கருதுகின்றனர். மேலும் தமிழர்களைத் தீவிரவாதிகள் என்று தொடர்ந்தும் களங்கப்படுத்தி வருவதாகவும் அவர்கள் கருதுகின்றனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பலர் தடுத்து வைக்கப்பட்டுள் ளனர். பயங்கரவாதத்தடைச்சட்டத்தை அகற்றும்போது அதற் குப் பதிலாகக் கொண்டு வரப்படும் புதிய சட்டம் பன்னாட்டுத் தராதரங்களுக்கு ஏற்ற விதத்தில் காணப்படவேண்டும். இதனை வலியுறுத்துகின்றேன்.

உண்மையைக் கண்டறிவது, நல்லிணக்கம் மற்றும் காயங் களை ஆற்றும் நடவடிக்கைகள் ஒரே இரவில் சாத்தியமாகப் போவதில்லை. அதேவேளை அரசு சிறுபான்மையினத்தவர்களைப் பாதுகாப்பது குறித்த தனது அரசியல் உறுதிப்பாடு மற்றும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதற்காக உடனடியாகச் சில முக்கிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

பொதுமக்களின் நிலங்களை மீளக் கையளிப்பதைத் தொடர்வது, பாதுகாப்புத் தொடர்பில் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்துவது அல்லது விடுதலை செய்வது, காணாமற் போனவர்களைக் கண்டுபிடிப்பதில் முன்னேற்றத்தைக் காண்பது, இராணுவத்தின் அதிகாரங்களைச் சிவில் நிர்வாகத்திடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மெல்ல மெல்ல முன்னெடுப்பது ஆகியவை முக்கிய மானவை – என்றார். (த-5)

## வடக்குச்...

அவதூறான செய்திகள் வெளியிடப்படுவதைக் கண்டித்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும், இவற்றை வெளியிடும் ஊடகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இந்த அவதூறான செய்திகளை வெளியிட்டமையைக் கண்டித்து, யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள நீதிமன்றங்கள், ஊர் காவற்றுறை, மல்லாகம், சாவகச் சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா நீதிமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள நீதிமன்றங்கள் ஆகியவற்றில் சட்டத்தரணிகள் எவரும் நேற்று வழக்குகளில் முன்னிலையாகவில்லை. அடையாளப் பணிப்புறக் கணிப்பில் அவர்கள் ஈடுபட்டனர். இதனால் வழக்குகளுக்காக நீதிமன்றங்களுக்குச் சென்றிருந்த பலர் சிக்கலை எதிர்கொண்டனர். அநேகமான வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டன.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், கிளிநொச்சி நீதிவான் ஏ.ஏ ஆனந்தராஜா ஆகியோர் தொடர்பாகச் சில இணையத்தளங்கள் பொய்யான செய்திகளைப் பரப்பி வருகின்றன. குறித்த இணையத்தளங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். இணையத் தளங்களைத் தடை செய்யும் வகையிலான சட்ட வரைவுகளை அரசு இயற்ற வேண்டும் என்று பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் கோரினர்.

ஒரு நீதிபதியினால் யாரேனும் தனிநபர் அவரது தனிப்பட்ட செயற்பாட்டினால் பாதிக்கப்பட்டிருப்பின் முறைப்பாடு செய்வதற்கு உரிய நடைமுறைகளும் இடங்களும் நாட்டில் உள்ளன. அவ்வாறான எவ்வித நடவடிக்கையையும் தவிர்த்து குறித்த ஒரு இணையத் தளத்தில் வெளிவந்த செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை. அந்த இணையத்தளத்தில் பாவிக்கப்பட்டுள்ள சொற்பதங்கள் மிகக் கேவலமானதும், அருவருக்கத் தக்கதுமாகும். குறித்த சொற்பதங் களின் தன்மையே குறித்த இணையத்தளத்தின் கேவலமான தன்மையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இந்தச் செயற்பாடாணனது எமது நீதிவானையும் அவரது சேவையையும் அவரது அர்ப்பணிப்பான செயற்பாடுகளையும் நிறுத்தி அவரை இவ்விடத்திலிருந்து மாற்றுவதற்காக முயலும் நாசகாரச் சக்திகளின் செயற்பாடாகவும் விளம்பரம் தேடும் செயற்பாடாகவும் அமைந்துள்ளது.

நீதித்துறை தொடர்பில் இவ்வாறான அவதூறான செய்திகளை வெளியிடும் ஊடகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர் பிலும் சட்டத்தரணிகள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று சட்டத்தரணிகள் சங்க வடக்கு மாகாண உப தலைவர் சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்தார்.

இன்று நீதிமன்ற நடவடிக்கை களில்வழமை போன்று செயற்படுவோம் என்றும் சட்டத் தரணிகள் கூறினர். (த-4-ரி3-35-21)

## பொருளா...

ஏற்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மதகுவைத்த குளத்தில் பொருளாதார வலயம் அமைப்பதற்குச் சம்மதம்வழங்கியிருந்த நிலையில், அதனை அங்கு அமைக்க வேண்டாம் என்றுவன்னி மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மதகுவைத்த குளத்தில் பொருளாதார வலயம் அமைப்பதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஒப்புதல் வழங்கியிருந்தார். இதனையடுத்து அந்தக் காணியில் அதனை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு அதில் ஒரு பகுதி காணி வழங்கப்பட்டிருந்த நிலையில், அந்தக் காணி அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக மீளப் பெறப்பட்டது.

சகல நடவடிக்கைகளும் நிறைவுபெற்று மதகுவைத்த குளத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அடிக்கல் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நிலையில், மதகுவைத்த குளத்தில் அடிக்கல் நடுவதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை, வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் முடிவெடுத்த பின்னர் அடிக்கல் நடும் நிகழ்வை நடத்தலாம் என்று வன்னி மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பொருளாதார வலயம் ஓமந்தையில் அமைக்கப்படவேண்டும் என்பதற்காக உணவு ஒறுப்புப் போராட்டம் முன்னெடுத்திருந்த தனி நபர் ஒருவர், மதகுவைத்த குளத்தில் அடிக்கல் நடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அடையாளப் போராட்டம் நடத்த உள்ளதாக அறிவித்துள்ளார். அடிக்கல் நடும் இடத்திலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் வாயைத் துணி யால் கட்டி மௌனமாக இருந்து போராட்டம் நடத்தவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

**பின்னணி**

2016 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் வவுனியாவில் பொருளாதார வலயம் நிறுவுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கான இடத் தெரிவில் சர்ச்சை தோன்றியிருந்தது. தாண்டிக்குளத்தில் அமைக்கப் படவேண்டும் என்று ஒரு தரப்பினரும், ஓமந்தையில் அமைக் கவேண்டும் என்று இன்னொரு தரப்பினரும் நின்றமையினால், இழுபறி ஏற்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையில் வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது.

இதன் பின்னர் கொழும்பு அரசு, வவுனியா மதகுவைத்த குளத்திலும், முல்லைத்தீவின் மாங்குளத்திலும் பொருளாதார வலயத்தை அமைக்கப் பரிந் துரைத்தது. இதனை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் ஒப்புதல் வழங்கினார். (த-5)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ராஜேஸ்வரி பொன்னுத்துரை



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜேஸ்வரி பொன் னுத்துரை நேற்று வியாழக்கிழமை (20.10.2016) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் (கார் தரகர் மாப்பிளை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற தில்லையம்பலம் – செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பையா – சின்னப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், ஈஸ்வன் (ஆட்டோ ஈசன்), லிங்கேஸ்வரி, (ஜெகதா கொழும்பு), ஜெகதீஸ்வரன் (பபி லண்டன்), சத்தீஸ்வரன் (சத்தி இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை (அராலி), இராசமணி, குமாரசாமி (கொழும்பு), காந்திமதி (லண்டன்), செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வமலர் (இருபாலை), சசி (லண்டன்), கவிதா (இத்தாலி), ஜெயந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், விக்னேஸ்வரன் – சிந்துயானி (சுவிஸ்), சிவரூபன் – கார்த்திகாயினி (பிரான்ஸ்), பிருந்தாபன் (சுவிஸ்), கஜீந்தன் (கொழும்பு), தாட்சாயினி (கொழும்பு), பவித்திரா (கொழும்பு), சஞ்சீவன் (கொழும்பு), வைஷ்ணியா (லண்டன்), சௌமியா, விஷிக்கா, யஸ்வினி (லண்டன்), சுபேக்கா, சாருக்கா (இத்தாலி) ஆகியோரின் பேர்த்தியாரும், லக்ஷிகன், லோஜினிக்கா (சுவிஸ்), விதுஷிகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (21.10.2016) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் இருபாலையில் உள்ள மகளின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
விவசாய வீதி,
இருபாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
ஈஸ்வரன் (மகன்), ஜெகதா (மகள்)
077 497 3183

மண்ணில் 11 . 08 . 1937



விண்ணில் 20 . 10 . 2016

### செல்லத்துரை பேரம்பலம்

(ராசா மாஸ்டர்)
(ஓய்வு பெற்ற அதிபர்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பேரம்பலம் நேற்று (20.10.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமாநாதர்-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பலீலாவின் பாசமிகு கணவரும் தில்லையம்பலம், துரைசிங்கம், காலஞ்சென்ற சிவமணி அருணாசலம், கமலாவதி, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வனஜா (ஆஸ்திரேலியா), விஜினா (மல்லாவி), ஜீவகுமாரி (சுவிஸ்), நந்தகுமார் (லண்டன்), ஜீவகுமார் (பிரான்ஸ்), ஞானகுமார் (வவுனியா) ஆகியோரின் தந்தையும் சித்திவிநாயகர் (ஆஸ்திரேலியா), கோணேஸ்வரன் (மல்லாவி), சிற்சொரூபன் (சுவிஸ்), காந்திமதி (லண்டன்), கிருஸ்ணவேணி (பிரான்ஸ்), கலைவாணி (வவுனியா) அகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர்அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.749,
யோகபுரம் மத்தி,
மல்லாவி.

தகவல்
குடும்பத்தினர்
077 3638533

(C.25957) (16.17.19)

## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் ஜெயரட்ணம்

(ஓய்வு பெற்ற பிரதம எழுது வினைஞர், ப.நோ. கூ. சங்கம்)

தோற்றம் 18 . 07 . 1942



மறைவு 20 . 10 . 2016

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் கட்டைப்பாலி வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் ஜெயரட்ணம் நேற்று (20.10.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கனகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான துரைரட்ணம், புஸ்பராணி, அரியரட்ணம், மற்றும் ரஞ்சிதமலர் (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெரின் நிரஞ்சலா, டொறின் நிர்மலா, ஜெறோம் ஆகியோரின் அன்புத் தகப்பனும், பிலிப் – காந்தசிவம், அசோக்குமார், ரதிதேவி ஆகியோரின் மாமனும், ஜொனாத்தான், ஜெருஷாந், யூலியா, பிறின்ஸி, ரக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.10.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக உடுவில் மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43, கட்டைப் பாலி வீதி,
ஆனைக்கோட்டை,
மானிப்பாய்.

தகவல்:
மகன் ஜெறோம்,
0777 212925,
[illegible]
[illegible] 0777 110002


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



**அமரர் தங்கேஸ்வரராஜா பிருதிவிராஜ்**

மலர்வு : 24.10.1944 ✱ உதிர்வு : 02.11.2015

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
எமக்கு நல்ல வழிகாட்டிய எம் குல தெய்வமே !
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் மூச்சோடு என்றும் கலந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

02.11.2015 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவு கூறலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனை தொடர்ந்து மதிய போசனமும் அன்னாரது இல்லத்தில் இன்று 21.10.2016 - வெள்ளிக்கிழமை நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கனகத்திவடலி ஒழுங்கை,
நெடியகாடு, வல்வெட்டித்துறை.

தகவல் :
குடும்பத்தினர்.

## "ஞாலத்தில் புதுமை புகும் தாலம்"
## பனை அபிவிருத்திச் சபை நடத்தும் பனைசார் உற்பத்திகள் மற்றும் புதிய தொழில்நுட்பம் தொடர்பான கண்காட்சியும் ஆய்வரங்கம் மற்றும் விற்பனையும் - 2016

### முதலாம் நாள் நிகழ்வுகள்

தலைமை :- வைத்திய கலாநிதி திரு.இ.சிவசங்கர் (தலைவர், பனை அபிவிருத்திச் சபை)
இடம் :- யாழ்.மத்திய கல்லூரி.
காலம் :- 21.10.2016
நேரம் :- முற்பகல் 10 மணி

பிரதம விருந்தினர்
கௌரவ அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்
(சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு)

கௌரவ சிறப்பு விருந்தினர்
பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்
(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

கௌரவ விருந்தினர்கள்:
கலாநிதி ச.பாலகுமார்
(தலைவர், உயிர் இரசாயனவியல்துறை, மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.பசுபதி சீவரத்தினம்
(முன்னாள் தலைவர், பனை அபிவிருத்திச் சபை)
திரு.க.எழில்வேந்தன்
(அதிபர், யாழ்.மத்திய கல்லூரி)
திரு.நா.கணேசன்
(தலைவர், வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசம்)

### இரண்டாம் நாள் நிகழ்வுகள்

தலைமை :- திரு.எம்.பி.லோகநாதன் (பொதுமுகாமையாளர், பனை அபிவிருத்திச்சபை)
இடம் :- யாழ்.மத்திய கல்லூரி.
காலம் :- 22.10.2016
நேரம் :- முற்பகல் 10 மணி

பிரதம விருந்தினர்
உயர்திரு வே.சிவஞானசோதி
(செயலாளர், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு)

கௌரவ சிறப்பு விருந்தினர்
திரு.ஆ.பத்திநாதன்
(பிரதம செயலாளர், வடமாகாணம்)

கௌரவ விருந்தினர்கள்:
திரு.கஸ்ரன் ஸ்ரனிஸ்லஸ்
(சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், யாழ்.பிராந்தியம்)
திரு.மா.கணபதிப்பிள்ளை
(முன்னாள் தலைவர், பனை அபிவிருத்திச்சபை)

### மூன்றாம் நாள் நிகழ்வுகள்

தலைமை :- திரு.வி.பி.தேவராஜா (நிதி முகாமையாளர், பனை அபிவிருத்திச்சபை)
இடம் :- யாழ்.மத்திய கல்லூரி. காலம் :- 23.10.2016
நேரம் :- முற்பகல் 10 மணி

பிரதம விருந்தினர் :- உயர்திரு. நா.வேதநாயகன் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
கௌரவ சிறப்பு விருந்தினர் :- திரு.ஜி.தேவஞானம் (உதவிக் கணக்காய்வாளர் நாயகம் (வடக்கு)
கௌரவ விருந்தினர் :- திரு.சோ.கோகுலதாசன் (முன்னாள் தலைவர், பனை அபிவிருத்திச் சபை)

குறிப்பு:- தினமும் மாலைநேர நிகழ்ச்சிகளாக கலைகலாசார நிகழ்வுகள் இடம்பெறும்.

## 6 ஆம் மாத நினைவலைகள்

பிறப்பு
18 . 12 . 1932



இறப்பு
28 . 04 . 2016

**அமரர் சின்னட்டி மார்க்கண்டு**
**[மயிலிட்டி]**

*திதி - அபரபக்கஷஷ்டி*

காலனும் தன் கணக்கை கணப்பொழுதில் முடித்துவிட
மாதங்கள் ஆறும் கண்ணீரில் கரைந்ததையா
அன்றைய காலைப் பொழுது இன்றும் எம் கண்முன்னே
வந்து கரையுதையா
ஆறமுடியாமல் அரை ஆண்டு கழிந்ததையா
ஆற்றுப்படுத்த முனைகின்றோம் முடியவில்லை ஐயா
ஏலாத வேளையிலும் எங்கள் பிள்ளையாரை
தோள் மீது சுமந்து திரு வீதி வலம் வந்தீர்
அந்தப் பிள்ளையாரும் ஆனந்தம் அடைந்து
தன் திருப்பாதங்களில் வந்து அமரும்படி
அழைத்துக் கொண்டார் போலும்
எனநினைத்து ஆறுதல் அடைகின்றோம் ஐயா.

"அட்சய பவனம்"
[illegible]ணைக்குட்டி மதவடி,
தெல்லிப்பழை.

(J.5522)
(14,17,18)

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், [illegible]

## மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 07 . 1930



மறைவு
18 . 10 . 2016

**கந்தையா சபாநாயகம்**

சண்டிலிப்பாய் வடக்கு, ஆலங்குழாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சபாநாயகம் (18.10.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மழவராயர், கில்லிமலர், கார்த்திகேசு ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் அற்புதமலரின் அன்புக் கணவரும் சூரியகுமார், செல்வராணி,இந்திரகுமார், ஜெயக்குமார்(UK), தவக்குமார், புஸ்பராணி, உதயராணி (சுவிஸ்), விஜயகுமார், நிர்மலராணி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தா, நவரத்தினராசா(ஓய்வு பெற்ற ப.நோ.கூ. சங்க முகாமையாளர்), சுமதி, சந்திரமலர்(UK), கீதா (ஆசிரியர் தெல்லிப்பழை யா/மகாஜனக் கல்லூரி), தயாபரன்(பிரதேசசபை நாவற்குழி),செல்வராசா (சுவிஸ்), தியாகரஜனி, சிவநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2016) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார் . உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(சே/5527)(12.18)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

**077 773 2475, 077 855 3099**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய தீபாவளித் திருநாளை முன்னிட்டு...

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்
# மாபெரும் மெகா சேல்
# இந்தியன் பஜார்



**இடம்**
**யாழ். வீரசிங்கம் மண்டபம்**
**காலம்**
**05.10.2016 முதல் 30.10.2016 வரை**

உங்களுக்குத் தேவையான திருமணப் பட்டுப்புடைவைகள், கொட்டன் சல்வார்கள், நெற் சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் சிறுவர் சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகளை மாபெரும் விலைத் தள்ளுபடியில் பெற்றுக் கொள்ளலாம்.

**சல்வார் துணிகள்**

| | | |
|---|---|---|
| ❖1 டொப் சல்வார் துணி (கொட்டன்) | ~~1000/=~~ | 750/= |
| ❖2 டொப் சல்வார் துணி (சில்க்) | ~~1250/=~~ | 1000/= |
| ❖3 டொப் சல்வார் துணி (சில்க்) | ~~1750/=~~ | 1500/= |

யாழ். மாவட்ட வாடிக்கையாளர்களின் நலன்கருதி

**இன்று முதல்** **21.10.2016 வெள்ளிக்கிழமை பி.ப 4.30 இற்கு**
**இல.80, கஸ்தூரியார் வீதி,**
**மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, முதலாம் மாடியில்**
**திருமண பட்டுப்புடைவைகளின் பூங்காவனம்**
**"இந்தியன் செலக்ஷனின்"**
**புதிய காட்சியறை திறந்து வைக்கப்படவுள்ளது**
என்பதை அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த நிகழ்வில் சகல வாடிக்கையாளர்களையும்
கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி
இந்தியன் செலக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரர்களின் சலுகையை கைவிடுகிறது இலங்கை கிரிக்கெட்

கிரிக்கெட் வீரர்களுக்கான சலுகைகளை இலங்கை கிரிக்கெட் சபை நீக்கியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும்போது அவர்களுடன் மனைவி மற்றும் குழந்தைகளும் செல்ல முழு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதைவிட கிரிக்கெட் வீரர்களின் குடும்பத்தினருக்கும் இலவசமான விமானச் சீட்டுக்களும் வழங்கப்பட்டன. தற்போது இந்தச் சலுகைகளை இலங்கை கிரிக்கெட் சபை நிராகரித்துள்ளது. வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளும் போது வீரர்கள் தமது குழந்தைகளை அழைத்துச் செல்லவும் தடை விதிக்கப்பட்டது என மேலும் சில தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஆசியாவில் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளும்போது மாத்திரம் வருடத்திற்கு ஒரு முறை அவர்களின் குடும்பங்களுக்கு இலவச விமானச் சீட்டுக்கள் வழங்கப்படும் என இலங்கை கிரிக்கெட் சபை மேலும் தெரிவித்தது. (ம)

# யங்ஹென்றிஸ் – யங்கம்பன்ஸ் ஆட்டம் சமநிலையில் முடிந்தது

கரணவாய், ஒக். 21

குறிஞ்சிக் குமரன் வி.கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் யங்ஹென்றிஸ் – யங்கம்பன்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

குறிஞ்சிக் குமரன் வி.கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் மற்றும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. சமபலம் பொருந்திய இரு அணிகளாலும் முற்பாதியில் எதுவித கோல்களையும் பதிவுசெய்ய முடியவில்லை. இரண்டாம் பாதியின் 31 ஆவது, 39 ஆவது நிமிடங்களில் வின்சன் இரு கோல்களைப் பதிவுசெய்ய 2:0 என்று முன்னிலை வகித்தது யங்ஹென்றிஸ். 41 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார் பிரகாஸ். 47ஆவது நிமிடத்தில் நிறோ மற்றொரு கோலைப் பதிவுசெய்ய 2:2 என்ற நிலை. வேறெந்த கோல்களும் பதிவாகாத நிலையில் ஆட்டம் சமநிலையானது. (ம-108)



# பரிஸ்ரௌவ், மொயின் அலியால் தடுமாறி மீண்டது இங்கிலாந்து



இங்கிலாந்து – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் தடுமாறி மீண்டது இங்கிலாந்து.

பங்களாதேஷின் சார்பாக கம் ரூல் இஸ்லாம், ரகுமான், கசன் மிராஸ் மூவரும் அறிமுகமாகினர். இங்கிலாந்தின் சார்பாக டக்லெட் அறிமுகமானார். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக குக் மற்றும் டக்லெட். 18 ஓட்டங்கள் பெறப்பட்ட நிலையில் மிராஸிடம் வீழ்ந்தார் டக்லட். அதே ஓட்ட எண்ணிக்கையில் குக்கும் ஆட்ட மிழந்தார். அடுத்த சில நிமிடங்களில் பலன்ஸும் ஆட்டமிழக்க 21 ஓட்டங்களில் மூன்று இலக்குகளை இழந்தது இங்கிலாந்து. ரூட், மொயின் அலி இணை இங்கிலாந்தை சிறிது காப்பாற்றியது. இணைப்பாட்டமாக 62 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரூட். ஸ்ரோக்ஸால் முடிந்தது 18 ஓட்டங்கள். அவரை போல்ட் முறையில் சகிப் அல் ஹசன் வெளியேற்றினார்.

மொயின் அலி, பரிஸ்ரௌவ் இணை சிறிது நிலைபெற்றது. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதத்தைப் பதிவுசெய்தனர். 68 ஓட்டங்களுடன் மொயின் அலியை வீழ்த்தினார் மிராஸ். பரிஸ்ரௌவ்வும் அவரால் வீழ்த்தப்பட்டார். வோக்ஸ், ரசிட் இணை பத்துப் பந்துப்பரிமாற்றங்களுக்கும் மேலாகத் தாக்குப்பிடித்தது.

முதல் நாள் முடிவில் இங்கிலாந்து 258-7 என்ற நிலையில் இருந்தது. வோக்ஸ் 36 ஓட்டங்களுடனும், ரசிட் 5 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷின் சார்பாக மிராஸ் 5 இலக்குகளையும், சகிப் அல் ஹசன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)



# பாக்., மே.இ.தீவுகள் இரண்டாவது ஆட்டம்

பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது. அபுதாபி மைதானத்தில் இலங்கை நேரப்படி மு.ப. 11.30 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகவுள்ளது. தொடரில் மூன்று ஆட்டங்கள். முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்றது. இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற கட்டாயம் தீவுகளுக்கு உள்ளது. மாறாக இந்த ஆட்டத்திலும் பாகிஸ்தான் வெற்றிபெற்றால் அந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றுவது உறுதியாகிவிடும். சமநிலையில் முடிந்தாலும் பாகிஸ்தான் கிண்ணத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்படாது. (ம)

# மீண்டும் மிரட்ட வருகிறது சங்கா, மகேல கூட்டணி

பாகிஸ்தான் பிரீமியர் லீக் தொடரில் விளையாட ஒரே அணியில் ஒப்பந்தம் செய்யப்பட்டனர் இலங்கையின் ஜாம்பவான்களான சங்கா, மகேல.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் பாகிஸ்தான் பிறீமியர் லீக் தொடர் நடைபெறவுள்ளது. லாகூர், பெசாவர், கராச்சி, இஸ்லாமபாத், குவாட்டா ஆகிய ஐந்து முக்கிய நகரங்களின் பெயர்களில் அணிகள் களமிறங்குகின்றன. இலங்கை அணியின் ஜாம்பவான்களான குமார் சங்கக்காரா, மகேல ஜெயவர்தன இருவரும் கராச்சி கிங்ஸ் அணியில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டனர்.

பெசாவர் அணியின் அணித்தலைவராக முதலில் நியமிக்கப்பட்ட அப்ரிடி, தலைமைப் பதவியை தற்போது மேற்கிந்திய தீவுகள் அணியைச் சேர்ந்த டேரன் சமிக்கு கொடுத்துள்ளார். ஆட்ட நிர்ணச் சூதாட்டத்தில் சிக்கிய வீரர்களான சல்மான் பட், முகமது ஆசிப் இருவரும் எந்த அணியினராலும் ஏலத்தில் எடுக்கப்படவில்லை. (ம)






# றிக்சனை கௌரவப்படுத்தினார் கிறிஸ்ரியானோ றொனால்டோ

பிரபல கால்பந்து வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ நரம்புத் தளர்ச்சி நோயால் பாதிக்கப்பட்ட கால்பந்து ஜாம்பவான் பெர்ணாண்டோ றிக்சனுக்கு சம்பியன் லீக்கில் வெற்றிபெற்ற தன்னுடைய ஜெர்சியை பரிசாக கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளார்.

அண்மையில் போலந்தில் நடைபெற்ற ஆட்டமொன்றில் விளையாட றொனால்டோ சென்றிருந்தார்.

அந்த ஆட்டத்தில் மட்ரிட் 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அங்கே கால்பந்து ஜாம்பவனான பெர்ணான்டோ றிக்சனை றொனால்டோ சந்தித் தார். அவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக றொனால்டோ, சம்பியன் லீக் தொடரில் வெற்றிபெற்ற போது எந்த ஜெர்சியை அணிந்திருந்தாரோ, அதை அவருக்கு பரிசாக கொடுத்து கௌரவப்படுத்தினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களமிறங்கவில்லை ஜேம்ஸ் அண்டர்சன்

பங்களாதேஷுக்கு எதிராக நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான அண்டர்சன் இடம்பெறவில்லை. தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் முழுமையாகக் குணமடையாத காரணத்தாலேயே அண்டர்சன் களமிறங்கவில்லை. காயம் சிறியதுதான். அடுத்த மாதம் நீண்ட தொடருக்காக இந்தியாவுக்குச் செல்லவுள்ளோம். எனவே இந்த ஆட்டத்தில் சிறிய காயத்துடன் அவர் களமிறங்கிக் காயம் பெரிதானால் மேலும் பதற்றத்தை அதிகரித்துவிடும். இதனாலேயே அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது என இங்கிலாந்து அணித்தலைவர் குக் தெரிவித்தார். (ம)





# மன்செஸ்டர் சிற்றியை வீழ்த்தியது பார்சிலோனா

ஐரோப்பிய கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்ட மொன்றில் பார்சிலோனா அணி அபார வெற்றியை பதிவுசெய்தது.

ஆட்டத்தில் 17 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி முதல் கோலைப் பதிவுசெய்தார். அதுவே முதல் பாதியின் ஒரே கோலாகவும் அமைந்தது. இரண்டாவது பாதியின் 61 ஆவது, 69 ஆவது நிமிடங்களில் மெஸ்ஸி மேலும் இரு கோல்களைப் பதிவுசெய்தார். ஆட்டத்தில் 70 ஆவது நிமிடங்களில் கிட்டத்தட்ட உறுதியான வெற்றியுடன் பார்சிலோனா விளையாடிக் கொண்டிருந்தது. 89 ஆவது நிமிடத்தில் நெய்மர் மற்றுமொரு கோலைப் பதிவு செய்ய முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது பார்சிலோனா.

பார்சிலோனாவின் பிறிதொரு நட்சத்திர வீரரான சுவாரஸால் கோலெதுவும் பதிவாகவில்லை. ஆனால் அவர் இரு கோல்கள் பதிவாக உதவிபுரிந்தார். (ம)

# சானியா மிர்சா வரலாற்று அடைவு

எண்பது வாரங்கள் முதலிடத்தில் இருந்த இந்திய ரென்னிஸ் வீராங்கனை என்ற வரலாற்று அடைவை ஏற்படுத்தினார் சானியா மிர்சா.

2015 ஆம் ஆண்டு மத்திய பகுதியிலிருந்து பெண்கள் பன்னாட்டு ரென்னிஸ் தொடரில் இரட்டையர் பிரிவில் மிர்சா முதலிடத்தில் இருந்து வருகிறார். இதன் மூலம் அதிக வாரங்கள் முதலிடத்தில் இருந்த வீராங்கனைகளின் பட்டியலில் நான்காவது இடத்திலும் இந்திய வீராங்கனைகளைப் பொறுத்த மட்டில் முதலாவது இடத்தையும் பிடித்தார்.

குறித்த பட்டியலில் முதல் மூன்று இடங்களில் மார்ட்டினா நவரத்திலோவா (181 வாரங்கள்), காரா பிளாக் (145 வாரங்கள்) மற்றும் லிசேல் ஹூபர் (134 வாரங்கள்) ஆகியோர் உள்ளனர். (ம)



# எனது சாதனைகளை தகர்ப்பதற்கு அஸ்வின், ஜாசிருக்கு வாய்ப்புக்கள்

*ஏற்கிறார் முரளி*

தனது சாதனைகளை முறியடிக்க அஸ்வின், ஜாசீருக்கு அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன எனத் தெரிவித்தார் முரளிதரன்.

டெஸ்ட் அரங்கில் 800 இலக்குகளைக் கைப்பற்றி எவரும் எட்ட முடியாத இடத்தில் இருக்கிறார் இலங்கை அணியின் முன்னாள் சுழல் ஜாம்பவானான முரளிதரன். இவர் ஓய்வு பெற்ற பிறகு முரளியின் இடத்தை நிரப்புவதற்கு சரியான வீரர்கள் இன்னும் இலங்கை அணிக்கு கிடைக்கவில்லை. உலக அளவிலும் அவ்வளவு இலகுவில் முரளியின் சாதனையை தகர்த்துவிட முடியாது என்று கருதப்படும் நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். எனது சாதனையை முறியடிக்க இரு வீரர்களுக்கு வாய்ப்பு உள்ளதாகவே கருதுகிறேன். இந்திய அணியின் சுழல் வீரரான அஸ்வின், பாகிஸ்தான் அணியின் சுழல் வீரரான ஜாசிர் ஷா. ஆகியோரே என்னில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள வீரர்கள். அஸ்வின் சிறப்பாகச் செயற்படுகிறார். அவருடன் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியுடன் விளையாடிய அனுபவம் உள்ளது. முதலில் அவர் ஆடுகளத்தின் தன்மையை அறிந்து கொண்டு அதற்கு தகுந்தாற் போல் துல்லியமாக பந்து வீசும் திறமை கொண்டவர். அவர் தன்னம்பிக்கை கொண்டவர். பாகிஸ்தான் வீரரான ஜாசிர் ஷாவும் சிறப்பாக பந்துவீசும் வல்லமை பெற்றவர். ஆசிய ஆடுகளங்களில் அவர் சிறப்பாகச் செயற்படுகிறார். இவர்கள் இருவரும் தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்பட்டால் எனது சாதனையைத் தகர்க்க முடியும் என முரளி மேலும் தெரிவித்தார். (ம)




# கபடி உலகக்கிண்ண அரையிறுதிகள் இன்று

கபடி உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. மூன்றாவது கபடி உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவின் அகமதாபாத்தில் நடைபெற்று வருகிறது. தொடர் அரையிறுதிக் கட்டத்தை எட்டியுள் ளது. அரையிறுதிகள் இரண்டும் இன்று நடைபெறவுள்ளன. இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் தாய்லாந்து அணி இந்தியாவுடன் மோதவுள்ளது. மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் ஈரான் அணி தென் கொரியா அணியுடன் மோதவுள்ளது. (ம)

# வென்றதைவிட தோற்றதே அதிகம் இது இலங்கை அணியின் நிலமை

பன்னாட்டு ஒருநாள் கிரிக்கெட் ஆட்டங்களில் இலங்கை அணி இதுவரை விளையாடிய ஒட்டுமொத்த ஆட்டங்களின் அடிப்படையில் அந்த அணி வென்றதை விட தோற்றதே அதிகமுள்ளது.

இதன்படி இலங்கை அணி 777 ஆட்டங்களில் விளையாடி 365 வெற்றிகளைப் பெற்றுள்ளது. 373 ஆட்டங்களில் தோல்வியடைந்துள்ளது. 5 ஆட்டங்கள் சமநிலையில் முடிந்தன. 34 ஆட்டங்களுக்கு முடிவில்லை.



ஆஸ்திரேலியாவே அதிக வெற்றிச் சராசரியுடன் உள்ளது. அந்த அணி 888 ஆட்டங்களில் விளையாடியுள்ளது. 547 வெற்றிகளைப் பெற்றுள்ளது. 300 தோல்விகளைச் சந்தித்துள்ளது. 9 ஆட்டங்கள் சமநிலையாகின. 32 ஆட்டங்களுக்கு முடிவில்லை.

தென்னாபிரிக்கா 584 ஆட்டங்களில் விளையாடி 348 வெற்றிகளையும், 194 தோல்விகளையும், 6 சமநிலைகளையும் கண்டுள்ளது. 16 ஆட்டங்களுக்கு முடிவில்லை.

மூன்றாவது அதிகூடிய வெற்றிச் சராசரியுடன் பாகிஸ்தான் உள்ளது. அந்த அணி 866 ஆட்டங்களில் விளையாடி 457 வெற்றிகளையும், 383 தோல்விகளையும், 8 சமநிலையையும் சந்தித்துள்ளது. 18 ஆட்டங்களுக்கு முடிவில்லை.

இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. அந்த அணி 900 ஆட்டங்களில் விளையாடியது. (நேற்று நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஆட்டம் இந்தச் செய்தியில் தவிர்க்கப்பட்டுள்ளது.) 455 வெற்றிகளையும் 399 தோல்விகளையும் 7 சமநிலைகளையும் சந்தித்துள்ளது. 39 ஆட்டங்களுக்கு முடிவில்லை.

அதிகப்படியான வெற்றிச் சராசரிகளில் ஐந்து முதல் எட்டு வரையிலான இடங்களில் முறையே மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து, இலங்கை, நியூசிலாந்து ஆகிய அணிகள் உள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மத்தி. - ஏஞ்சல் இறுதியில்

யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணிகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ். மத்திய கல்லூரி, ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை என்பன இறுதிக்குத் தகுதி பெற்றன.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இந்த அரையிறுதிகள் நடைபெற்றன. மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதியது. 67:63 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ். மத்திய கல்லூரி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதியது. 60:48 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி. (ம-23)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLTES
சனி ஞாயிறு
8.30-4.00 மணிவரை
Full time Diploma
சனி, ஞாயிறு 9.00-4.00pm
வட. மாகாண விவசாயப் போதனாசிரியர்
ஞாயிறு 2.00-5.00
வட. மாகாண ஆசிரியர்
ஞாயிறு 10.00-3.00
அதிபர் EB
சனி 1.00
ஏனைய சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு
076 6883394
021 2223382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

# இளவாலை மத்தி. இறுதிக்குத் தகுதி

புத்தூர் சோமஸ்கந்தன் வி.கழகத்தின் கரப்பந்தாட்டத் தொடரில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதிக்குத் தகுதி பெற்றது இளவாலை மத்திய விளையாட்டுக் கழகம்.

யாழ். மாவட்ட ரீதியாக நடைபெற்றுவரும் இந்தத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்திலேயே இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது. 5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது இளவாலை மத்தி. (ம-108)

வீடு விற்பனைக்கு
யாழ் நகரில் அமைதியான சூழலில் வீடு வாடகைக்கு உண்டு.
T:P:- 077 367 3309



# இந்தியாவுக்கு தக்க பதிலடி; கவனித்து அனுப்பியது நியூசி.

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது நியூசிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஓட்டமெனையும் பெறவிடாது குப்திலை வெளியேற்றி அரங்கத்தை அமர்க்களப் படுத்தினார் யாதேவ். லாதம், வில்லியம்சன் இணை நீண்டு நிலை பெற்றது. இணைப்பாட்டமாக 120 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லாதம். ரெய்லர், அண்டர் சன் வில்லியம் சனுடன் சிறுசிறு இணைப்பாட்டங்களை அரங்கேற்றினர். சதம் கடந்தார் வில்லியம்சன். ஒரு கட்டத்தில் 203-3 என்றிருந்த நியூசிலாந்து, வில்லியம்சனின் ஆட்டமிழப்புடன் அடுத்தடுத்து இலக்குகளை இழந்து 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 242 ஓட்டங்களையே குவித்தது. அதிகபட்சமாக வில்லியம்சன் 118 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பில் பும்ரா, மிஸ்ரா இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்தியாவுக்கு ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. பந்துப்பரிமாற்றத்துக்கு மூன்று ஓட்டங்கள் என்ற சராசரியிலேயே நியூசிலாந்து துடுப்பெடுத்தாடியது. 15 ஓட்டங்களுடன் ரோகித் சர்மாவை வீழ்த்தினார் போல்ட். கோக்லியால் முடிந்தது 9 ஓட்டங்கள். ரகானே, பாண்டே இருவரும் திருப்தியளிக்கவில்லை. டோனி, கேசர் யாதேவ் இணை நிலைபெற்றது. 41 ஓட்டங்களுடன் கேசர் யாதேவ்வும், 39 ஓட்டங்களுடன் டோனியும் ஆட்டமிழந்தனர். 183 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்தது இந்தியா. பாண்டியா பின்வரிசையில் அதிரடி காட்டினார். வெற்றிக்கு அருகில் இந்தியாவை அழைத்து வந்தார். மேலதிகமாக 10 ஓட்டங்கள் சமநிலைக்குத் தேவை என்ற நிலையில் பாண்டியா ஆட்டமிழக்க பும்ரா வந்த வேகத்தில் போல்ட் ஆனார். 6 ஓட்டங்களால் தோல்வியடைந்தது இந்தியா.

பந்துவீச்சில் நியூசிலாந்தின் சார்பில் சவுத்தி 3 இலக்குகளையும், போல்ட், குப்தில் இருவரும் தலா 2 இலக்குகளையும், ஹென்றி, சான்நெர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

அழியாத நினைவுகளுடன்
ஆண்டு இரண்டில்...

அமரர்
குமாரசூரிய இராஜவடிவேல்
சந்திரகாசன் B.A (HONS)-J.P
(அபிவிருத்தி உத்தியோகத்தர் -காணி அபிவிருத்தி திணைக்களம்-கிளிநொச்சி

உயிராகி உலகில்
02.10.1982

துயராகி நினைவில்
21.10.2014



திதி: ஐப்பசி அமரபக்க திரயோதசி

நித்தம் நாம் பார்த்துவந்த நின் வதனம்
போனதெங்கே!
பக்கமெல்லாம் தினம் ஒலித்த பாசக்குரல்
மறைந்தெங்கே!
இத்தனைநாள் ஆனதையா இன்னும்
நீ வரவில்லை இனியவனே!
எங்கு சென்றாய் இன்னும் தான் புரியவில்லை
உற்றாரும் உடன்பிறந்த உன்னருமைச்
சகோதரரும்
ஆறாத கண்ணீரில் வாட இங்கு வைத்துவிட்டு
பெற்றவனைப் பார்க்கவென பேசாது
போனாயோ!
கண்ணீரில் நாம் கரைந்து காலங்கள்
கடந்தாலும்
ஒருநாளும் மறவாது உன் நினைவு
கண்மணியே!

(c 25949) (16,19)

சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

நீங்காத நினைவுகளுடன்
அன்புச் சகோதரர்கள், குடும்பத்தினர்.

# புத்தரை அவமதித்தாரா ரொனால்டோ?

போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான கிறிஸ்ரியானோ ரொனால்டோ தனது முகப்புத்தக விருப்புப் பக்கத்தில் புத்தர் சிலை ஒன்றின் அமைவிடத்தின் (தொட்டியின்) மேல் கால் வைத்துக்கொண்டு நிற்பது போன்ற படத்தைப் பகிர்ந்துள்ளார். இதனால் அவர் புத்தர் சிலையை அவமதித்தார் என பலரும் கருதுகின்றனர். ஏராளமானவர்கள் குறித்த விடயம் தொடர்பாக தமது அதிருப்தியை, ரொனால்டோ பதிவிட்ட படத்தின் கீழ் பதிவுசெய்து வருகின்றனர். (ம)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org